கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–13, இதழ் – 9 Volume - 13, Issue - 9	ஆவணித் திங்கள் August 2022	விலை ரூ. 25/– Price Rs. 25/-	ஆண்டு சந்தா ரூ. 300/– Annual Subscription Rs. 300/-	தமிழ் மாத இதழ் Tamil Monthly

Dr. R.PRAVEEN BABU,
M.D.(Gen.Med),DNB(Cardio)
Cardiologist (Reg. No.87024)

Dr.A.MANJULA DEVI,
M.B.B.S., D.A., FIC(Cardio)
Physician & Heart Specialist
(Reg. No.88222)

Dr.பிரவீன்

இருதய சிகிச்சை மையம்

சிறப்பம்சங்கள்	FACILITIES
இருதய நோய் சிகிச்சை	CARDIAC CARE
சர்க்கரை நோய் சிகிச்சை	DIABETIC CARE
ஆஸ்துமா நோய் சிகிச்சை	ASTHMA CARE
எக்கோ	ECHO
டி.எம்.டி.	TMT (TREAD MILL TEST)
இ.சி.ஜி.	ECG
ஹோல்டர் மானிட்டர்	HOLTER MONITOR
சிறப்பு இதய பரிசோதனை	SPECIAL CARDIAC TESTS
லேப் (ஆய்வகம்)	LAB
மருந்தகம்	PHARMACY

| 58/32 | Mahadhana Street |
| MAYILADUTHURAI | 609001|
For APPOINTMENT : 90037 36150 ; 63834 59838

| Hotel Noble Nest Building | 23 | Bharathiyar Street |
| Thala Theru | KARAIKAL | 609602 |
For APPOINTMENT : 90878 36150 ; 91235 69279

SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM
SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com

S.SELVAKUMAR - C.E.O

திருவிளையாட்டம் நண்பர்கள் அமைப்பு
5வது கூடி மகிழும் விழா : 05-06.2022

Traditional Identity NOW AT T. Nagar
மாயவரம்
ARC
KAMAATCHI
JEWELS
ARC SINCE 1884
1884 முதல்... தொடரும் தரம் நம்பிக்கை நாணயம் கைராசி
76வது சுதந்திர தின வாழ்த்துக்கள்
உங்கள் வாழ்வில் ஒரு அங்கமாய்... மின்னும் தங்கமாய்...
6 மாதத்தில் முதிர்வு அடையும்
வரன்மகள் காமாட்சி
தங்கநகை சேமிப்புத் திட்டம்
தங்க ரதம் வெள்ளி ரதம் வாகனம் கவசம் கலசம் மற்றும் அனைத்து கோயில் வேலைகள் சிறந்த முறையில் செய்ய நூற்றாண்டை கடந்த பாரம்பரியம் மிக்க ஸ்தாபனம்
Mayiladuthurai: 24/4, Bajanai Madam Street, Near New Bus Stand, Mayiladuthurai
Thanjavur: 11A, South East Rampart, Thanjavur Chennai: 151, G.N. Chetty Road, T Nagar, Chennai
For Orders / Enquiry : +91 98429 98826 | 9486718187
Visit www.arckamaatchi.com

மணமகன் தேவை

பெயர் **செல்வி புவனா .ஜி**
படிப்பு B.E.
வேலை Programmer Analyst,
CTS, Bangalore
பிறந்த தேதி 12.08.1996
உயரம் 5'-2"
நட்சத்திரம் பூசம்
கோத்திரம் விளந்துடா
பூர்வீகம் ராதாநல்லூர்
தகப்பனார் **குணசேகரன் .எம்,** (Group M Retd.)
தாயார் **கலைச்செல்வி .டி,** (இல்லத்தரசி)
(மாப்படுகை)
முகவரி 17, ஸ்ரீ நிலையம்,
36th 'C' Cross, 19th Main,
HBR Layout, பெங்களூரு – **560 043.**
Cell : 94814 70136 / 98866 55496

பெயர் **செல்வி இரா. கண்மணி**
படிப்பு B.Tech (IIT), MBA / PGDM (IIMK)
வேலை Manager, Chain Distribution,
Asian Paints, Hyderabad
Rs. 26 Lakhs / PA
பிறந்த தேதி 29.09.1994
உயரம் 5'-4"
நட்சத்திரம் புனர்பூசம்
கோத்திரம் காருட
பூர்வீகம் நாங்கூர், சிர்காழி
தகப்பனார் **D. இராஜசேகர்,** M.E.,
Zonal Officer, Chennai Corporation
தாயார் **Dr. K. பூம்பாவை,** MBBS., DCH.,
முகவரி **Dr. K. தர்மலிங்கம்,**
13, அம்பாடி தெரு, கோட்டூர்புரம்,
சென்னை – **600 085.**
Cell : 90802 34197
விருப்பம் நல்ல குணமுள்ள வரன். வயது வித்தியாசம் 4 ஆண்டுகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
குறிப்பு மாப்பிள்ளை வேலை செய்யும் இடத்திற்கு பெண் வேலையை மாற்றிக்கொள்ளமுடியும்.

மணமகன் தேவை

பெயர் செல்வி M. சரண்யா
படிப்பு B.E. (CSE)
பிறந்த தேதி 23.10.1993
உயரம் 165 cm
நட்சத்திரம் திருவோணம்
கோத்திரம் குழவிட
பூர்வீகம் மணிக்கிராமம்
தகப்பனார் முத்துக்குமார் .வெ
இடைநிலை ஆசிரியர் – கன்னியாகுடி
தாயார் ராதா .மு
முகவரி 3/259, மெயின் ரோடு,
மணிக்கிராமம்,
சீர்காழி Tk.,
மயிலாடுதுறை DT – 609 114.
Cell : (W) 94448 81048 / 73392 20541
விருப்பம் சமபடிப்பு, பணியில் உள்ள வரன்.

பெயர் செல்வி கு. அபர்ணா தேவி
படிப்பு B.E. (ECE)
வேலை MP&L Analyst, Ford Global Technology & Business Center, Sholinganallur, Chennai
Rs. 8.10 Lakhs / PA
பிறந்த தேதி 26.01.1997
உயரம் 5' - 3"
நட்சத்திரம் மகம்
கோத்திரம் தென்னவராய
பூர்வீகம் வேள்விமங்கலம்
தகப்பனார் சு. குமார்
உரிமையாளர் – VSA Diagnostics, தாம்பரம்
தாயார் மு. புவனேஸ்வரி
இடைநிலை ஆசிரியர், அரசு உதவி பெறும் பள்ளி, தாம்பரம்
முகவரி A306, Casagand Miro,
Vandalur - Walajabad Road,
Urapakkam Link Road,
Mannivakkam, Chennai - 600 048.
Cell : 87788 17011, 94443 54949, 94440 33590
விருப்பம் நற்பண்புகளையுடைய பொருத்தமான வரன்.

தி கார்காத்தார் அசோஷியேசன் (மெட்ராஸ்)

சென்னை கார்காத்தார் சங்கம்

1922 - 2022

சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழா வருகின்ற 2023 ஆம் வருடம் ஜனவரி மாதம் 8–ந் தேதியன்று ஞாயிற்றுக்கிழமை (08–1–2023) காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மிகவும் சிறப்புடன் கோலாகலமாக நடைபெற உள்ளது. நூற்றாண்டு விழாவில் கார்குலத்தை சார்ந்த முன்னோடிகள், தொழில் அதிபர்கள், சான்றோர் பெருமக்கள், இளைஞர்கள், மகளீர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு நூற்றாண்டு விழாவை சிறப்பிக்க உள்ளனர். இவ்விழாவில் தமிழகம் மற்றும் புதுவையை சார்ந்துள்ள நம் சொந்தங்கள் அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

நூற்றாண்டு விழா நடைபெறுமிடம்

SVV கல்யாண மண்டபம்

107, 2.A.1, பூந்தமல்லி நெடுஞ்சாலை, பூந்தமல்லி, சென்னை–600056.

(சவீதா பல் மருத்துவ கல்லூரி அருகில் மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனை எதிரில்).

– **கைலை. சண்முகம்**

செயலாளர்

"கார்காத்தார் ஒப்புரவு" கட்டண விபரங்கள்

ஆண்டு சந்தா	ரூ.	300/-
ஆயுள் சந்தா (12 ஆண்டுகளுக்கு மட்டும்)	ரூ.	2000/-
கலர் (¼) கால் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ.	1500/-
கலர் (½) அரைப் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ.	3000/-
கலர் முழு பக்கம்	ரூ.	6000/-
பின் அட்டை வெளியுறம்	ரூ.	7000/-
மணமகன் மணமகள் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு)	ரூ.	500/-
கருப்பு வெள்ளை (¼) கால் பக்கம்	ரூ.	750/-
கருப்பு வெள்ளை (½) அரைப் பக்கம்	ரூ.	1500/-
கருப்பு வெள்ளை முழுப் பக்கம்	ரூ.	3000/-

இதழின் உள்ளே....

பேசும் நூல்கள்..... 13

நட்சத்திரங்களும் மரங்களும்..... 15

உண்ணா நோன்பு.....17

சங்கப் பலகை 19

அறுபதிலும் வாழ்க்கையைத் துவங்க முடியும்....25

மணமகன் / மணமகள் தேவை..... 38–41

சிறுவர் பகுதி..... 42–45

சங்க நிகழ்வுகள் 49

கார்காத்தார் ஒப்புரவு

கார்காத்தார் சங்கம் (சென்னை)

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,

சூளைமேடு, சென்னை – 600 094.

தொலைபேசி : 044–2472 4882

ஆயுள் சந்தா ரூ. 2000/-

ஆண்டு சந்தா ரூ. 300/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :

மீ. நடராஜன்

மயூர் பிரிண்டர்ஸ்

எண். 1/7, கோபால் தெரு,

சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,

சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

அனைவருக்கும் சுதந்திரதின வாழ்த்துகள்

ஆகஸ்டின் சிறப்பும்

தோன்றிய வரலாறும்

ஆகஸ்ட் மாதத்தில், நண்பர்கள் தினம் 5, ஜப்பான் மீது குண்டு வீசப்பட்ட நாள் 6, உலக இளைஞர் தினம் 12, சர்வதேச இடதுகைப் பழக்க முள்ளவர்கள் தினம் 13, பாகிஸ்தானின் சுதந்திர தினம் 14, இந்தியாவின் சுதந்திர தினம் 15, உழைக்கும் பெண்கள் தினம் 15, உலக மனிதநேய தினம் 19, உலகப் புகைப்பட தினம் 19, சென்னை மாநகரம் பிறந்த தினம் 22, – தேசிய விளையாட்டு தினம் 29, சிறுதொழில் தினம் 30, போன்ற பல சிறப்பான நாட்கள் இருந்தாலும் நமது நாட்டின் சுதந்திர தினமான ஆகஸ்ட் 15, மிக முக்கியமான நாள் ஆகும்

அதே போல் இந்த ஆகஸ்ட் மாதத்தில் அரசியல், கல்வி, கலை போன்ற பல துறைகளிலும் உள்ள பலர் பிறந்த தினங்கள் வருகின்றன.

உதாரணமாக முன்னாள் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா ஆகஸ்ட் 4லும், திரு முருக கிருபானந்த வாரியார் ஆகஸ்ட் 5லும், கல்வியாளர் ராஜா சர் முத்தையா 5லும், வேளாண் விஞ்ஞானி எம் எஸ் சுவாமினாதன் 7லும், விண்வெளி விஞ்ஞானி விக்ரம் சாராபய் ஆகஸ்ட் 12 லும், முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜிவ் காந்தி ஆகஸ்ட் 20 லும் பிறந்துள்ளனர்

இம்மாதத்தில் நிகழ்ந்த சில முக்கிய நிகழ்வுகள்

1.8.1971 – அப்போலா விண்கலம் நிலவில் இறங்கி ஒரு முக்கிய பாறையைக் கண்டுபிடித்த நாள்.

3.8.1954 – இந்தியாவில் அணுசக்தியைப் பயனுள்ள வகையில் உபயோகப்படுத்துவதற்காக அணுசக்தி கமிஷன் அமைக்கப்பட்டது.

6.8.1945 – அமெரிக்க விமானப்படை விமானம் ஜப்பானின் ஹிரோஷிமா நகரத்தின் மீது முதல் அணுகுண்டை வீசியது. (மூன்று நாட்களுக்குப் பிறகு

(9–8–1945) நாகசாகி நகரத்தின் மீது மற்றொரு அணுகுண்டு வீசப்பட்டது.

10.8.1963 – காமராஜர் திட்டம் (மூத்த அரசியல் தலைவர்கள் பதவியை விட்டு விலகி கட்சிப்பணியாற்றல்) அறிமுகப்படுத்தப்பட்டது..

11.8.2000 – ஜார்கண்ட் மாநிலம் தோற்றுவிக்கப்பட்டது.

15.8.1947 – இங்கிலாந்து ஆட்சியிலிருந்து இந்தியா விடுதலை பெற்றது.

பிரதமராக ஜவஹர்லால் நேருவும், குடியரசுத் தலைவர் ராஜேந்திரப்பிரசாத்தும் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்

15.8.1972 – இந்தியாவில் தபால் குறியீட்டு எண் (பின்கோடு) முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

15.8.1982 – இந்தியத் தொலைக்காட்சி தேசிய அளவில் முதல்முறையாக வண்ண ஒளிபரப்பைத் தொடங்கியது.

இத்தகைய சிறப்புகள் கொண்ட ஆகஸ்ட் மாதம் தோன்றிய வரலாறு

ஆறாவது என்னும் பொருள்படும் செக்சிடிலீஸ் (Sextilis) என்னும் லத்தீன் மொழிச் சொல்லே துவக்கத்தில் ரோமன் காலண்டரில் ஆகஸ்ட் மாதத்தின் பெயராகப் பயன்பட்டது. காரணம் கி.மு 753ல் ரோமுலஸின் ஆட்சியில் 10 மாதங்களைக் கொண்ட ரோமானிய நாட்காட்டியில் மார்ச் மாதம் முதலாவது மாதமாக இருந்தது. அந்த வரிசையில் ஆகஸ்ட் மாதம்ஆறாவது

நூமா பொம்பிலியஸின் ஆட்சியில் – அதாவது கி.மு. 700ம்ஆண்டில்முதலாவதாகஇருந்தமார்ச்மாதத்திற்கு முன்னதாக ஜனவரி, பிப்ரவரி என இரண்டு மாதங்கள் இணைக்கப்பட்டன. இதனால் மார்ச் மூன்றாவது மாதமாகியது. ஆகஸ்ட் எட்டாவது மாதமானது. அப்போது ஆகஸ்ட் மாதத்திற்கு 29 நாட்கள்தான் இருந்தன.கி.மு 45ம் ஆண்டில் ஜூலியஸ் சீஸர் 'ஜூலியன் நாட்காட்டி'யை அறிமுகப்படுத்தியபோது மேலும் 2 நாட்கள் சேர்க்கப்பட்டு 31 நாட்கள்ஆனது.

கி.மு 8ம் நூற்றாண்டில் அலெக்சாண்ட்ரியா நகரை வென்ற ரோமானிய மன்னர் அகஸ்டஸ் சீஸரின் சிறப்பை வெளிப்படுத்தும் விதமாக 'செக்சிடிலீஸ்' என அழைக்கப்பட்டு வந்த இம்மாதத்திற்கு ஆகஸ்ட் எனப் பெயரிடப்பட்டது.

நன்றி – முத்தாரம் இதழ்

ஓர் அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவிற்கு அனுப்பபடும் சங்க செய்திகள், கட்டுரைகள், விளம்பரங்கள் போன்றவைகளை ஒவ்வொருமாதமும் 25ம் தேதிக்குள் அனுப்பபடவேண்டும். அதற்கு பிறகு பெறப்படும் தகவல்கள் அடுத்துவரும் இதழ்களில் தான் பிரசுரிக்கப்படும்.

- **சங்க செய்திகள் / கட்டுரைகள் வெள்ளைதாளில் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக, இடைவெளி விட்டு, கையெழுத்து புரியும்படி (தட்டச்சு செய்தால் நல்லது) சுருக்கமாக எழுதி அனுப்பவும்.**
- **சங்க செய்திகள் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்கமுத்திரையுடன் அனுப்ப படவேண்டும்.**
- **செய்திகள் மற்றும் கட்டுரைகளை கூட்டவோ / குறைக்கவோ, நிராகரிக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆசிரியரின் முடிவே இறுதியானது.**
- **E-mail-ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.**
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் மட்டுமே அனுப்பப்படவேண்டும். (வங்கி கணக்கில் பணம் செலுத்துவது ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.)**
- **செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.**

அனைத்து தபால்களையும **கார்காத்தார் ஒப்புரவு,**
எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

- கார்காத்தார் ஒப்புரவு

சென்னை கார்காத்தார் சங்கம்

நூற்றாண்டு விழா அறிவிப்பு

சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழா டிசம்பர் மாதம் சென்னையில் மிக சிறப்பாக நடைபெற உள்ளது. விழாவினை சிறப்பிக்கும் வகையில் மலர் வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. விழா மலரில் கட்டுரைகள், கவிதைகள், சங்க நிகழ்வுகள், நமது குல சான்றோர்கள் பற்றி சிறப்புகள் மற்றும் சங்கத்தினை பற்றிய சிறப்பு செய்திகளை தொகுத்து வெளியிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது.

அனுப்பவேண்டிய கடைசி தேதி 21.08.2022.

அனுப்ப வேண்டிய முகவரி

சென்னை கார்காத்தார் சங்கம்

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு, சூளைமேடு, சென்னை – 600 094.

இதில் பங்கு பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவும் :

திருமதி. **வனஜா இளங்கோவன்,** மலர்க்குழு தலைவர்,

Mobile : 63692 91286, E-mail : kkam100malar@gmail.com

- கைலை. சண்முகம், செயலாளர்.

சென்னை கார்காத்தார் சங்கம்

நூற்றாண்டு விழா அறிவிப்பு

சென்னை கார்காத்தார் சங்கத்தின் நூற்றாண்டு விழா வருகின்ற டிசம்பர் மாதம் சென்னையில் மிக சிறப்பாக நடைபெற உள்ளது. விழாவினை சிறப்பிக்கும் வகையில் மலர் வெளியிட ஏற்பாடுகள் செய்யபட்டு வருகின்றன. விழா மலரில் விளம்பரம் செய்ய கீழ்கண்ட கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கலர் முழுபக்கம்	–	ரூ.	10,000/-
கலர் அரைபக்கம்	–	ரூ.	5,000/-
கலர் கால்பக்கம்	–	ரூ.	2,500/-
கருப்பு வெள்ளை முழுபக்கம்	–	ரூ.	5,000/-
கருப்பு வெள்ளை அரைபக்கம்	–	ரூ.	2,500/-
கருப்பு வெள்ளை கால்பக்கம்	–	ரூ.	1,500/-

விளம்பரம் சம்பந்தமாக தொடர்பு கொள்ள

திரு. **கோ. தியாகராஜன்,** விளம்பரக்குழு தலைவர்

Mobile : 90429 57792, E-mail : kkam100advt@gmail.com

- கைலை. சண்முகம், செயலாளர்.

கற்பனை (IMAGINATION)

A. RAJARETHINAM, PORUR,
CHENNAI. PH: 9444224366

உலகில் ஏற்பட்டுள்ள எல்லா முன்னேற்றங்களுமே, மனிதனின் கற்பனையிலிருந்து உற்பத்தியானவை. ஒரு ஓவியன் ஒரு ஓவியத்தை உண்டு பண்ணுகிறான் என்றால் அது அவனது கற்பனையில் முதலில் தோன்றுகிறது.

ஜான் வானமேக்கர் என்ற ஒரு சாதாரண மனிதர் தன்னுடைய கற்பனையில் பெரிய கோடீஸ்வரர் ஆக வேண்டும் என்று நினைக்கிறார். பிஸினஸ் ஆரம்பிக்கப் போதிய பணமில்லை. அங்கும் இங்கும் கேட்டு வாங்கி பிஸினஸ் ஆரம்பித்து கடுமையாக உழைத்து பெரிய பிஸினஸ் நிறுவனத்தை ஏற்படுத்தி சிறந்த கோடீஸ்வரர் ஆகிறார். இது அவரது கற்பனையின் விளைவு.

ஒருவர் பழைமையான வியாபார முறை, பழக்க வழக்கம் இவற்றைப் பார்த்து சிந்தனை செய்து அதில் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு, புதிய முறைகளையும் அத்துடன் சேர்த்து ஆரம்பிக்கும் நிறுவனங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை ஆகிவிடுகின்றன.

சிலருக்கு சாதனையை நிகழ்த்த வேண்டும் என்ற எண்ணம் உறுதியாக இருக்கலாம். தொழிலை ஆரம்பிக்கும் தைரியமும் இருக்கலாம். தலைமைப் பண்புகளும் இருக்கலாம். ஆனால் கற்பனை என்ற சக்தி இல்லை என்றால் அவர்களது திறமைகள் வீணாகிவிடும். அவர்களை உற்சாகப்படுத்தும் சக்தி கொஞ்சமும் இருக்காது. கற்பனையில்தான் எல்லாம் உருவாக்கப்படுகின்றன. பின்னர் அவை செயல் வடிவம் பெறுகின்றன. கற்பனை என்பது ஒரு தொழிலை ஆரம்பிக்கும் போதும் துணை புரியும். அதை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கும் துணை புரியும்.

கிலேரன்ஸ் சான்டர்ஸ் என்பவர் ஒரு பெரிய கோடீஸ்வரர். அவர் வெற்றி அடைந்த கதையை இங்கு பார்ப்போம். சான்டர்ஸ் ஒரு மளிகைக் கடையில் உதவியாளராக வேலை செய்து வந்தார். அவர் சாப்பிடுவதற்காக ஒரு காபிடோரியாவுக்குச் சென்று க்யூவில் நின்றார். கொஞ்ச நேரம் ஆனவுடன் அவரது முறை வரும் போது உணவை வாங்கிக் கொண்டு போய் சாப்பிட்டார். அப்போது அவரது கற்பனை வேறுவிதமாக செயல்பட்டது. மளிகைக் கடையை மாற்றி அமைத்து, மக்கள் ஒரு கூடையை எடுத்துக்கொண்டு உள்ளே போய் தனக்கு வேண்டியவற்றை தானாக எடுத்துப் போட்டுக்கொண்டு வெளியே போகும் போது பில் போட்டு பணம் கட்டி சென்றால் என்ன என்று கற்பனை செய்தார். இந்த முறையில் யாரும் காத்திருக்க வேண்டியதில்லை. குறைந்த எண்ணிக்கையில் சேல்ஸ் அஸிஸ்டண்டுகளை வைத்து, நிறைய வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யலாம். அதிக லாபம் பெறலாம் என்று எண்ணினார். பிக்ளி – விக்ளி என்ற மளிகை வியாபார ஸ்டோரை அவரது கற்பனையின்படி ஆரம்பித்தார். நாளடைவில் பெரிய கோடீஸ்வரர் ஆனார். சிறிய விஷயம்தான். ஆனால் அவரது வாழ்வில் பெரிய மாறுதலை ஏற்படுத்தியது. இது அவரது கற்பனையின் சக்தி.

உல்வொர்த் என்பவர் ஒரு வியாபார ஸ்டோரில் சேல்ஸ் உதவியாளராக வேலை செய்து வந்தார். அவரது கம்பெனி நிர்வாகி ஒரு நாள் "நிறைய பொருட்கள் வெகு நாட்களாக விற்காமல் கிடக்கின்றன. அவற்றை எல்லாம் சேர்த்து கொண்ட போய் குப்பைக் கூடைகளில் போட்டுவிடலாம்" என்று கூறினார். அப்போது உடல் வொர்த் அவருக்கு ஒரு அபிப்ராயம் கூறினார். எல்லா விற்காதப் பொருள்களையும் எடுத்து தனியாக ஒரு இடத்தில் வைத்து அதன் மேல் 'எதை எடுத்தாலும் 10சென்ட்' என்று எழுதி வைக்கலாம் என்று கூறினார். அந்த நிர்வாகி அப்படியே செய்தார். ஒரு வாரத்தில் எல்லா பொருள்களும் விற்பனை ஆகிவிட்டன. இடமும் சுத்தமானது. பணமும் வந்தது. இது உல்வொர்த்தின் கற்பனை.

தாமஸ் ஆல்வா எடிசன் தனது கற்பனையின் சக்தியால் பல உலக சாதனைகளைப் படைத்தார். அவரது கண்டு பிடிப்புகள் இன்று உலகில் மனித வாழ்க்கை முறையையே மாற்றி அமைத்திருக்கின்றன.

நீங்கள் எங்கு சென்றாலும், ஒரு வித்தியாசமான, நல்ல அம்சங்களைப் பார்த்தால், உடனே ஒரு பாக்கெட் புத்தகத்தில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அது தான் உங்களுடைய ஐடியா ஸ்டோர்ஸ். அதை அடிக்கடிப் படித்துப் பாருங்கள். ஏதாவது ஒரு செயலில் உங்களுக்கு கற்பனை தோன்றினால் அதையும் எழுதிக் கொள்ளுங்கள். உங்கள் ஐடியா ஸ்டோரும், உங்கள் முன்னேற்றத்துக்கு கை கொடுத்து உதவும்.

பல சாதனையாளர்கள் வெற்றி அடைந்தது இந்த முறையில்தான். ஆகவே முன்னேறுபவர்களைக் கவனியுங்கள். உங்கள் கற்பனா சக்தியை உபயோகப்படுத்துங்கள். நிச்சயம் வெற்றி அடையலாம்.

இந்த கட்டுரை எழுத்தாளர் எழுதியுள்ள வெற்றிக்கு மிக அருகில், வெற்றி பின் தொடர, வெற்றி ரகசியங்கள், வெற்றி கையுறல், வெற்றியின் அலை ஓசை, Spoken English for your success என்ற புத்தகங்களைப் படித்தால் திறன் மேன்பாடு அடையலாம்.

பேசும் நூல்கள்

Dr. D. Kalyanakumar, Truchy-18.

மியூசிக் லைப்ரரி. மூவி லைப்ரரி, டேட்டா லைப்ரரி, டிஜிட்டல் லைப்ரரி... இப்படி எத்தனையோ லைப்ரரிகளைப் பார்த்திருப்போம். கேள்விப்பட்டிருப்போம். ஹியூமன் லைப்ரரி என்கிற மனித நூலகம் பற்றித் தெரியுமா? மனித நூலகம் என்பது மனிதர்களே புத்தகங்களாகச் செயல்படும் நூலகம். இந்த மனித நூலகம் நமக்கு வேண்டுமானால் புதியதாக இருக்கலாம். ஆனால், உலகின் முதல் மனித நூலகம் டென்மார்க்கின் கோபன்ஹேகன் நகரத்தில் 2000–ம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டிருக்கிறது. மக்களிடம் சமூகத் தொடர்பில் நிலவும் பாரபட்சங்களை எதிர்த்துச் சவால் விடும் நோக்கத்துடன் இது ஒரு சர்வதேச அமைப்பாகச் செயல்பட்டுவருகிறது. "நேர்மறையாகக் கட்டமைக்கப்படும் உரையாடல்கள் மூலம் வழக்கமான முறைகள் பாரபட்சங்கள் போன்றவற்றுக்குச் சவால் விடும்படி இந்த மனித நூலகம் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

உண்மையான மனிதர்கள் வாசகர்களுக்குக் கடன் அளிக்கும் இடமாக இது இருக்கிறது. இந்த இடத்தில் கடினமான கேள்விகள் எதிர்பார்க்கப்படுகின்றன. பாராட்டப்படுகின்றன. பதிலளிக்கப்படுகின்றன" என்று விளக்குகிறார் ஹைதராபாதில் மனித நூலகத்தை நிறுவியிருக்கும் ஹர்ஷத் தின்கர் ஃபத். தற்போது உலகம் முழுவதும் 60 நாடுகளில் மனித நூலக அமைப்பு செயல்பட்டுவருகிறது. வழக்கமான நூலகத்தின் கருத்தின் அடிப்படையில்தான் இதுவும் செயல்படுகிறது. ஒரு புத்தகம் எப்படி வாசிக்கப்படுகிறதோ விவாதிக்கப்படுகிறதோ ஒரே கருத்துடைய வாசகர்களிடம் பகிர்ந்து கொள்ளப்படுகிறதோ அதே போன்றுதான் மனித நூலகத்தில் மனிதர்கள் உரையாடல்களில் ஈடுபடுகிறார்கள். புத்தகங்களை எப்படித் தேர்ந்தெடுக்கிறார்களோ அதே மாதிரி இங்கே உரையாடுவதற்கும் கதைகளைப் பகிர்ந்துகொள்வதற்கும் இந்தநூலகப்பட்டியலிலிருந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கலாம். ஒரே வாழும் புத்தகத்தை இரண்டு வாசர்கள் தேர்ந்தெடுப்பது குழுவாகத் தேர்ந்தெடுப்பது போன்றவையும் சாத்தியம்தான்.

தனியார் கல்வி நிறுவனத்தில் ஊடக விளம்பரம் பயின்ற மாணவர் ஹர்ஷத். இந்த மனித நூலகங்கள் பற்றி இணையதளம் வழியாக அறிந்திருக்கிறார்.

அவருடைய ஆர்வத்தால். இந்தியாவிலும் மனித நூலகங்களாகச் செயல்படுவதை அறிந்திருக்கிறார். "இந்தியாவின் முதல் மனித நூலகம் இந்தூரில் தொடங்கப்பட்டது. இப்போதும் அதன் செயல்பாடுகள் வலிமையாக இருக்கின்றன. இந்த மனித நூலகத்தில் என்ன எதிர்பார்க்கலாம் என்று கேட்டதற்கு. "யார் வேண்டுமானாலும் வாழும் புத்தகத்துக்கான ஆதாரமாகச் செயல்படலாம். சொல்வதற்குத் தனித்துவமான கதைகள் யாரிடம் இருக்கிறதோ அவர்களும் வாழும் புத்தகங்களாக மாறலாம். சமூகப் பாரபட்சங்களை அனுபவித்தவர்கள், இனம், பாலினம், வயது, உடல் இயலாமை, பாலினத் தேர்வு பாலின அடையாளம். மதம் நம்பிக்கை வாழ்க்கை முறை தேர்வுகள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கே வாழும் புத்தகங்களாக இருக்கிறார்கள். இவர்களைச் சந்திக்க வரும் வாசகர்கள். இந்த வாழும் புத்தகங்களைக் கடன் வாங்கலாம். அவர்களுடன் உரையாடலாம். சமூகத்தில் இருக்கும் பலவிதமான சமூகக் குழுக்களைப் பற்றிய பரந்த பார்வையை இந்த மனித நூலகம் உருவாக்கும் எங்களுடைய முதல் நிகழ்ச்சிக்குப் பெரிய வரவேற்பு கிடைத்தது. பெரும்பாலானவர்கள் புத்தகங்களைப் பற்றிய நேர்மறையான கருத்துகளுடன்தான் சென்றனர்" என்கிறார் ஹர்ஷத்.

இங்கே மனிதர்கள்தாம் புத்தகங்கள். புத்தகங்களைப் படிப்பதற்குப் பதில் மனிதர்களைப் படிப்பது அவர்களின் அனுபவங்களைக் கேட்கிற இடம்தான் மனித நூலகம். மனிதர்களே புத்தகங்களாகும் விநோதம்தான் மனித நூலகத்தின் அடிப்படை உலகெங்கிலும் பல நாடுகளில் பிரபலமாக உள்ள மனித நூலகம் சென்னைக்கு வந்திருக்கிறது. சென்னையில் பிரிட்டிஷ் கவுன்சில் லைப்ரரியில் மனித நூலகத்தின் இரண்டு செஷன்கள் அரங்கேறியிருக்கின்றன. "டென்மார்க்கில் மனித நூலகம் நடத்துகிற Ronni Abergei என்பவர்தான் முதன் முதலில் இதை அறிமுகப்படுத்தியவர். ஆசியாவுக்குக் கொஞ்சம் தாமதமாக வந்திருக்கிறது. இந்தியாவில் இதை முதலில் அறிமுகப்படுத்தியவர்

அம்ரிதா. மனித நூலகம் நடத்த வேண்டுமென்றால், ஒருவர் அதற்கான லைசென்ஸ் பெற வேண்டும். ஒரு நகரத்தில் ஒருவருக்கு மட்டும்தான் அந்த உரிமம் கிடைக்கும். உரிமம் கேட்டு லட்சக்கணக்கில் விண்ணப்பங்கள் குவியும் அவற்றைப் பரிசீலித்து இந்த நூலகம் நடத்த விரும்புவதற்கான காரணங்களைக் கேட்பார்கள். காரணங்கள் திருப்தியாக இருந்தால்தான் லைசென்ஸ் கிடைக்கும்.

புத்தகத்தைக் கையில் எடுத்துப் படிக்கும்போது நேரம் என்பது நம் வசமிருக்கும் வேண்டுகிற வரை படிப்போம். வேறு வேலை இருந்தால், புத்தகத்தை மூடி வைத்துவிட்டுப் பிறகு பார்த்துக்கொள்வோம். ஆனால், மனிதப்புத்தகங்களை அப்படி நினைத்தபோதெல்லாம் தவணை முறையில் வாசிக்க முடியாது. மனிதப் புத்தகங்கள் எப்போதும் சுவாரஸ்யமானவை என்பதால், வாசகர்களுக்கு அலுப்பை ஏற்படுத்துவதில்லை. எந்தப் புத்தகத்தை வாசிக்கப் போகிறோம் என்பது வாசகர்களுக்கு முன்கூட்டியே தெரியாது. வந்த பிறகு நூலகம் கொடுக்கும் பட்டியலிலிருந்து அவர்கள் விருப்பமான இரண்டு புத்தகங்களைத் தேர்வு செய்யலாம். தேர்ந்தெடுக்க நூற்றுக்கணக்கான சாய்ஸ் இருக்கும் ஒருவருக்கு ஒன்றுக்கும் மேலான விருப்பங்கள் இருப்பது இயல்பு என்பதால், இந்தப் பட்டியல் நிச்சயம் அவர்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும். ஒரு நேரத்தில் நான்கு முதல் ஐந்து பேர் வரை ஒரு மனிதப் புத்தகத்தை வாசிக்கலாம். புத்தகங்களாக வருகிறவர்களுக்கோ,வாசகர்களுக்கோ கட்டணங்கள் ஏதுமில்லை. இடம், உபசரிப்பு உள்ளிட்ட விஷயங்களை சென்னை பிரிட்டிஷ் கவுன்சில் லைப்ரரியே ஏற்கிறது.

வாழ்க்கையில் ஏதோ வித்தியாசமாகச் செய்வதாகப் பலரும் நினைத்துக்கொண்டு இருக்கலாம். ஆனால், மனிதப் புத்தகமாக இருக்க நினைப்பவர்கள் சில விஷயங்களைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். தான் சந்திக்கிற அனுபவங்களைத் தன் வாழ்க்கையுடன் பொருத்திப் பார்க்கவும் அதை அடுத்தவர்களுக்குக் கொண்டு சேர்க்கவும் முடிகிறதென்றால், அவர் மனிதப் புத்தகமாக இருக்கத் தகுதியானவர். இந்தத் தகுதிகளை உடைய எல்லோரும் உரையாடலில் திறமையானவர்களாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. அப்படிப்பட்டவர்களுக்கு பயிற்சி அளித்து மனிதப் புத்தகமாகத் தயார்படுத்துகிறார்கள். எல்லா மனிதருக்குள்ளும் ஆயிரம் அனுபவங்கள் இருக்கும் அடுத்தவருக்குப் பயன்படுகிற அனுபவங்கள் உள்ள யாரும் மனிதப் புத்தகங்களாக இருக்கலாம். பிரபலம் என்கிற முத்திரை தேவையில்லை. மனிதப் புத்தகங்களுக்கு மொழியும் தடையில்லை. எந்த மொழி பேசுவோரும் புத்தகங்களாகலாம்.

காகித புத்தகங்களை அடுக்கி வைக்கவும், அதை திறந்து படிக்கவும் பிரத்யேக நூலக கட்டிடங்கள் உண்டு. ஆனால் மனித நூலகத்தில் புத்தகங்களாக மாறியிருப்பதுமனிதர்கள்என்பதால்,பொதுஇடங்களை மனித நூலக நிகழ்விற்கான இடமாக மாற்றுகிறார்கள். சென்னையில் இருக்கும் பிரிட்டிஷ் கவுன்சில் லைப்ரரி போன்ற பொது இடங்களில், குறிப்பிட்ட நாளில் மனித நூலக நிகழ்வு நடத்தப்படும். இதில் கலந்து கொண்டு, மனித புத்தகங்களை படிக்க ஆசைப்படும் வாசகர்கள், ஆன்லைனில் திறந்திருக்கும் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து, தங்களது வருகையை உறுதிப்படுத்த வேண்டும். அப்போதுதான் மனித நூலக நிகழ்வில் கலந்து கொள்ள முடியும்.

பள்ளிகள், கல்லூரிகள் அல்லது வழக்கமான நூலகங்களே இந்த அமர்வுகளுக்கு இடம் ஒதுக்கித் தருகின்றன. சமூக வலைதளங்களில் முடங்கிக்கிடக்கும் மனித குலத்தை மீட்டெடுக்கும் மாபெரும் முயற்சி இந்த மனித நூலகம்! மனித நூலகம், மெல்ல மெல்ல வெற்றி நடை போடத்தொடங்கியிருக்கிறது. இதன் அமர்வுகளில் பங்கேற்கும் அனைத்து மனித நூல்களும் தன்னார்வத்துடன் தங்கள் அனுபவங்களைப் பகிர்பவர்கள். வழக்கமான நூலகத்தில் அமைதி தவழும். ஆனால் இங்கே பேச்சு சத்தம் இருக்கும் என்பதுதான் வித்தியாசம்.

உலகில் கோடி கோடியாய் மனிதர்கள் உள்ளனர். எல்லோரது அனுபவங்களும், கற்றுக்கொண்ட பாடங்களும் நூல்களாவதில்லை. அதனால் அவற்றைப் பிறர் அறிய முடிவதில்லை எனவே இது புதுமை முயற்சி மட்டுமல்ல. பயனுள்ள முயற்சியும்தான்.

வருந்துகிறோம்

சென்னை கார்காத்தார் சங்கத்தின் மேனாள் தலைவர் திரு. K.G. சீனிவாசன் அவர்கள் 22.07.2022 அன்று சென்னையில் இயற்கை எய்தினார்கள். கார்குல சமுதாய பணியிலும், சென்னை கார்காத்தார் சங்கத்தின் வளர்ச்சியிலும் பெரும் பங்காற்றிய அன்னாரின் பணி என்றென்றும் நினைவு கூறத்தக்கது. அவரது மறைவு சென்னை சங்கத்திற்கு பேரிழப்பு. அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு சென்னை கார்காத்தார் சங்கமும், கார்காத்தார் ஒப்புரவும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

நட்சத்திரங்களும் மரங்களும்

(தொடர்ச்சி)

அக்ரி. கு. சேதுசுப்பிரமணியன், சிதம்பரம்.

அலைபேசி: 9443665642

4. ரோகிணி

ரோகிணி நட்சத்திரத்தின் நான்கு பாதங்களும் ரிஷப ராசியில் அடங்கிவிடுவதால் இது ஒரு முழுமையான நட்சத்திரமாகும். இது அதிகம் ஒளிரும் தன்மையுடைய நட்சத்திரம். நவக்கிரகங்களில் சந்திரன் உச்சம் பெறுவதும் ரோகிணி இடம் பெறும் ரிஷபராசியில்தான் இந்த ரிஷப ராசிக்கு அதிபதி சுக்கிரனாகும். ரோகிணி நட்சத்திரத்தின் அதிபதி கிரகம் சந்திரன். சந்திர கிரகத்தின் அதிதேவதை பிரம்மா, கணம் மானுடம், மிருகம் பாம்பு, பறவை ஆந்தை, விருட்சம் நாவல். ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவதரித்த நட்சத்திரம் ரோகிணியாகும். ஸ்ரீ கிருஷ்ணனின் அவதாரத்தால் தாய் மாமனான கம்சன் அழிவான் என்று விதி இருந்ததால், யாரேனும் ரோகிணியில் பிறந்தால் தாய் மாமனுக்கு ஆகாது என்று சொல்வது சரியானதல்ல.

ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் உண்மையைவிரும்புபவர்கள்.எல்லோரிடமும்பிரியமாக இருப்பார்கள். இனிமையாகப் பேசக்கூடியவர்கள். மனப்பக்குவம் கொண்டவர்கள். நல்ல தோற்றமும் விசாலமான கண்களைக் கொண்டவர்கள். பெரும்பாலும் சுகபோக வாழ்க்கையை பிறர் சேமித்து வைத்திருக்கும் சொத்தின் மூலம் அனுபவிப்பார்கள். நிலையான புத்தியைக் கொண்டவர்கள்.

ரோகிணி நட்சத்திரத்துக்குரிய விருட்சம் நாவல் மரமாகும். நாவல் மரத்தை தல விருட்சமாகக் கொண்ட திருவானைக்கா, திருநாவலூர் தலங்கள் இந்த நட்சத்திரக்காரர்களுக்கு பரிகாரத் தலங்களாக விளங்குகின்றன. நாவல் மரம் இவர்களுக்குப் பரிகார விருட்சமாக விளங்குவதால், அதனை நடுவதும், நீர் ஊற்றுவதும், வணங்குவதும் நற்பலன்களைத் தரும்.

தலங்களின் சிறப்புகள் :

ஜம்புகேசுவரம் என அழைக்கப்படும் திருவானைக் காவைப் பற்றி ஒருபுராணக் கதை உண்டு. வெண் நாவல் மரத்தடியில் ஒரு சிவலிங்கம் தோன்றியது. அதற்கு ஒரு யானை, தினந்தோறும் திருநீராட்டி வணங்கி வந்தது. அதே சமயம் சிவலிங்கத்தின் மேல், சருகுகளும் இலைகளும் விழா வண்ணம் காக்க ஒரு சிலந்தி வலைபின்னி வந்தது. அதனைக் கண்ணுற்ற யானை அந்த சிலந்திவலை தும்பிக்கையால் சிதைத்து அப்புறப்படுத்தியது. சிலந்தி வலைபின்னுவதும், யானை அதைச் சிதைப்பதும் தொடர்ந்து நடைபெறவே, ஒரு சமயம் சிலந்தியானது யானையின் துதிக்கையில் புகுந்து யானையைக் கடிக்கவே, யானை துதிக்கையை ஒங்கி அடிக்கவும் சிலந்தியும், யானையும் ஒரு சேர இறந்தன. யானைக்கு மோட்சம் கிடைத்தது. இறந்த சிலந்தியே மறு பிறவியில் கோச்செங்கட் சோழனாக அவதரித்து யானை புகா வண்ணம் 70 மாடக் கோயில்களைக் கட்டினான். திருவானைக்கா தலத்தில்தான் இந்த நிகழ்வு நடந்தது. திருவானைக்கா இறைவன் பெயர் ஜம்புகேசுவரர், இறைவி அகிலாண்டேசுவரி.

மற்றொரு தலமான திருநாவலூர், சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவரான சுந்தரர் பெருமான் அவதரித்த, தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம். இரணியனைக் கொல்வதற்காக திருமால் இங்கு எழுந்தருளியுள்ள சிலபெருமானைப் பூசித்து நரசிம்ம அவதாரம் எடுத்து வலிமை பெற்றார்.

அமிர்தத்தைக் கடைந்தபோது வாசுகி என்ற பாம்பின் நஞ்சை இறைவன் எடுத்துக்கொண்டு விந்தாக மாறி பூமியில் விழுந்து நாவல் மரங்களாக முளைக்கப் பெற்று ஜம்புவனம் என்ற இந்த இடத்தில், இறைவன் தானே சுயம்புவாகத் தோன்றினார்.

சுக்கிரபகவான் சிவபெருமானை வழிபட்ட இந்த இடத்தில் அவர் தாபித்த சிவலிங்கம் நவக்கிரகங்களுக்கு அருகே உள்ளது. சுக்கிரதோஷம் நீங்கவும், திருமணபாக்கியம் கைகூடவும் இத்தல இறைவனை வழிபட்டு பலன் பெறலாம். பிரம்மனும் இத்தல இறைவண்ணப் பூசித்து இறையருள் பெற்றார். ஒவ்வொரு வருடம் பங்குனி மாதம் 23 முதல் 27–ம் நாள் வரை சூரியனின் ஒளிக்கதிர்கள் மூலவர் மீது படுகின்றது. இங்கு அருள்பாலிக்கும் இறைவன் பெயர் ஸ்ரீ பக்தஜனேசுவரர்–இறைவி பெயர் மனோன்மணி.

மேற் சொன்ன இரு தலங்களும் ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும், பரிகாரத் தலங்களாக விளங்குகின்றன. தவிர, பிரம்மாவுக்கு என்று தனி சந்நிதி கொண்ட திருப்பட்டூர் கண்ணன் குடி கொண்ட திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருவரங்கம் (திருக்கோவலூர் அருகில் உள்ளது) மன்னார்குடி பெருமாள் அகரம் ஆகிய தலங்களும் பரிகாரத்தலங்களே.

நாவல்:

நாவல் மரத்தின் தாயகம் இந்தியாவாக இருந்தாலும் தெற்காசிய நாடுகளிலும், ஆஸ்திரேலியா போன்ற பகுதிகளிலும் பரவியுள்ளது. சமவெளிப்பகுதி முதல் 6000'' அடி உயரம் கொண்ட இடங்கள் வரை பரவலாக வளர்கின்ற தன்மை கொண்டது.

தாவரவியல் பெயர் = Syzigium cumini syn Eugenia jambolara.

தாவரக்குடும்பம் = Myrtaceae.

பூக்கள் மே–ஜூன் மாதங்களில் தோன்றி கனிகள் உருவாகின்றன. பூக்களில் அதிக அளவில் தேன் உண்டாகின்றது. கனிகள் கருநீல நிறத்துடன் உருண்டை வடிவானவை. இம்மரம் விதை மூலம் பரவுவது. பழத்தின் சதைப்பற்றை நீக்கிவிட்டு விதையினை ஓரிரு நாட்கள் நிழலில் உலர வைத்து உடன் விதைக்க வேண்டும். நாள்பட வைத்திருந்தால் முளைப்புத்திறன் குறைந்து விடும்.

மருத்துவப் பயன்கள்:

கனிகள் சுவையானவை. அதன் சதைப்பற்றில் உள்ள சத்துக்கள் 100 கிராம் அளவில்

நீர்	= 83.7%
புரதம்	= 0.7%
கொழுப்பு	= 0.3%
நார்ச்சத்து	= 0.9%
மாவுச்சத்து	= 14.0%
தாது உப்புகள்	= 0.4%

தாது உப்புக்களின் கால்சியம் 13 மி.கி, மெக்னீசியம் 35 மி.கி, ஃபாஸ்பரஸ் 15 மி.கி, இரும்பு 1.2 மி.கி, சோடியம் 26.2 மி.கி, பொட்டாசியம் 55 மி.கி, தாமிரம் 0.23 மி.கி, கந்தகம் 13.0 மி.கி, குளோரின் 8 மி.கி, என்ற அளவில் உள்ளன. வைட்டமின்களில் ஏ, "பி" வகைகள், சி ஆகியவை நிறைவாக உள்ளன. கனிகள் பசியைத் தூண்டுபவை. உடலுக்கு உரம் தருபவை. சிறுநீர்ப் பெருக்கியாகவும் செயல்படும். பழத்தின் சாறு மண்ணீரல் வீக்கத்துக்கு அருமருந்து. வைட்டமின் 'சி' பற்றாக்குறையைப் போக்கவல்லது. நாவற்பழத்தில் உள்ள ஜாம்போலைன் என்ற ஆல்கலாய்டும், மாலிக் அமிலமும் மருத்துவ குணம் கொண்டவை.

மரத்தின் பட்டையுடன் ஏலம் அல்லது இலவங்கம் சேர்த்து வடிநீர் (decoction) தயார் செய்து அருந்த மாதவிடாய் காலத்தில் ஏற்படும் அதிக இரத்தப்போக்கு, வயிற்றுப்போக்கு, சீதபேதி போன்றவை குணமாகும்.

இலைகள் துவர்ப்புக் குணமுடையவை. கொழுந்து இலைகளை ஏலத்துடன் சேர்த்து அரைத்து ஆட்டுப்பாலுடன் கொடுக்க செரிமானம் ஆகாமல் போகும் வயிற்றுப்போக்கு சீதபேதி மட்டுப்படும்.

நாவல் பழக்கொட்டையை உலர்த்தி உள்ளிருக்கும் பருப்பினைப் பொடி செய்து அத்துடன் சம அளவு மாம்பருப்புப் பொடி கலந்து 2–4 கிராம் அளவில் நீருடன் சேர்த்து உட்கொண்டால் நீரிழிவு நோய் (Diabetes) மடடுப்படும். சர்க்கரை அளவு குறைவதுடன் சிறுநீரும் அதிக அளவில் வெளியேறும்.

வேர்ப்பட்டைக் குடிநீரும் (decoction) வயிற்றுப் போக்கை மட்டுப்படுத்தும்.

எச்சரிக்கை 1. விதைப்பொடியை அளவோடு எடுத்துக் கொள்ள வேண்டும். அதிக அளவில் எடுத்துக்கொள்ள நஞ்சாகும்.

2. பழமும் அதிக அளவில் உட்கொண்டால் தீங்காகும். அதனைச் சரிசெய்ய நெல்லிக்காயை மென்று தின்று குளிர்ந்த நீரைக்குடிக்க வேண்டும்.

ரோகிணி நட்சத்திரக்காரர்கள் நாவல்மரக் கன்றுகளை ஆலய நந்தவனங்கள், பெருங்கட்டட வளாகங்கள் போன்ற இடங்களில் நட்டும், பராமரித்தும் வணங்கியும் வர இம்மைப் பயன்களைப் பெறலாம்.

பரிகாரத் தலங்களுக்குச் சென்று உரிய வழிபாடுகளைச் செய்து வர நினைத்த காரியங்கள் கைகூடி வரும்.

அடுத்த இதழில் மிருகசீரிஷ நட்சத்திரத்தைப் பற்றிய விபரங்களைப் பார்ப்போம்.

(பயணிப்போம்)

ஜெயஸ்ரீ திருமண தகவல் மையம்

19/2, வள்ளலார் கோயில் சன்னதி தெரு, மயிலாடுதுறை. அலைபேசி : 94434 88125

கார்குல பெரியோர்கள் தங்கள் வரன் பற்றிய விபரங்களை பதிவு செய்து ஏற்ற வரன்களை எங்கள் ஆலோசனையுடன் பெற்றுச் செல்லலாம். தாங்கள் ஜாதகம் கொடுத்தால் தங்கள் அனுமதியுடன் மட்டும் தரப்படும். நிர்வாக செலவிற்கு பதிவுக்கட்டணம் ரூ. 200/– மட்டும் பெறப்படும். திருமணம் முடிந்த பின் பதிவு நீக்கப்படும். பதிவு ஓர் ஆண்டிற்கு பிறகு புதுபிக்க வேண்டும். திருமணம் முடிந்த தகவல் தெரிவிக்க வேண்டும்.

அலுவலக நேரம் : மாலை 4.30 மணி முதல் 7.30 வரை ஞாயிறு விடுமுறை

நிறுவனர் **எஸ். ஜெயம்** வாழ்த்துக்களுடன் **எம். சுத்தியபால்**

கடித தொடர்புமுகவரி : **எஸ். ஜெயம்,** 10, மயூரநாதர் மேல வீதி, மயிலாடுதுறை – 609 001.

உண்ணா நோன்பு

நம் உடல் ஆரோக்கியத்தைப் பேணிப் பாதுகாப்பதில் முக்கிய இடத்தைப் பெறுவதுதான் உண்ணா நோன்பு.

எந்திரமயமான வாழ்விலும், கம்ப்யூட்டர் ஜாலங்கள் நிறைந்த இவ்வுலகிலும் எத்தனை பேர் உண்ணாநோன்பைக் கடைப்பிடிக்க இயலும் ? தற்போதுள்ள துரித உணவு (Fast food) மூலம் பலதரப்பட்ட உணவுகளை உட்கொண்டு வருகின்றனர். அதாவது ரசாயன உரங்களையும், பூச்சிக்கொல்லிகளையும் உபயோகித்து விளைந்த காய்கறிகளில் சத்துக் குறைவாக இருக்கும். அதன் மூலம் தான் நமக்கும் உடலில் பலவித நோய்கள் தோன்றி பல இன்னல்களை அடைகின்றோம்.

தற்போது விவசாயத்தில் உள்ள பலர் இயற்கை வேளாண்மைக்குத் திரும்புகின்றனர். அதே போல் நம்மில் பலர் இயற்கை உணவை உட்கொள்ளத் தொடங்கி உள்ளனர். இது அவர்களுக்கு மன நிம்மதியைக் கொடுக்கின்றது.

இயந்திர கதியில் இயங்கும் நமக்கு அதாவது இயந்திரங்களில் பழுது வராமலிருக்க குறிப்பிட்ட காலங்களில் service செய்வதைப் போல்தான் நமக்கும் இந்த உண்ணாநோன்பு அவசியமாகின்றது.

"உண்ணா நோன்பே உயரிய மருந்து!"

சமைத்த உணவை உட்கொள்பவர்கள் இடையிடையே உண்ணா நோன்பைக் கடைப்பிடிப்பது மிகவும் நல்லது. இயற்கை உணவைக் கடைப்பிடிப்பவர்கள் உண்ணாநோன்பு மேற்கொள்ள வேண்டியதில்லை. நமது உடலில் சேரும் அழுக்குகள், கழிவுகளை வெளியேற்றவும், உள்ளமும் உடலும் தூய்மையடையவும், நோய் வருமுன் காப்பதற்கும் தான் ஒவ்வொரு மாதத்திலும் சஷ்டி, கார்த்திகை, ஏகாதசி, அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி போன்ற நாட்களை ஆன்மீகத்தின் அடிப்படையில் விரத நாட்களாக்கினார்கள் நம் முன்னோர்கள்.

உண்ணா நோன்பிற்கு உபவாசம் என்ற ஆன்மீகப் பெயருண்டு. உபவாசம் என்பது கடவுளின் அருகே வசிப்பது எனப்பொருள்படும்.

நம் வீட்டில் உள்ள பெரியவர்கள், இன்று நான் விரதம் என்பார்கள். விரதம் என்றால் உண்ணாநோன்பு தான் என்று நினைப்போம். அவர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா ?

காலை பதினொன்று மணிக்கு முழுச்சாப்பாடும், இரவு வேளைகளில் டிபன் சாப்பிடுவது தான் அவர்களின் விரதம்.

இன்னும் மேலே ஒருபடி போனால் அரசியல்வாதிகளின் உண்ணாவிரதம்! அது ஒரு கேலிக் கூத்தாகும்.

உண்ணாநோன்பைப் பொதுவாக மூன்று வகைப்படுத்தலாம்.

(1) உலர் உண்ணாநோன்பு (Dry Fasting)

(2) நீர் உண்ணாநோன்பு (Water Fasting)

(3) சாறு உண்ணாநோன்பு (Juice Fasting)

மேற்கண்ட வகைகளை எப்படிக் கடைப்பிடிக்கலாம் என்று பார்ப்போம்

(1) உலர் உண்ணா நோன்பு:

காற்றை மட்டும் சுவாசித்து ஒரு நாள் மட்டும் மேற்கொள்ளுதல், தண்ணீர் கூட அருந்தக்கூடாது. ஆஹா! அலுவலகம் செல்வது போல் காலை மணி பத்து முதல் மாலை மணி ஐந்து வரை இருப்பது ஒரு நாள் என்று நினைக்க வேண்டாம். டி.வி களிலும், நாளிதழ்களிலும் இதுபோன்ற பலரின் அடையாள உண்ணாவிரதங்களைப் பார்த்துப் பழகிய நம்மில் பலர் அப்படி நினைக்கலாம். அதுவல்ல இருபத்து நான்கு மணி நேரம் தானே ஒருநாள்! அதைத்தான் நாம் ஒரு நாள் உண்ணாநோன்பாகக் கொள்ள வேண்டும்.

அதிகபட்சமாக மூன்று நாட்களுக்கு மேல் இந்த உண்ணாநோன்பை மேற்கொண்டால் உயிருக்கே ஆபத்தாக முடியும். உலர் உண்ணாநோன்பு முதல் தரமானது. மிகுந்த கவனத்துடனும் விழிப்புடனும் இருக்க வேண்டியது அவசியம்.

பொதுவாக எந்த வகை உண்ணாநோன்பும் மேற்கொள்ளும் போது கவனங்களை சிதறடிக்கும் வகையில் புத்தகங்களை படிப்பதையோ, வேறு சிந்தனைகளிலோ, வேறு சில பணிகளையோ செய்ய வேண்டாம். இயன்ற வரையில் நல்ல இயற்கைக் காற்றோட்டத்திலும், வெளிச்சத்திலும் அதாவது திறந்தவெளியில் உண்ணாநோன்பு மேற்கொண்டு உடலுக்கும் உள்ளத்திற்கும் முழு ஓய்வு கொடுத்தல் அவசியம்.

(2) நீர் உண்ணாநோன்பு :

நீர் உண்ணாநோன்பு மூன்று நாட்கள் மேற்கொண்டால் போதுமானது. அதிகபட்சம் ஏழு நாட்கள் வரை இருக்கலாம். இதில் ஒரு சௌகரியம் என்னவென்றால், உண்ண வேண்டும் என்று தோன்றும் போதெல்லாம் குளிர்ந்த நீரை மட்டும் அருந்தலாம்.

நல்ல தூய மண்பானையில் குளோரின் போன்றவை கலவாத தூய இயற்கைத் தண்ணீரை ஊற்றி அருந்தினால் மிகவும் நன்று.

மேலும் குளிர்ந்த நீருக்குப் பதிலாக தேன் கலந்த நீர், இளநீர் ஆகியவையும் அருந்தி உண்ணாநோன்பு இருக்கலாம். இளநீர் அருந்தும் போது அதிலுள்ள வழுக்கையை தின்றால் அது உண்ணாநோன்பு ஆகாது. நீர், இளநீர், தேன் கலந்த நீர் இவை அனைத்தையும் நிதானமாக சப்பிச் சப்பி வாயில் உமிழ் நீருடன் கலந்து பருக வேண்டும்.

(3) சாறு உண்ணாநோன்பு :

எலுமிச்சம் பழச்சாறில் தண்ணீர் கலந்து அருந்தி சாறு உண்ணா நோன்பை மேற்கொள்ளலாம். எலுமிச்சம் பழச்சாறில் இனிப்புச் சுவை வேண்டுமெனில் தேன் கலந்து கொள்ளலாம். ஆரஞ்சுப் பழச்சாறு, திராட்சைப் பழச்சாறு, அன்னாசிப் பழச்சாறு, மாம்பழச்சாறு, பப்பாளிச்சாறு அருந்தியும் உண்ணாநோன்பு இருக்கலாம். சாறு உண்ணாநோன்பு ஏழு நாட்கள் இருக்கலாம். அதிகபட்சமாக அவரவர்கள் இயல்புக்குத் தகுந்தவாறு எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் இருக்கலாம்.

உண்ணாநோன்பை முடிக்கும் விதம் :

உலர் உண்ணாநோன்பு, நீர் உண்ணாநோன்பு ஆகியவற்றை முடிக்கும் போது எலுமிச்சை, ஆரஞ்சு, திராட்சை ஆகிய ஏதேனும் ஒரு பழச்சாறு முதலில் அருந்தி, அதன்பின் கனிந்த சாறுள்ள பழங்கள் உண்டு. பின்னர் இயற்கை உணவு அல்லது உப்பு, புளி, காரம் மிகக் குறைவான, சமைத்த உணவைச் சாப்பிடலாம். சாறு உண்ணாநோன்பிற்குப் பின் மென்மையான கனிந்த சாறுள்ள பழங்களும், பின்னர் மா, வாழை, பேரீச்சை போன்ற பழங்களும், அடுத்து இயற்கை உணவு அல்லது சமைத்த உணவை உண்ண வேண்டும்.

அதிக நாட்கள் உண்ணா நோன்பு இருந்தவர்கள் உண்ணாநோன்பை முடிக்கும் போது மிக கவனமாகவும், எச்சரிக்கையுடனும் முடிக்க வேண்டும். முதலில் பழங்களை மட்டும் சில நாட்களும் அதன்பின் இயற்கை உணவும் அதன்பின் தேவை என்றால் சமைத்த உணவை உண்ண வேண்டும்.

உணர்நிலை – ஞானநிலைக்கு செல்பவர்கள் இடையிடையே உபவாசம் மேற்கொள்ளலாம். உண்ணாநோன்பு மூலம் உடல் எடை, தொந்தி குறையும். உடலுறுப்புகள் – செம்மையடைகின்றன. இரத்தம் தூய்மையாகி நச்சுப் பொருட்களை வியர்வை மூலம் வெளியேறி உடல் தூய்மையாகின்றது.

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
சென்னை. 9943702054

அறம் சார்ந்த உள்ளோடு கதையின் நாயகி எடுக்கும் வித்தியாசமான முடிவு, வித்தியாசமான கதைக்களம் கொண்ட நாவல்



எளிய பயிற்சிகளும் கூடவே உணவு முறைகளும் நீண்ட அனுபவத்தில் வடிவமைக்கப்பட்ட தொப்பையை குறைக்கும் வழிமுறைகளும் சொல்லப்பட்டுள்ளன

வாழ்க்கைக்குத் தேவையான பலநூறு வழிகாட்டுதல்களைக் கொண்ட நூல்

சுவாரசியமான ராஜ ராஜசோழனின் கதை சிறார்க்கும் பெரியவர்களுக்கும்

மேடைப்பேச்சு, வணிகம் & சந்தைப்படுத்தல் பேச்சு நட்பு & உறவுகளில் பேசுதல் குறித்த 54 வகை உத்திகள் 8 ஆவது பதிப்பு

கிடைக்குமிடம்
தமிழ்மகள் பதிப்பகம்,
26A, பதினாறுகால் மண்டபத் தெரு, சிதம்பரம் - 608 001
: 94862 16450, 85266 64007

மொத்தமாக வாங்குவோருக்கு உரிய தள்ளுபடி வழங்கப்படும். அதற்கு வழியில் நேர உரையாடி என்னில் தொடர்பு கொள்ளுங்கள்

சங்கப் பலகை

பங்கு பெறுவோர் ; மங்களம், அலமேலு, ஆண்டாள், சித்ரா, வசுமதி, தீபிகா, கோமதி, பிரியா, கௌரி, பவித்ரா

இடம் :- மெரினா பீச் கண்ணகி சிலை

அலமேலு – அப்பாடி ரொம்ப நாளுக்கு அப்றம் இப்பதான் இங்கே வர்ரோம் இல்லியா சுகமான காத்து சரி எல்லாரும் வந்தாச்சுன்னா ஆரம்பிக்கலாம் இன்னைக்கு எந்த சட்டத்தைப் பத்தி சொல்லப் போறீங்க.

கௌரி – சட்டத்தைப் பத்தி போன தடவதான் பேசி உங்களை போர் அடிச்சுட்டோம் இந்த தடவ வேற ஏதாவது பொழுது போக்கு சமாச்சாரமா பேசலாம்.

அலமேலு / மங்களம் – அப்பிடி எல்லாம் போர் அடிக்கல அம்மா நீங்க சொன்ன பாயிண்ட் எல்லாம் யூஸ்ஃபுல் ஆனவை தான் அம்மா.

ஆண்டாள் – ஆமாம் கௌரி சொன்னது எல்லாமே எல்லோரும் அவசியம் தெரிஞ்சிக்க வேண்டியவை தான் அன்றாட வாழ்வில் சட்டங்கள் என்ற தலைப்பில் அன்பழகன் ரெண்டு கட்டுரை எழுதி இருக்காரு இல்லியா அதிலேர்ந்து இன்னைக்கு உங்கள சொல்ல சொல்லலாம்னு இருந்தேன்.

கௌரி – உங்களுக்கு எல்லாம் ஆட்சேபணை இல்லன்னா சொல்றதுக்கு எங்களுக்கு ஒண்ணுமில்லை அதைப் பத்தி இன்னொரு நாள் சொல்றோம் இன்னைக்கு பொழுது போக்கு அம்சங்களா பேசுவோம் அதுக்கு முன்னாடி நான் ஒண்ணு சொல்லிக்கிறேன்.

மங்களம் – சொல்லும்மா .

கௌரி – சில நேரங்களில் நாங்க ஏற்கனவே சொன்ன மேட்டரையே திரும்பவும் சொல்ல நேரிடலாம் அப்படி திருப்பித் திருப்பி ஒரே விஷயத்தை சொல்றதும் பேசறதும் கூட கத்துக்கிறதுதான்ங்கற அர்த்தத்தில ஆங்கிலத்தில Repetition is the mother of Educationன்னு சொல்லியிருக்காங்க

அலமேலு – ஓ.கே அதே மாதிரி செய்யுங்க இடை இடையே சந்தர்ப்பம் கிடைக்கறச்சே சட்டத்தை பத்தியும் சொல்லுங்க சரி சித்ரா ஆரம்பிம்மா.

சித்ரா –ஒருத்தன் தன் நண்பர்கிட்டே முதல் மனைவி இருக்றச்சேயே இரண்டாவது கல்யாணம் பண்ணிகிட்டா என்னா தண்டனைந்னு கேட்டான் அதுக்கு அவன் சொன்னான் ரெண்டு மாமியார் இருப்பாங்களே.

மங்களம் – போவுது போ பொண்டாட்டிய பனிஷ்மெண்ட்டுன்னு சொல்லாம மாமியார சொல்லி இருக்கான்.

வசுமதி – கணவன் மனைவி கிட்டே நம்ம மேரேஜ் சர்டிஃபிகேட்டில என்ன பாத்துகிட்டு இருக்கேன்னு கேக்கறான். அதுக்கு மனைவி அந்த சர்டிஃபிகேட்டில் எக்ஃஸ்பைரி முடிவு தேதி இருக்கான்னு பாக்கறேன்நு சொல்றா.

அலமேலு – ஆபீஸ்ல வேலை செய்யறவங்களுக்கு இத்தினி வருஷம் சர்வீஸ்ங்கற மாதிரியா இது கூட நல்லாதாம்மா இருக்கு.

தீபிகா – மாமி ஆபீஸ்ல ப்ராஜக்ட் எல்லாம் போடறச்சே டீம் வொர்க்ன்னு போடுவாங்க கேட்டிருக்கிங்களா.

மங்களம் – ஒரே ப்ராஜக்டில நிறைய பேர் க்ரூப்பா சேந்து செய்யறது தானே தெரியும் அம்மா.

தீபிகா – அதேதான் மாமி அப்பிடி டீம் வொர்க் பண்றதால என்ன காரணம்னு கேட்டா ஏதாவது தவறு நடந்துட்டா மத்தவங்க மேல பழியை போட வாய்ப்பா இருக்கும்.

அலமேலு – பலர் சேர்ந்து செய்யறதால அவுங்க அவுங்களுக்கு தோண்ற ஐடியாவ சொல்லுவாங்கன்னு நான் நினைச்சேன் ஆனா தீபிகா சொல்றதுதான் ப்ராக்டிகலா நடக்குது சரிம்மா அடுத்த செய்தியைச் சொல்லுங்க.

கோமதி – வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டுப்போகும் என்பார்கள். ஆனால் எப்போதும் சிரித்துக் கொண்டிருக்கும் வியாதியுடன் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார், இங்கிலாந்தின் 'கேஅன்டர்வுட்'. 20 வயதான இந்த இளம் பெண்ணிற்கு 5 ஆண்டுகளுக்கு முன்பு திடீரென இந்த மாற்றம் ஏற்பட்டதாம். அதிலிருந்து இப்படி விடாமல் சிரித்துக் கொண்டிருக்கிறார்.

ஆண்டாள் – எதனால் அப்படி இருக்கிறாளாம்

கோமதி – அதிகப்படியான உணர்ச்சியால் மனம் குழம்பிப்போனவர்கள் எப்படி ஒன்றையே சொல்லிக் கொண்டிருக்கிறார்களோ, அதுபோலவே அதிகமாக சிரித்துக் கொண்டிருக்கும் போது ஏற்படும் செயலிழப்பு இதுபோன்ற பாதிப்பை உருவாக்கி விடுகிறது என்று விளக்கம் தருகிறார்கள் மருத்துவர்கள். திடீரென தூங்கிவிடும் 'நார்கோலெப்சி' வியாதியும் கூடுதலாக இந்தப் பெண்ணிடம் இருக்கிறதாம்!

அலமேலு – என்னவெல்லாம் வியாதி வருது பாருங்க அடுத்தவங்க சொல்லுங்க.

பிரியா –அடுத்ததா நான் சொல்றேன் மாமி.

பிரியமானவர்கள் இறந்துபோனால், 'நான் அதை நினைத்து ரத்தக் கண்ணீர் வடிக்கிறேன்' என்று சிலர் சொல்வார்கள். சிலிநாட்டில் 20 வயதான சாரிட்ஷா ஒலிவா என்ற இளம் பெண் நிஜமாகவே ரத்தக் கண்ணீர் வடிக்கிறார். நரம்பு பாதிக்கப்பட்டிருக்குமோ என்று பரிசோதித்த மருத்துவர்களுக்கு இது வேறு

விசித்திரமான பாதிப்பு என்று தெரிய வந்திருக்கிறது. 'ஹீமோலாக்ரியா' என்று கூறப்படும் இந்த வியாதி சமீபகாலங்களில் பலருக்கு அறியப்பட்டுள்ளதாம்!

கௌரி – பவித்ரா அடுத்த ந்யூஸ ஆரம்பிக்கிறதுக்குள்ள சட்டம் சம்பந்தப்பட்ட தகவல் ஒண்ண நான் சொல்லிடறேன்.

ஆண்டாள் – அப்படித்தான் இடை இடையே சட்டம் பத்தியும் சொல்லுங்க.

கௌரி – சரி மாமி இக்னொரன்ஸ் ஆஃப் லா இஸ் நோ எக்ஸ்க்யூஸ் அதாவது ஒரு குற்றத்தைச் செய்துட்டு அது குற்றம்னு எனக்குத் தெரியாதுன்னு சொன்னா அந்த பதிலை ஏற்றுக் கொள்ளமுடியாது அந்தக் குற்றத்துக்கு உரிய தண்டனையை அவர் அனுபவித்துதான் தீரணும்.

அலமேலு – அது எப்படிம்மா வீட்ல குழந்தைங்க தெரியாம செஞ்சா நாம் விட்டுறதில்லையா.

கௌரி – மாமி அதெல்லாம் சிறு தவறு சட்டத்தில சொல்ற குற்றம் மாதிரி இல்லை நீங்க சொல்றமாதிரி ஒரு குற்றத்தைத் தெரியாம செஞ்சவங்க அல்லது முதல் தடவை செஞ்சவங்க அப்பிடின்னு பாத்து விட்டோம்னா வீடு புகுந்து திருடனவங்க கொலை செஞ்சவங்க எல்லாரும் அதே பதில சொல்லுவாங்க அவுங்களை எல்லாம் விட முடியுமா.

மங்களம் – நீ சொல்றதும் சரிதாம்மா நீ மேல சொல்லு.

கௌரி – சட்டம் தெரியாமல் இழைக்கும் குற்றங்களைச் சொல்றேன்.

1. பிறந்த நாள் வாழ்த்துப் பாடல்

நண்பர்கள் மற்றும் குழந்தைகளின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் பிறந்த நாள் கொண்டடுபவர் கேக் வெட்டும்போது கூடி இருப்பவர்கள் வாழ்த்தும் போது ஹேப்பி பர்த் டே என்ற பாடலைப் பாடுவதை நாம் அறிவோம். அந்தப் பாடலை பொதுவான இடங்களில் பாடுபவர்கள் சங்கடத்துக்கு ஆளாக நேரிடும். ஆம் அந்தப் பாடலைப் பாடும் உரிமையை பெரு நிறுவனமான வார்னர் ம்யூசிக் 1980 ஆம் ஆண்டில் 25 மில்லியன் டாலருக்கு வாங்கியுள்ளது. அந்தப் பாடலை பொது நிகழ்வுகளில் பாடுவது சட்ட விரோதமானது என்றும் அறிவித்துள்ளது.

ஆண்டாள் – எனக்கே இது குற்றம்னு இப்ப தாம்மா தெரியும்.

கௌரி – உங்களுக்கு மட்டுமில்ல நிறைய பேருக்கு இன்னமும் தெரியாது.

பவித்ரா – சினிமாவ டவுன் லோடு பண்றத்த பத்தி சொல்லுங்க அக்கா.

கௌரி – பவித்ரா சொல்றது ரொம்ப முக்கியம் பிறந்த நாள் வாழ்த்துப் பாட்டு மாதிரி இல்லாம இந்த தவறை நிறைய பேர் செய்வாங்க அதையும் சொல்றேன்.

2. பிடித்த பாடல்களையும் திரைப் படங்களையும் பதிவிறக்கம் செய்தல்

நமக்குப் பிடித்த பாடல்கள் மற்றும் திரைப்படங்களை இணைய தளத்திலிருந்து டவுன் லோடு என்னும் பதிவிறக்கம் செய்வதும் சட்டப்படி குற்றமாகும். அதே போல் வலை தளங்களிலிருந்து படங்களை அவர்களது அனுமதி இல்லாமல் நமக்கு வேண்டிய வேறு இடங்களுக்கு பதிவேற்றம் செய்வதும் நம்முடைய படைப்புக்களில் பயன் படுத்துவதும் காபி ரைட் என்னும் பதிப்புரிமைச் சட்டப்படி குற்றமாகும் ஏனென்றால் அவர்கள் அவற்றை பதிப்புரிமைச் சட்டப்படி பதிப்புரிமை செய்து வைத்திருப்பார்கள்.

இந்திய பதிப்புரிமைச் சட்டப்படி இத்தகைய மென் பொருள் திருட்டுக்கள் செய்பவர்கள் மீது சிவில் மற்றும் கிரிமினல் எனப்படும் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடவடிக்கைகள் எடுக்கலாம் இத்தகைய குற்றங்களுக்கு சிறைத்தண்டனை குறைந்த பட்சம் 7 நாட்கள் முதல் அதிக பட்சம் 3 ஆண்டுகள் வரையும் அபராதம் ரூ 50,000 லிருந்து ரூ 2 லட்சம் வரையும் விதிக்கப்படலாம்.

அடுத்த செய்திய பவித்ரா சொல்லுவா.

பவித்ரா – மறதி இல்லாத மனுஷி.

மாணவர்கள் பலர் தம்மால் எதையும் நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை என்று வருத்தப்படுவார்கள். ஆனால் ஜிம் மெக்காவ் எதையும் மறக்க முடியவில்லையே என்று கவலைப்படுகிறார். கலிபோர்னியாவைச் சேர்ந்த 40 வயதான இந்தப் பெண்மணிக்கு, கடந்த 25 வருடங்களாக ஒவ்வொரு நாளிலும் என்னென்ன நடந்தது என்பது நினைவில் இருக்கிறதாம். இதுவரமா? நோயா? என்று புரியாதஅவர் மருத்துவ ஆராய்ச்சியாளர்களை நாட, அவர்கள் புதிய பெயர் சூட்டி ஆய்வை தொடர்ந்து வருகிறார்கள்.

அலமேலு – அடுத்த செய்தியை யாரும்மா சொல்றீங்க.

சித்ரா – நான் சொல்றேன் மாமி.

கூகுள் – பணியாளர் இறந்து விட்டால், அவரது கணவர்அல்லது மனைவி 10 ஆண்டுகளுக்கு பாதி சம்பளம் பெறுவார், ஆனால் 19 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் 1,000 டாலர் மாதாந்திர அலவன்ஸ் எதிர்பார்க்கலாம்.

ஆண்டாள் – பரவாயில்லியே நம்ம மக்கள் ஏதாவது தகவல் தேவைப்பட்டா கம்ப்யூட்டரில் கூகுள்ள தான் தேடுவாங்க அந்த கூகுள் கம்பெனில இந்த அளவுக்கு செய்யறாங்களே.

வசுமதி – நம்ம பெரியவங்க எல்லாம் குழந்தைகளுக்கு கொடுக்கணும்னா வாழைப்பழம் தான் கொடுப்பாங்க ஏன்னா குழந்தைகளுக்கு ஒவ்வாமை இல்லாத ஒரே பழம் வாழைப்பழங்கள் என்று விஞ்ஞானிகள் தீர்மானித்திருக்கிறார்கள்.

மங்களம் – ஒவ்வாமைன்னா என்னாம்மா.

வசுமதி – அலர்ஜியதான் தமிழில ஒவ்வாமைம்பாங்க சரிதானா தீபி அடுத்தத நீ ஆரம்பி.

தீபிகா – சாதாரணமா எல்லோரும் பதவிக்காக தேடி அலைவாங்க அப்பிடி இருக்கையில் ஒருவர் தானே வந்த பதவியை அதுவும் நாட்டின் அதிபர் பதவியை வேண்டாம்னு நிராகரித்து விட்டார்.

அலமேலு – யாரும்மா அப்படிப்பட்ட நல்ல மனுஷன்.

தீபிகா –ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்னு ஒரு விஞ்ஞானி இருந்தார். இஸ்ரேலின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார், ஆனால் விஞ்ஞானி இந்த திட்டத்தை நிராகரித்து விட்டார்.

கோமதி – மாமி அடுத்ததா நான் ஒரு ஆச்சரியமான தகவல் சொல்றேன் கேளுங்க. விண்வெளி வீரர்கள் விண்ணிற்குள் இருக்கும்போது அவர்கள் தங்களுக்கு ஏதேனும் சோகமான செய்தியைக் கேட்டோ அல்லது ஆனந்தத்திலோ கண்ணீர்விட முடியாது. விண்வெளியில் புவி ஈர்ப்பு சக்தி இல்லாததால் கண்ணில் பொங்கிவரும் கண்ணீர் வெளியே வடியாது.

அலமேலு – நிஜமாவே ஆச்சரியமான தகவல்தான்.

மங்களம் –அது மட்டுமல்ல விண்வெளில பறக்கிறவங்களப் பெருமையோட பார்க்கிறோம் ஆனா அப்படி விண்வெளில பறக்றச்சே அவுங்க எவ்வளவு கஷ்டத்துக்கு ஆளாகுணும்ங்கறத இது மாதிரி யாராவது சொன்னாதானே நமக்குத் தெரியும்.

கௌரி – நம்ம ஊர்ல அடுக்குமாடி கட்டிடமோ அல்லது அரசு கட்டிடங்களோ கட்டிய பிறகு அதில் ஏதாவது குறை தென்பட்டால் அதைக் கட்டின இஞ்சினீரைக் குறை சொல்றோம். நல்ல வளர்ந்த நாடான அமெரிக்காவிலிலே அந்த மாதிரி ஒரு சம்பவத்தைப் பத்தி பிரியா இப்ப சொல்லுவா.

பிரியா – அமெரிக்காவில் இருக்கிற இண்டியானா பல்கலைக்கழகத்தில் உள்ள நூலகம் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட அளவு பூமிக்குள் மூழ்கிக்கொண்டேயிருக்கிறதாம். இதற்கு அந்த நூலகம் கட்டப்படும் போது இந்த நூலகத்தில் வைக்கப்படும் புத்தகங்களின் எடையைக் கணக்கிட்டுக்கட்ட மறந்து விட்டார்களாம். ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா ?

பவித்ரா – நான் ஒரு ஆச்சரியமான செய்தியைச் சொல்றேன் கேளுங்க.

ஒவ்வொரு 15 நாட்களுக்கு ஒருமுறையும் அமாவாசை மற்றும் பௌர்ணமி மாறி மாறிவரும். அதனால் மாதத்தில் ஒரு முறையாவது அமாவாசையும் பௌர்ணமியும் வந்துவிடும்.

அலமேலு – சில மாதங்களில அமாவாசையோ அல்லது பௌர்ணமியோ ரெண்டு முறை கூட வரும்.

பவித்ரா –அதுதான் மாமி அந்த மாசம் ஆரம்பிக்கிற நாளைப் பொறுத்தது. நான் சொல்லப் போற அதிசய ந்யூஸ் 1865ம்ஆண்டு பிப்ரவரி மாதம் மட்டும் தான் பௌர்ணமியே வராத மாதம்.

கௌரி – அந்த மாசத்தில பௌர்ணமி வந்திருக்காதே ஒழிய 15 நாட்களுக்கு ஒரு முறை அமாவாசையும் பௌர்ணமியும் மாறி மாறி வர்ரதில எந்த மாற்றமும் இருக்காது அடுத்த செய்திய யாரு சொல்லப் போறீங்க ?

சித்ரா – நான் தான் அக்கா.

உலகப் புகழ்பெற்ற மோனாலிசா ஓவியம் பற்றி எல்லோருக்கும் தெரியும். அதை வரைந்தவர் லியோனார் டோடாவின்சி. இவர் பல துறைகளில் திறமை வாய்ந்தவராக விளங்கினார். இவர் தான் நாம் இன்று பயன்படுத்தும் கத்தரிக்கோலையும் கண்டு பிடித்தவர்.

ஆண்டாள் – சிரித்துக் கொண்டே மோனாலிசா ஓவியம் எல்லோருக்கும் தெரியுமோ இல்லியோ நாம் அன்றாடம் பயன்படுத்ற கத்திரிக்கோல எல்லாருக்கும் தெரியும்.

கௌரி – சிரித்துக் கொண்டே அதனால் இனிமேல் கத்திரிக் கோலைக் கண்டுபிடிச்ச லியோனார்டோ டாவின்சி தான் மோனாலிசா ஓவியத்தை வரைஞ்சார்னு சொல்லலாம்ங்கறீங்களா ? அடுத்தது யாரு வசுமதியா ?

வசுமதி – நயாகரா நீர்வீழ்ச்சி பற்றி நாம் எல்லோருக்கும் தெரியும். மிகப் பெரிய நீர்வீழ்ச்சி அது. அந்த நீர்வீழ்ச்சியில் சுமார் 10 ஆயிரம் ஆண்டுகளாக ஏற்பட்ட மண் அரிப்பு காரணமாக அதன் அடிப்பகுதியில் சுமார் 7 மைல் வரை பள்ளம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மங்களம் – சரி போதும்மா – நேரமாச்சு மீதிய அடுத்த சந்திப்பில தொடரலாம்.

அத்துடன் எல்லோரும் கலைகிறார்கள்

வாழ்த்துகிறோம்.

கார்காத்தார் சங்க மாநில கூட்டமைப்பின் மண்டலச்செயலர் திரு.கோ.வடிவேலு பிள்ளை திருமதி. லலிதா வடிவேலு பிள்ளை நல்லினையரின் திருமண நாள் பொன்விழா 03–07–2022 அன்று காலையில் முக்கிய உறவுகளுடன் திருக்கடையூர் திருக்கோயிலில் வழிபாடுகள் நடைபெற்றது. மாலையில் அன்னாரது இல்லத்தில் கார்குல உறவுகள், தெருவாசிகள், நண்பர்கள், கூடி வாழ்த்து மடல் அளித்து, சால்வைகள் அணிவித்து வாழ்த்துரை, புகழுரை வழங்கினர் விழா சிறப்பாகவும், எளிமையாகவும், நடைபெற்றது செம்பொன் நகர சங்கமும் வாழ்த்துகிறது..

விதி என்பது யாது?

தி. கபிர்தாஸ், சிதம்பரம். செல் : 9445473386

என்ன காரணத்தால் நாம் இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கிறோம்? இது இன்றைய நேற்றைய கேள்வி அல்ல. தொன்று தொட்டு கேட்கப்படும் கேள்வி. இப்போது அதற்கான விடைகளைக் காண முயல்வோம்.

நம் உள்ளத்தில் ஆசை உண்டாகிறது. அது பாசமாகமிளிர்கிறது.பின் அதுபந்தங்களில்உழல்கிறது. அதனால் அறிவு என்ன செய்வது எனத் தடுமாறுகிறது. அது ஏதோ முடிவெடுத்து, தகாத காரியங்களை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறது. அதனால் நாம் துன்பங்களை அனுபவிக்கிறோம். தீய செயல்களே துன்பத்திற்குக் காரணம் என ''விதி'' கூறுகிறது.

விதியை தவிற்க வேண்டுமென்றால் அறிவின் துணை நமக்குத் தேவை. தீயச் செயல்களைச் செய்யாமல் நல்லச் செயல்களையே நாம் செய்யலாமே. அது கொஞ்சம் கடினம்தான். முயற்சி திருவினையாக்குமே!

நல்லனவற்றிற்கு வெகுமதிகளும் உண்டு. இன்பத்தை நுகரும் சமயத்தில், இடையே சில விரும்பத்தகாதச் செயல்களையும் சேர்ந்து செய்துவிடுகிறோம். இது அனைவருக்கும் பொருந்தும். இந்த நன்மைகளோடு தீமைகளும் சேர்ந்துவிடுவதால் இன்பத் துன்ப கலப்புடைய ''பிறப்பு'' வந்து சேரும். பிறப்பானது நம்மை பெருங்கடலில் அழுத்தி கைகளில் விலங்கையும் மாட்டிவிடும். தீவினையை ''இரும்பு விலங்கு'' என்றும், நல்வினையை ''பொன் விலங்கு'' என்பார் ஆன்றோர்.

நல்வினைக்குப் பரிசு சொர்க்கம். தீவினைக்குப் பரிசு நரகம். நாம் செய்யும் இரு வினைகளுக்கு ஏற்ப அதன் பலன்களை அனுபவித்துவிட்டு, மீண்டும் இப்புவியில் பிறந்திடவும் வேண்டும். பாக்கி உள்ள வினைகளையும், இப்பிறப்பில் சேருகின்ற வினைகளையும் அனுபவிக்க வேண்டும். இதில் மிச்சமும் இருக்கும். அது அடுத்த பிறவிக்கு. பிறவி ஒரு சுழற்சி சிறைக்கூடம். பிறவியை தவிர்க்க முடியாது.

முன் ஜென்மத்தில் நான் என்ன பாவம் செய்தேனோ, இப்போது நரக வேதனைப்படுகிறேன் இப்படி ஒருவர். கடவுளே உனக்கு கண் இல்லையா? எனக்கு ஏன் இந்த கொடுமையைக் கொடுக்கிறாய்? இப்படி ஒருவர். இது என் தலை எழுத்து அனுபவித்து தான் ஆகவேண்டும் இப்படி ஒருவர். முன் செய்த வினை இப்போது என்னைத் தொடர்கிறது. இப்படி ஒருவர். இன்பம் என்ன, துன்பம் என்ன இரண்டையும் சம நோக்கத்தோடு அனுபவிக்க வேண்டும். விருப்பு வெறுப்பு கூடாது. இப்படி ஒருவர். இந்த வினைப்பயனுக்கு விதி, ஊழ், தலைவிதி, தலையெழுத்து எனப் பல பெயர்கள் உண்டு.

விதி வாழ்வியல்நெறி, உய்யும் நெறி என இருவகைப்படும். இந்த நெறியினை கடைப்படித்து பயன்பெற்றோர் மிகச் சிலரே. மக்கள் அமைதியாக வாழ அரசு பல சட்டங்களை கையாளுகிறது. நன்மை செய்தவர்களை பாராட்டியும், தீமை செய்தவர்களுக்கு தண்டனைகளையும் வழங்குகிறது. இதை நீதி எனக் கூறப்படுகிறது.

சில சமயங்களில் நீதி மீறப்படுவதும் உண்டு. ஒருவரின் செல்வாக்கு, அரசியல், பொருளாதாரம் இவற்றால் வரம்பு மீறி அவருக்குச் சாதகமாக அமைவதும்உண்டு. கொடியவன் தண்டனையிலிருந்து தப்பித்து விடுவதும் உண்டு. மிக நல்லவர்கள் துன்பங்களையே அனுபவிப்பதும் உண்டு. இதற்குக் முந்தையக் காரணங்கள், பிந்தய விளைவுகள் ஏதாவது இருக்க வேண்டும். இவர்களுக்கு முன்வினைப் பயன்கள் இப்பிறவியில் கைக்கொடுக்கிறது. இதைத்தான் விதி என்று ஆன்மீகவாதிகள் கூறுகிறார்கள்.

நல்வினைக்கு இன்பமும் தீவினைக்கு துன்பமும் அடைவதே சரி என்பது நடுநிலையாளர்களின் கருத்து. அதுவே நியதி. அதுவே சட்டம் அதுவே இறைமையின் நீதி. இதைத்தான் விதி எனப்படுகிறது.

வாழ்த்துகிறோம்

2021–2022ஆம் கல்வி ஆண்டில் சிறப்பாக தேர்வு பெற்ற கீழ்க்கண்ட மாணவ/மாணவிகளை வாழ்த்துகிறோம்.

R. ரேவதி	+2	580	சு. ரவிசந்திரன், அரியலூர்
S. சியாமளா தேவி	+2	587	C. சிவக்குமார், சீர்காழி
R. சிவரஞ்சனி	+2	597	K.S. ரவி, கோடாலிகருப்பூர்
S. சேதுராஜன்	10	469	ப. செந்தில், காட்டுமன்னார்குடி
S.V. அட்ஷயா	10	458	M.S. செந்தில்வைரவன் மண்ணிப்பள்ளம்
V. ஹரிப்பிரியா	CBSE +2	482	AST விஜயகுமார் கீ.ஆடூர்

அணு ஆயுதங்களும், அனைத்துலக அழிவும்

– வழிப்போக்கன்

உலக வெப்பமயமாதல், தீநுண்மி பரவல், சுற்றுச்சூழல் சீரழிவு, நெகிழிப் பயன்பாட்டின் தீய விளைவுகள், பருவ மாற்றங்கள், இயற்கைப் பேரிடர்கள், பேரழிவுகள் எனப் பல்வேறு பேராபத்து நிகழ்வுகளை எதிர்கொள்ளும் மாந்த இனத்தின் தலைமீது தொங்கிக் கொண்டிருக்கும் மற்றொரு பேராபத்து அணு ஆயுத சோதனை மற்றும் அதன் பரவல்.

அணு ஆயுதங்களை உலகம் முற்றிலும் ஒழிக்க வேண்டும்; இல்லை எனில் அவை உலகை ஒருநாள் முற்றிலும் ஒழித்துவிடும். இது உண்மையிலும் உண்மை. இதனைக் கருத்தில் கொண்டுதான் அணு ஆயுத சோதனை எதிர்ப்பு நாளை யு.என் ஓ– ஐக்கியநாடுகள் அமைப்பு ஆண்டுதோறும் ஆகஸ்ட் 29–ஐ உலக அணு ஆயுத சோதனை எதிர்ப்பு நாளாகக் கடைப்பிடிக்கிறது.

அணு ஆயுத சோதனைகள் மூன்று இடங்களில் நிகழ்த்தப்படுகின்றன. 1) அட்மாஸ்பியரிக் டெஸ்ட்ஸ் (atmospheric tests) 2) நீருக்கடியில் 3) நிலத்திற்கு அடியில். இதனை உயர்காற்று வெடிப்பு, வான்வழி வெடிப்பு, மேற்பரப்பு வெடிப்பு, நிலத்தடி மற்றும் நீருக்கடி வெடிப்பு என்றும் வகைப்படுத்தி உள்ளனர். 30,000 மீ க்கு மேல் (தரைக்கு மேல்) வெடிப்பது ஒரு சோதனையாகும்.

இச்சோதனைகள் எங்கு எவ்வாறு நடைபெற்றாலும் அவை மாந்தகுலத்திற்கு எதிரானவை! ஏன் அனைத்துயிர்களுக்கும் எதிரானவை. இச்சோதனை சுற்றுச்சூழலைச் சிதைக்கிறது. பூப்பந்தைச் சீரழிக்கிறது. 1945 சூலை 16–இல் அலமோகோர்டோ (Alamogordo) நியூ மெக்சிகோவில் உள்ள பாலைவனத்தில் அமெரிக்கா முதல் அணு ஆயுத சோதனையை நடத்தியது. 1945–1996 வரை 2053 அணு ஆயுதச்சோதனைகள் நடைபெற்றுள்ளன. 1996–க்குப் பின் நடந்தவை அறியப்படவில்லை. 2016–ல் வடகொரியா ஐந்து அணு ஆயுதச் சோதனைகளை நடத்தியது.

கசகஸ்தானும் அதனுடன் ஒத்த கருத்துள்ள நாடுகளும்ஒன்றுசேர்ந்து "உலக அணு ஆயுதசோதனை எதிர்ப்பு நாள்" INTERNATIONAL DAY AGAINST NUCLEAR TESTS" என்ற ஒரு தீர்மானத்தை UNGA (UN General Assembly) வழியே முன்மொழிந்து

நிறைவேற்றின. அந்த நாள் ஆகஸ்ட் 29. இதன் கோரிக்கை அணு ஆயுதமற்ற உலகினை விளங்கச் செய்வதே. உலக அமைதிக்கும் பாதுகாப்பிற்குமான விழிப்புணர்வினை உலக மக்களிடம் உருவாக்குவதே இந்த நாளின் குறிக்கோள்.

அணுக்கதிர் வீச்சு சொல்லிமாளா துன்பத்தையும், உயிரிழப்பையும், இயற்கைப் பேரழிவினையும், சுற்றுச்சூழலின் சீர்கேட்டினையும் விளைவிக்கிறது. பிறக்கும் அனைத்துயிர்களும் உடல் ஊனமுற்றவையாக, நோய் கொண்டவையாகவே பிறக்கின்றன. 1945–ஆகஸ்ட் 6–இல் ஜப்பானின் ஹிரோஷிமாவில் லிட்டில்பாய் (Little boy) – சிறுபையன் என்ற பெயர் கொண்ட அணு ஆயுதம் அமெரிக்காவால் வீசப்பட்டது. ஆகஸ்ட் 9–இல் 500 மீட்டர் உயரத்தில் நாகசாகியில் பேட்டி மேன் (Fatty man) என்னும் பெயர் கொண்ட இரண்டாவது அணு ஆயுதம் வீசப்பட்டது. 18 கி.மீ உயரம் தீ எழும்பியது. 6.7 ச.கி பரப்பு எரிந்து அழிந்தது.

இந்த அணுகுண்டு தரையிலிருந்து 580 மீட்டர் உயரத்தில் வெடித்தது. வெளிவந்த வெப்பம் 5000F கடுமையான கதிர்வீச்சு வெளிப்பட்டது. இரும்புக் கம்பங்கள், கான்கிரீட் கட்டிடடங்கள், கருங்கற்கள் யாவும் மெழுகென உருகி ஓடின. வெப்பக்கதிர்வீச்சால் முகத்திலிருந்த கண்கள் எல்லாம் கழன்று விழுந்தன. மாந்தரின் தோல் மரப்பட்டை உரிவதுபோல் வெந்து உரிந்தன. 4,000,00 மக்களும், ஏனைய எண்ணிலா உயிரினங்களும் உயிரிழந்தன. பசுமரங்கள் யாவும் தீப்பற்றி எரிந்து சாம்பலாயின. இன்று வரை இங்கு பிறக்கும் குழந்தைகள் அணுக்கதிர்வீச்சால் ஊனமுற்றுத்தான் பிறக்கின்றன.

சப்பானால், பேர்ல் (perl) துறைமுகம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து சினமுற்ற அமெரிக்கா

சப்பானுக்கு எச்சரிக்கை விடுத்தது. அதனைக் காதில் வாங்காத சப்பான் தொடர்ந்து சண்டையிட்டது. அதன் பின்னர்தான் அமெரிக்கா சப்பான் மீது அணுகுண்டுத் தாக்குதல் நடத்தியது.

உலகில் 30,000 க்கும் மேலான அணு ஆயுதங்கள் உள்ளன. இவை பயன்படுத்தப்பட்டால் உலகே ஒன்றுமில்லாமல் போய்விடும்.

அணுகுண்டுகள் ஒரு புறம் என்றால் அணு உலைகள் மறுபுறம் 1986 ஏப்ரல் 26–இல் ரஷியாவில் செர்னோபில் அணுஉலை வெடித்த நிலையில் அங்கு ஏற்பட்ட விபரீதம் சொல்லிமாளா. ஒரு சாதாராண கட்டெறும்பு கதிர்வீச்சால் அரை அடி நீளம் ஆன கொடுமையை என்னவென்பது. இந்த ஓர் எடுத்துக்காட்டு போதும்.

2011–இல் அதே போல் சப்பானின் புகுஷிமா அணு உலை விபத்து.

இன்று இந்தியாவில் 22 அணு உலைகள் உள்ளன. மேலும் எட்டு உலைகளை அமைத்து வருகிறது இந்திய அரசு.

சப்பானில் புகுஷிமா விபத்திற்குப்பின்னர் 42–இல் 39 அணுஉலைகள் மூடப்பட்டுவிட்டன, அங்கு.

இவை மிகவும் கொடி ஆபத்தானவை. உலகெங்கும் புதிய அணு உலைகள் தொடங்கப்படவில்லை. மாறாக பல மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் உள்ள கூடங்குளம் முறையான பாதுகாப்புடன் இல்லை என்பது அறிவியலாளர்கள் கருத்து. அதன் கழிவுகளைக் கொட்டக் கூட வழியில்லாமல் செய்தது தமிழ் மக்கள் செய்த பாவம்.

அணு ஆயுதங்களும் அணுஉலைகளும் மாந்தகுலத்து எதிரிகள். இவை களையப்படவேண்டும். அனைத்துலக மக்களும் ஒருங்கிணைந்தால்தான் அணுவிபத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவியலும். அணு ஆயுதச் சோதனையை, அணு ஆயுதங்களை, அணு உலைகளை அவற்றால் வரும் விளைவுகளைக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்துவோம். எதிர்ப்பினைக் கடைபிடிப்போம். அணு ஆயுதங்களைச் செயலிழக்கச் செய்யுமாறு வற்புறுத்துவோம்.

SRI ANJANYAR THUNAI

GSTIN : 33AAKFC0941L1ZI
TAN No. : CMBC05827D

C. CHITRASEKAR, B.Sc., (M.D.)
Cell : 93645 65546

CS TEXTILE PROCESS

Office : NO. 208, PUTHUNAGAR 7TH STREET,
NALLUR, KANGEYAM ROAD,
TIRUPUR - 641 606.

Website : **www.cstextiles.in**
Email : **chitra@cstextiles.in**
Factory : **Kasipalayam, Tirupur**
Our Buyers : **1. FILA (UK)**
2. RELIANCE (INDIA)
3. ADIDAS (GERMANY)
4. LIFESTYLE (INDIA)

"QUALITY IS OUR LIFE"

அறுபதிலும் வாழ்க்கையைத் துவங்க முடியும்

மேலையூர் ச.அன்பழகன், துரைப்பாக்கம்,

சென்னை 97. போன் 98413 73184

1–8–2010 தேதியிட்ட ஹிந்து நாளிதழில், "Life can begin at 60, it is all in your hands'' என்ற தலைப்பில் திரு. எஸ். ராமச்சந்திரன் என்பவர் எழுதியிருந்த ஒரு கட்டுரை வெளியாகிருந்தது. முதியவர்களுக்குப் பல பயனுள்ள கருத்துக்களைக் கூறியிருந்த அந்த கட்டுரையை பலர் படித்திருக்கக் கூடும். அதனை படிக்காத சிலருக்காக அதன் தமிழாக்கத்தைக் கொடுத்துள்ளேன்.

பெரும்பாலான மக்கள் 60 வயதைக் கடந்த பிறகு, உடல் ஆரோக்கியம் காரணமாகவும், அவர்களுடைய பாதுகாப்பு கருதியும், அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுவந்த முக்கியத்துவம் குறைந்து கொண்டே வருவதாக அவர்கள் கருதுவதாலும், மகிழ்ச்சியை இழந்து மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள். வாழ்வின் அடிப்படைக் கோட்பாடுகளைப் புரிந்து கொண்டு அவற்றைப் பின்பற்றினால் அவர்கள் மேலே சொன்னவாறு மகிழ்ச்சியை இழந்து மன உளைச்சலுக்கு ஆளாக வேண்டாம். பணி ஓய்வு பெற்ற பிறகும் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையைத் தொடரப் பயன்படும் பத்து அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. எனக்கு வயதாகிவிட்டது என்று கூறாதீர்கள்

Chronological, Biological, & Psychological என்ற மூன்று வகைகளில் வயதைக் கணக்கிடலாம்.

முதலாவது வகையில், வயது வரிசை கிரமமாக, அதாவது நம்முடைய பிறந்த தேதி அடிப்படையில் கணக்கிடப் படுகிறது.

இரண்டாவது வகை உயிரியல் தொடர்பானது. நம் உடல் உடல் ஆரோக்கியத்தின் பெயரில் கணக்கிடப்படுவது.

மூன்றாவது மனதளவில் நாம் எந்த அளவு வலிமையாகவோ அல்லது முதுமையாகவோ இருக்கிறோமோ அந்த அடிப்படையில் கணக்கிடப்படுவது.

அவற்றில் முதல் வகையை கட்டுப்படுத்துவது நம் கையில் இல்லை. இரண்டாவது வகையில் நல்ல தரமான உணவு, தக்க உடற்பயிற்சி மற்றும் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருத்தல் ஆகியவற்றின் மூலம் நம்முடைய உடல் ஆரோக்கியத்தை நன்றாகப் பேண முடியும். அதே போல் எப்போதும் மகிழ்ச்சி மற்றும் முற்போக்கான மனப் போக்கு மூலம் மூன்றாது வகை வயதை குறைக்க முடியும்.

2. உடல் ஆரோக்கியமே உண்மையான செல்வம் :

உங்களுக்கு மிகவும் நெருக்கமான உற்றார் உறவினர்களை நீங்கள் உண்மையாகவே நேசித்தால், உங்கள் உடல் ஆரோக்கியத்தை பேணிக் காப்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் அவர்களுக்கு ஒரு சுமையாக மாறுவதைத் தவிர்க்க முடியும். ஆண்டுக்கொரு முறை உடல் ஆரோக்கியப் பரிசோதனை மேற்கொண்டு மருத்துவர்கள் கொடுக்கும் மருந்துகளைத் தவறாமல் உட்கொள்ள வேண்டும். மருத்துவக் காப்பீட்டுப் பாலிஸி எடுத்துக் கொள்ள வேண்டும் .

3. பணம் முக்கியம் :

அன்றாட வாழ்வின் அடிப்படைத்தேவைகளுக்கும், உடல் ரோக்கியத்தைப் பேணுவதற்கும், பாதுகாப்பிற்கும் குடும்பத்தில் கௌரவத்தைப்பெறவும் பணம் மிகவும் அவசியம். உங்களுடைய பிள்ளைகளுக்காகவே இருந்தாலும் உங்கள் சக்திக்கு மீறி செலவு செய்யாதீர்கள். அவர்களுக்காகவே இதுவரை வாழ்ந்துவிட்டீர்கள். உங்கள் வாழ்க்கைத் துணைவியுடன் மன நிறைவான வாழ்க்கையை அனுபவிப்பதற்கு இது நேரம். உங்கள் பிள்ளைகள் பெண்கள் மற்றும் இதர வாரிசுகள் நன்றியுள்ளவர்களாக இருந்து உங்களைப் பேணிப் பாதுகாப்பார்களானால் நீங்கள் மிகவும் அதிர்ஷ்டசாலி. இது நிச்சயம் நடந்து விடும் என்று எப்போதும் எதிர்பார்க்கக் கூடாது.

4. ஓய்வும், பொழுது போக்கும் :

போதுமான ஓய்வும், பொழுது போக்கு அம்சங்களும் மனிதனின் உடல், ஆரோக்கியத்துக்கு மிக அவசியம். நல்ல இசையை நேசியுங்கள் உலகின் இனிமையான பகுதியை உணருங்கள் கடவுளை நம்புங்கள். நல்ல தூக்கத்தை பெறுங்கள்.

5. காலம் பொன் போன்றது :

நேரம் மிக அருமையானது. அதை வீணடிக்கக் கூடாது. அது கிட்டதட்ட குதிரையின் கடிவாளத்தைப் போன்றது. அந்த கடிவாளம் உங்கள் கையில் இருக்கும் வரை குதிரையை உங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைக்கலாம். அதைப்போல்தான் நேரத்தையும் வீணடிக்காமல் உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் நீங்கள் மறுபடியும் பிறந்த தாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

நேற்று என்பது ரத்து செய்யப்பட்ட காசோலை

நாளை என்பது உறுதி மொழிச் சீட்டு

இன்று என்பதுதான் ரொக்கப்பணம்

இதை லாபகரமாகப் பயன் படுத்தி அந்த நொடியில் வாழுங்கள்.

6. மாற்றம் மட்டுமே நிரந்தரமானது :

மாற்றங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். அது தவிர்க்க இயலாதது. அவற்றால் உண்டாகும் நன்மைகளை உணர வேண்டுமானால் நாம் இந்த மாற்றத்துடன் இணைந்து விட வேண்டும். மாற்றம் பல இனிமையான விஷயங்களைக் கொண்டு வந்துள்ளது. அவற்றையெல்லாம் அனுபவிக்கும் வாய்ப்பு பெற்ற நம்முடைய குழந்தைகள் அதிர்ஷ்டசாலிகள் என்று நாம் மகிழ வேண்டும்.

7. அறிவு புகட்டும் சுய நலம் :

அடிப்படையில் நாம் எல்லேரும் சுய நல வாதிகள்தான். நாம் எதைச் செய்தாலும் அதற்குப் பதிலாக ஏதேனும் எதிர்பாக்கிறோம். நமக்கு ஆதரவாக இருந்தவர்களிடம் நாம் நன்றி உடையவர்களாக இருக்க வேண்டும். எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பார்க்காமல், மற்றவர்களுக்கு நாம் செய்யும் நல்ல காரியங்களால் நம் மனதுக்கு ஏற்படும் மகிழ்ச்சியும், மனநிறைவுமே நமது குறிகோளாக இருக்க வேண்டும்.

8. மறப்போம் மன்னிப்போம் :

மற்றவர்கள் செய்யும் தவறுகளுக்காக நீங்கள் அதிகமாக அலட்டிக் கொள்ளாதீர்கள். பிறர் நம்மை ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டும் அளவிற்கு நாம் புனிதமானவர்களோ அல்லது தெய்வநிலை சார்ந்தவர்களோ அல்ல. ஆனாலும் நம்முடைய உடல் ஆரோக்கியத்தை மனதில் கொண்டு பிறர் நமக்குச் செய்யும் தவறுகளை மறப்போம் மன்னிப்போம். இல்லாவிட்டால் நம்முடைய ரத்த அழுத்தத்தை நாமே அதிகப் படுத்திக் கொள்ள வேண்டியிருக்கும்.

9. ஒவ்வொன்றுக்கும் ஒரு காரணம் இருக்கும் :

வாழ்க்கையை அது இருக்கும் நிலையிலேயே எடுத்துக்கொள்ளுங்கள். அதே போல் உங்களையும் மற்றவர்களையும் அவரவர் இருக்கும் நிலையிலேயே ஏற்றுக் கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் அவரவர் வழியில் சாயானவர்களாகவும் தனித்தன்மை உடையவர்களாகவும் இருப்பார்கள்.

10. மரண பயத்தை வெல்லுங்கள் :

இயற்கையின் நியதிப்படி என்றாவது ஒரு நாள் நாம் அனைவரும் அந்த உலகை விட்டுச் செல்லவேண்டியவர்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். இருந்தாலும் நாம் மரணத்தைக் கண்டு அஞ்சுகிறோம். நம்முடைய துணைவியோ/ துணைவரோ அல்லது நம்முடைய குழந்தைகளோ நம்முடைய இழப்பைத் தாங்கிக் கொள்ளமாட்டார்கள் என்று நினைக்கிறோம். ஆனால் உண்மை நிலவரம் என்னவென்றால் யாரும் நம்மறைவுக்காக இறந்துவிடப் போவதில்லை. அவ்வாறு செய்வதும் தவறு. யாருக்கும் இவர்களுடைய உயிரை மாய்த்துக் கொள்ளும் உரிமை கிடையாது. நம்முடைய மறைவுக்குப் பிறகு சில காலம் இவர்கள் மனச் சோர்வுடன் இருப்பார்கள். காலம் அவர்களுடைய மன அழுத்தத்தைப் போக்கி அவர்களுடைய வாழ்க்கையைத் தொடரச் செய்து விடும்.

நன்றி 1–8–2010 தேதியிட்ட ஹிண்டு நாளிதளில் வந்த கட்டுரையின் தமிழாக்கம்.

கார்காத்தார் திருமண சேவையில் 18 ஆண்டுகள்!

SHRIRAM MATRIMONY SERVICES

ஸ்ரீராம் திருமண தகவல் நிலையம்

SMS Service available

76/1, வ.உ.சி. தெரு, சிதம்பரம்- 608001. Mob: 94862 23030



இப்போது இணையத்தில் உங்கள் SHRIRAM MATRIMONY

www.shriammatrimony.org

e-mail: matrimonycdm@gmail.com

ஒரு முறை பதிவுக்கட்டணம் மட்டும் - திருமணம் முடியும் வரை இணையதளத்தில் வரன்களை பார்வையிடலாம், கட்டுப்பாடுகள் இல்லை

SMS Service-க்கு தனிக்கட்டணம்.

சக்தி பீடங்கள் - ஓர் பயணம்

தொடர்ச்சி.

மாலை நாங்கள் பீஷ்ம குண்ட் என்ற இடத்துக்கும், பிரம்மசரோவருக்கும் சென்றோம். குருஷேத்திரத்திற்கு அருகே நரகட்டாரி எனும் கிராமத்தில் பீஷ்மகுண்ட் உள்ளது. குண்ட் எனில் சிறிய குளம். இங்கு பீஷ்ம பிதாமகர், பாண்டவர்கள், இராமர், துர்க்கை, அனுமன் போன்றவர்கள் சந்நிதியில் அருள்கின்றனர். 26 அடி உயர ஆஞ்சநேயரும் உள்ளார். பீஷ்மர் அம்பு படுக்கையில் படுத்திருக்கும் ஒரு அழகிய சிற்பம் உள்ளது. 18 நாட்கள் நடைபெற்ற மகாபாரதப் போரில் 10–ஆம் நாள், அர்ஜுனன் சிகண்டியுடன் போர்களத்திற்கு வந்து பீஷ்மரை வீழ்த்துகிறான். 363 அம்புகள் கொண்ட அம்புப்படுக்கையில், அவர் 56 நாட்கள் உத்தராயணம் வருவதற்காக காத்திருக்கிறார். அவருக்கு தாகமெடுக்க, பலரும் நீர் கொண்டு வந்தும், அவர் அர்ஜுனனை நோக்க அவரது அன்னையான கங்கையைக் காண விழைவதை உணர்ந்து அம்பு விட, கங்கை இங்கு ஊற்றெடுத்து அவரது வேட்கையைத் தணிவிக்கிறாள். அத்திருக்குளத்தில் நமது பாதங்கள் படாமல், நீரை எடுத்து தலையில் தெளித்துக் கொள்ள வேண்டும் என்றனர். பீஷ்மர் ஏகாதசி அன்று உயிர் துறந்ததால், உத்தராயணத்தின் முதல் ஏகாதசி பீஷ்ம ஏகாதசி எனப்படுகிறது.

அங்கு தரிசித்த பின், பிரம்ம சரோவர் சென்றோம். பிரம்மதேவர் இங்கு யாகம் செய்து, இத்திருக்குளத்தை உருவாக்கியுள்ளார். குளம் அல்ல; இது ஒரு மிகப் பெரிய ஏரி. 4000 x 2000 x 15 அடி அளவு கொண்ட நீர் நிலை. சூரிய கிரகணத்தன்று சுமார் 20 லட்சம் மக்கள் இங்கு தீர்த்தமாடுவதாக கூறினர். பக்ரா கால்வாய், சட்லெஜ்நதி, வியாச நதிகள் இங்கு கூடுகிறது. இங்கு ஓரிடத்தில் குந்தி படித்துறை எனவும், மற்றொரு இடத்தில் தேவகி படித்துறை எனவும் குறிக்கப்பட்டிருந்தது. குளக்கரையின் ஒரு புறத்தின் மேற்கூரையின் பக்கலில் மகாபாரதச் சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன. நடுவில் ஒரு பாலம். அது வழியே மறுபுறம் செல்லின், சர்வேஷ்வர் கோவில் உள்ளது. இக்கோவிலில் பிரம்மா வழிபட்டதாக கூறப்படுகிறது. சிவன் சந்நிதியும், அருகில் அம்மன் சந்நிதியும் உள்ளது. மாலை 6 மணிக்கு அதன் எதிர்க்கரையில் பிரம்மசரோவருக்கு ஆரத்தி காண்பிக்கப்படுகிறது. மற்றுமொரு பாலம் மூலம் மறுபக்கம் சென்று ஆரத்தி கண்டு, அருகிலிருந்த ஒரு அம்மன் கோவிலையும் மற்றும் சிறு சிறு கோவில்களில் திரௌபதி தர்பார், அனுமன், கிருஷ்ணன் சந்நிதிகளைத் தரிசித்து தங்கியிருந்த இடம் திரும்பினோம். எங்களின் பயணம் ஒரு நாள் முன்னதாக முடிந்ததால், பயண ஏற்பாட்டாளர்கள் ஹரித்துவாரையும் இணைத்து, இரவு 10.30 மணிக்கு ஹரித்துவார் கிளம்பி, நடுவில் சிறிது இளைப்பாறி, காலை சுமார் 4.30க்கு ஹரித்துவார் அடைந்தோம். அதிகாலை கங்கையில் நீராடினோம்.

காலை சுமார் 8 மணிக்கு சக்தி தலமான மாயாதேவி ஆலயம் சென்றோம். அங்கிருந்த தலைமைப் பெண் துறவி அக்கோவிலின் மகிமையை விளக்கினார். "சக்தி தலங்கள் தோன்றியதே இங்கிருந்துதான். இங்குதான் சதிதேவி அக்னி குண்டத்தில் தன்னை மாய்த்துக் கொண்டதால், ஈசன் தேவியின் உடலை இங்கிருந்து எடுத்து உக்ரத்துடன் சுழன்றாடியதாக" கூறினார். பின் அருகிலிருந்த கண்ணாடி கோவிலுக்குச் சென்றோம். நாங்கள் 12 வருடங்களுக்கு முன் பார்த்ததை விட அநேக சிலைகள் புதிதாக வைக்கப்பட்டிருந்தன. அர்ஜுனன் ரதம், கோபியருடன் கிருஷ்ணன், ராதாகிருஷ்ணன் போன்ற சிலைகள் பலவாக காட்சியளிப்பது மிகவும் அழகு. அங்கிருந்து கேபிள் காரில் மானசாதேவி சென்றோம். மானசாதேவி கோவிலும் மிகவும் மாற்றம் அடைந்துள்ளது. ஏகப்பட்ட அம்மன் சந்நிதிகள். எது முக்கிய சந்நிதி என்பதே தெரியவில்லை. மிகவும் சிரமத்துடன் தேவியைத் தரிசித்தோம். எதிரில் பொட்டு அம்மன் சந்நிதி. அந்த அம்மனிடம் வேண்டி, வேண்டுதல் பலித்ததும் பொட்டு சார்த்த வேண்டும் என்றனர். மானசாதேவியின் தரிசனம் முடிந்து, கீழிறங்கி கடைத்தெருவில் சில மணி நேரங்கள் செலவிட்டு, பின் கங்கா ஆர்த்தி காணச்சென்றோம். அதுவும் மாற்றம் அடைந்துள்ளது. அது 'கோவிட்' கைங்கர்யம். முன்பு எல்லா சந்நிதிகளிலும் அடுக்கு தீபாரதனையும், கங்கை முழுதும் அகல் விளக்குகளின் தீபமும் ஒளிவிட நம் மெய் சிலிர்த்து விடும். இப்போது கங்கைக்கு நான்கு சந்நிதிகளில் பாலாபிஷேகம் செய்து அடுக்கு தீபாராதனை காட்டுகிறார்கள். அதன் பின் ஹோட்டலுக்கு வந்து அடுத்த நாள் அதிகாலை 4.30 மணிக்கு புது டில்லி கிளம்பி சுமார் காலை 9 மணிக்கு அக்ஷர்தாம் வந்தோம். அன்றைய தினம் ஹோலி பண்டிகை என்பதால் விடுமுறை என்று தெரிந்ததும், ராஜ்காட் என்று மகாத்மா காந்தியின் சமாதி கண்டு, நண்பகல் 2 மணிக்கு விமானநிலையம் அடைந்து, 5 மணி வானூர்தி மூலம் சென்னை வந்தடைந்தோம்.

பயணம் மிக, மிக இனிமையாக முடிவுற்றதற்கு எல்லாம் வல்ல இறைவனுக்கு மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்தோம். மற்றும் சிறப்புற பயணம் அமைய இரவு பகல் பாராமல் உழைத்த சூப்பர் யாத்ராவின் குழுவின் உரிமையாளர்களான திரு. சாதிக்பாய், அவரது மகன் உமர் மற்றும் குழுவின் அங்கத்தினர்களுக்கும், பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனருக்கும் எங்கள் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து விடைபெற்றோம் !

திருமதி. வனஜா இளங்கோவன்.
6369291286

குரோம்பேட்டை கார்காத்தார் சங்கம்

மங்கல சந்திப்பு - 2022 (15-ஆம் ஆண்டு)

அன்புடையீர், வணக்கம் !

நீங்கள் எப்போதும் போல் ஆவலுடன் எதிர்பார்க்கும் குரோம்பேட்டை கார்காத்தார் சங்கத்தால் நடத்தப்படும் மங்கல சந்திப்பு இவ்வாண்டு.

நாள் : 02–10–2022 ஞாயிற்றுக்கிழமை,
நேரம் : காலை 9.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரை,
இடம் : ஸ்ரீ விநாயகாஸ்.... ஸ்ரீ கணபதி ஹால், A/c R.P. ரோடு, நேரு நகர், குரோம்பேட்டை, சென்னை–600044. (M.I.T. மேம்பால இறக்கத்தில்)

என்ற முகவரியில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்பும் கார்குல சொந்தங்கள் பதிவுக்கட்டணமாக ரூ. 500/– (ரூபாய் ஐந்நூறு மட்டும்) கூரியர் / அஞ்சல் செலவு உள்பட, கீழ்க்கண்ட வங்கிக் கணக்கில் செலுத்தி, செலுத்தியதற்கான விபரத்தையும் கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின்படி மணமகன் / மணமகள் விபரங்களை பூர்த்தி செய்து 15–09–2022–க்குள் மங்கல சந்திப்பு அமைப்பாளருக்கு Whatsapp மூலம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இவ்விழாவில் நேரடியாக கலந்து கொள்ள வர இயலாதவர்களுக்கு மங்கல சந்திப்பு புத்தகம் அவரவருடைய இல்லத்திற்கே கூரியர் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

வங்கி விவரம் :

S.B. Account No. 935934700
Name : "Chromepet Karkathar Association"
Indian Bank, Chitlapakkam Branch,
IFSC No.IDIB000C115

தொடர்புக்கு :

மங்கல சந்திப்பு அமைப்பாளர் :
Sri. R.M. சத்தியமூர்த்தி,
Cell : 9551517888 (Whatsapp)
9566049865

இரு மனங்கள் இணையும் திருமணங்கள் விரைவாய் நடத்திட

பங்கு கொள்வீர் ! பயன் பெறுவீர் !!

படிவம்

1. பெயர் : (செல்வன் / செல்வி)
2. பிறந்த தேதி
3. உயரம் (செ.மீ–ல்)
4. கோத்திரம்
5. நட்சத்திரம் / ராசி
6. கல்வி
7. பணி விபரம்
8. இடம்
9. ஊதியம் (ஆண்டிற்கு)
10. தந்தை பெயர்
11. பணி
12. பூர்வீகம்
13. தாயார் பெயர்
14. பணி
15. பூர்வீகம்
16. உடன் பிறப்பு
17. தொலைபேசி எண்
18. தொடர்பு முகவரி
19. இதர தகவல்

பதிவு செய்ய கடைசி நாள் : 15-09-2022

R.S. அகோரம்	J. தீபன்	V. ஆறுமுகம்
தலைவர்.	செயலர்.	பொருளாளர்.
Cell : 9445230732	Cell : 9659632577	Cell : 9940081814

மற்றும் சங்கப் பொறுப்பாளர்கள்.

வாழ்க சதாபிஷேக தம்பதியர்

சிதம்பரம் வட்டம், தலைக்குளம்

திரு. **சிவப்பிரகாசம் பிள்ளை** – திருமதி **ஜானகி** தம்பதியரின் சதாபிஷேக விழா திருக்கடையூர் அருள்மிகு அபிராமி அம்மன் சமேத அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் 11.07.2022 திங்கட்கிழமை காலை 9.00 – 10.30 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்து வாழ்த்து பெற்ற, வாழ்த்திய அனைத்து உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

S. செந்தில்குமார் - அம்பிகா
பேபி **ஷன்னா**
புவனகிரி

S. நடராஜன் - சிவகாமசுந்தரி
செல்வி **ரம்யா**
புவனகிரி

மணமகள் தேவை

பெயர்	செல்வன் R. பாலாஜி
படிப்பு	B.E. (EEE)
வேலை	Senior Analyst, TATA Communications (TCTS), Chennai Rs. 4,50,000 / PA
பிறந்த தேதி	02.03.1992
உயரம்	170 cm
நட்சத்திரம்	அவிட்டம் 2ம் பாதம்
கோத்திரம்	கொழுமுட
பூர்வீகம்	வரிச்சிக்குடி, காரைக்கால்
தகப்பனார்	S. இராஜமோகன்
தாயார்	R. விஜயலெட்சுமி (திருச்சிற்றம்பலம், மயிலாடுதுறை)
முகவரி	109/64, ஜான் செல்வராஜ் நகர், கும்பகோணம் Cell : 94436 50806, 99441 55804

பெயர்	செல்வன் இ. ஆடலரசன்
படிப்பு	B.E. (ECE), M.B.A.,
வேலை	Asst. Manager, Currently Working in BDO Rise, Bangalore. Will relocate to the United kingdom by the end of August, 2022 Current package 18 Lakhs per Annum, UK Package 48 Lakhs / PA
பிறந்த தேதி	26.09.1993
உயரம்	169 cm
நட்சத்திரம்	திருவோணம்
கோத்திரம்	மானந்துட
பூர்வீகம்	உதயநத்தம்
தகப்பனார்	க. இளங்கோவன், ஜோதிடர் & உரிமையாளர் – ஆடல் கேபிள் விஷன்
தாயார்	இ. செந்தாமரை, சிதம்பரம்(இல்லத்தரசி)
முகவரி	4/779-1, கோலேரியம்மன் தெரு, உதயநத்தம் & PO, கோடாலிகருப்பூர் (S.O), அரியலூர் (DT) Cell : 98424 91274, 94436 65610
விருப்பம்	B.E. அல்லது சமபடிப்பு படித்த, வெளிநாட்டில் பணிபுரியும் அல்லது பணிபுரிய விருப்பமுள்ள மணப்பெண் தேவை.

மணமகள் தேவை

பெயர் செல்வன் AL.N. அழகுநாச்சியப்பன் என்ற ராஜேஷ்
படிப்பு B.E. Mechanical,
வேலை Sr. Engineer, L& T Technology Services
பிறந்த தேதி 14.10.1991
உயரம் 5'-7"
நட்சத்திரம் மூலம்
கோத்திரம் குழவிடையான்
பூர்வீகம் திருப்புன்கூர்
தகப்பனார் AL. பாலாஜி நாகராஜன், B.E. Mechinical (Late)
தாயார் V. லதா, M.A., B.Ed., M.Phil., (Teacher Chennai)
முகவரி 90, வன்னியர் 2வது தெரு,
ஜனனி ஹோம்ஸ், 1st Floor,
சூளைமேடு, சென்னை – 600 094.
Cell : 82202 99611, 94863 39507
98405 14706
விருப்பம் படித்த, பணியில் உள்ள வரன்

பெயர் செல்வன் ரெ. சிவராமன்
படிப்பு B.Tech - Marine Engineering
வேலை Third Engineer, Omega Ship Management
பிறந்த தேதி 17.07.1991
உயரம் 183 cm
நட்சத்திரம் அஸ்தம்
கோத்திரம் கொங்குராய
பூர்வீகம் செந்துறை
தகப்பனார் தெய்வத்திரு. சு. ரெங்கநாதன் பிள்ளை, ஆசிரியர்
தாயார் தெய்வத்திரு. ரெ. இராஜலெட்சுமி, பெண்ணாடம்
முகவரி தெற்கு தெரு,
செந்துறை
Cell : 99520 56030 (W), 99439 49239,
95669 47917

கார்காத்தார் ஒப்புரவு ஆசிரியர் மேலையூர் ச. அன்பழகன் - அ. பர்வதவர்த்தினி தம்பதியரின் சதாபிஷேக விழா

மயிலாடுதுறை மாவட்டம், கருவாழக்கரை மேலையூர் தெய்வத்திரு. க. சுபாபதி பிள்ளை – தெய்வத்திருமதி. ச. கோகிலாம்பாள் அவர்களின் குமாரரும், தேத்தாக்குடி தெய்வத்திரு. க. சேதுராமன் பிள்ளை – தெய்வத்திருமதி. சே. தர்மாம்பாள் அவர்களின் குமாரத்தியும் ஆகிய

எங்களது பெற்றோர்

மேலையூர் திரு. **ச. அன்பழகன்** – திருமதி **அ. பர்வதவர்த்தினி**

தம்பதியரின்

சதாபிஷேக விழா சென்னை, பள்ளிக்கரணை, ஸ்ரீ கிருஷ்ண மஹாலில், 22.07.2022 அன்று இனிதே நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்தும் வாழ்த்து அனுப்பியும் சிறப்பித்த அனைவருக்கும் எங்கள் நன்றி.

மகன் குடும்பம்
அபர்னா இரவீந்திரன்
ப. இரவீந்திரன்
நவீன்குமார்
தருண்

மகன் குடும்பம்
அ.குமரன்
சுஜாதா குமரன்
ஆகாஷ்
கற்பகரக்ஷா ஆகாஷ்
அபிஷேக்

மணமகள் தேவை

பெயர் செல்வன் **S.P. ஆனந்த நடராஜன்**
படிப்பு B.E. (Mechanical)
வேலை Senior Software Engineer @ Mercari, Bengaluru
CTC - Rs. 35 LPA

பிறந்த தேதி 27.10.1992
உயரம் 168 cm
நட்சத்திரம் விசாகம்
கோத்திரம் பூவனுட
பூர்வீகம் கு.பூவிழுந்தநல்லூர்
காட்டுமன்னார்கோவில் வட்டம்
தகப்பனார் **S. பூங்குன்றன்,** தலைமை ஆசிரியர்
தாயார் **P. சாந்தி,** இல்லத்தரசி
(சாத்துக்கூடல், விருத்தாசலம் வட்டம்)
முகவரி 47, 2nd Cross Street, VSR Nagar,
Chidambaram - 608 001.
Cell : 94866 66731, 82487 59150
E-mail : shanpoonkunran@gmail.com
விருப்பம் சமபடிப்பு, பணியில் உள்ள வரன்.

பெயர் செல்வன் **S. ஸ்ரீராம்**
படிப்பு B.E. (EEE), M.SE (Master of Science in Engineering) in USA
வேலை Bank Bazaar in I.T Sector
(Senior Quality Engineer)
Rs. 10 Lakhs/PA

பிறந்த தேதி 22.06.1993
உயரம் 6' - 1"
நட்சத்திரம் புனர்பூசம்
கோத்திரம் தூதுக்குட
பூர்வீகம் கும்பகோணம்
தகப்பனார் **S. செல்வராஜ்**
(Retd. Bank Employee)
தாயார் **S. விமலா** (Home Maker)
முகவரி S1, Plot No. 2, Sai Sannathi,
15th Street,
Lakshmipuram Extension,
West Tambaram, Chennai - 600 045.
Cell : 8903139736

பெயர் செல்வன் **S.S. Vignesh**
படிப்பு B.E., MBA.,
வேலை Principal Consultant,
Inspirage, Bangalore
Rs. 23.5 Lakhs / PA
பிறந்த தேதி 06.06.1992
உயரம் 167 cm
நட்சத்திரம் மகம்
கோத்திரம் குமரகுடை
பூர்வீகம் சேரகுளம் – திருநெல்வேலி
தகப்பனார் **S.T. சங்கரசுப்பிரமணியன்**
(Trading)
தாயார் **S. மங்கையற்கரசி** (Homemaker)
முகவரி 2/280R, S.B.I. காலனி,
சிவகாசி – 626 124.
Cell : 94866 63615, 88707 79022,
99521 63056

பெயர் செல்வன் **M. அருண்ராஜா**
படிப்பு B.Tech. (IT),
வேலை Sr. Executive,
Mohan's Diabetic Specialities
Pondicherry
Rs. 2.4 Lakhs / PA

பிறந்த தேதி 26.10.1990
உயரம் 185 cm
நட்சத்திரம் உத்திராடம்
கோத்திரம் மணக்குட
பூர்வீகம் தலைக்குளம் (சிதம்பரம்)
தகப்பனார் **L. முரளிதரன்**
தாயார் **M. உஷா** (இலையூர் குடவாசல்)
முகவரி நெ. 58/35, சின்னப்பன் தெரு,
மஞ்சக்குப்பம்,
கடலூர் – 607 001.
Cell : 97874 23994, 95854 50788
விருப்பம் குடும்பத்திற்கு ஏற்ற வரன்.

மணமகன் / மணமகள் தேவை

பெயர் செல்வன் **கா. வருண் நேரு**
படிப்பு B.Tech (IT)
வேலை Specialist - Software Engineering
L & T Infotech, Chennai
Rs. 12 Lakhs / PA
பிறந்த தேதி 22.11.1986
உயரம் 166 cm
நட்சத்திரம் பூசம்
கோத்திரம் எரவுட
பூர்வீகம் இறையூர் (பெண்ணாடம்)
தகப்பனார் **மு. கார்த்திகேயன்**
தாயார் **கா. தனலட்சுமி**
(செந்துறை)
முகவரி 174/2, கொத்தட்டை ரோடு,
இறையூர் – 606 111.
கடலூர் மாவட்டம்
Cell : 99419 38426 / 91763 27234
E-mail : dhanamkarthi76@gmail.com

பெயர் செல்வி **ச. அபிராமி**
படிப்பு B.E. (CSE)
வேலை IBM Bangalore
பிறந்த தேதி 25.05.1998
உயரம் 5' - 6"
நட்சத்திரம் கார்த்திகை 3ம் பாதம்
கோத்திரம் தொழுவுடையார்
பூர்வீகம் சத்திரப்பட்டி
தகப்பனார் **T. சரவணன்,** B.Sc., B.Ed.,
சுயதொழில் (மெடிக்கல்)
தாயார் **S. சீத்தாலெட்சுமி,** (2nd Grade Librarian)
முகவரி 6/32, வடுகப்பட்டி,
பழையபாளயம் (PO).
மருங்காபுரி (Tk)
திருச்சி மாவட்டம்
PIN– 621 314
Cell : 99445 50581

பெயர் செல்வன் **S. ராம்குமார்**
படிப்பு B.E., M.B.A.,
வேலை City Union Bank, Kumbakonam
பிறந்த தேதி 19.06.1994
உயரம் 5' - 7"
நட்சத்திரம் சுவாதி
கோத்திரம் காவனுட
பூர்வீகம் கீழ்புளியங்குடி
தகப்பனார் **R. சேகர்,** NLC India Ltd.,
தாயார் **R. கலாவதி,** Secretary
(PACCS, Kulllanchavdi, Cuddalore Dist.)
முகவரி B-4, சிப்பாய் தெரு,
வட்டம் 2, நெய்வேலி–1
கடலூர் மாவட்டம் – 607 801.
Cell : 94432 81323, 94427 46949
விருப்பம் சமபடிப்பு நல்ல குணமுள்ள வரன்.

அமரர் ஆக்கூர் R.K. பிள்ளை நூற்றாண்டு விழா

1922 - 2022

நாள் : 16.07.2022 சனிக்கிழமை மாலை

இடம் : செம்பொன்னார்கோவில், விவேகானந்தர் வீதி,
சுந்தர கணபதி நிலைய வளாகம்.

ந. ராஜரெத்தினம் பிள்ளை

நல்லாசிரியர் இரா. செல்வக்குமார்

மு. சபாநாயகம் பிள்ளை

செ. கருணாநிதி பிள்ளை

வழக்கறிஞர் K. ராமலிங்கம்பிள்ளை

கோ. வடிவேலு பிள்ளை

M.C.K. ராமநாதன் பிள்ளை

B. லெட்சுமணன் பிள்ளை

ச.பா. வரராஜன் பிள்ளை

M.C. செல்வராஜ் பிள்ளை

க. சண்முகம் பிள்ளை

ம. சிங்காரவேலு பிள்ளை

கோ. முருகையன் பிள்ளை

ஞா. செல்வக்குமார் பிள்ளை

பா. இராஜேந்திரன் பிள்ளை

கணபதி நடனம்பிள்ளை

அமரர், ஆக்கூர் ஆர் கே. பிள்ளை நூற்றாண்டு விழா

16.07.22022 அன்று செம்பொன் ஒன்றிய கார்காத்தார் கூட்டமைப்பு சார்பாக செம்பொன் நகர சுந்தர கணபதி நிலைய வளாகத்தில் அமரர் ஆக்கூர் R. கல்யாணசுந்தரம் நினைவரங்கத்தில் நடைபெற்றது.

ஆக்கூர் அமரர் R. கல்யாணசுந்தரம் பிள்ளை நூற்றாண்டு விழா செம்பொன் நகர சங்க சிறப்புத்தலைவர் திரு. மு. சபாநாயகம் பிள்ளை தலைமையில் மகளிர் அணியில் பத்து பேர் குத்துவிளக்கு ஏற்றிட பரசலூர் திரு. க. சண்முகம் பிள்ளை இறைவணக்கம் பாடிட கோலாகலமாகத் தொடங்கியது. முன்னாள் மாநில துணைத்தலைவர் திரு. கணபதி நடனம் பிள்ளை தனது வரவேற்புரையில் 27–05–1978–ல் கோவையில் மாநில சங்கம் உருவானதும் பின்னர் 06–08–1978–ல் மாநில தலைவராக தேர்ந்தெடுக்கப்பெற்ற மேலையூர் தாசில்பண்னை திரு. R. இராஜசேகரன் பிள்ளை அவர்களால் மாநிலம் எங்கும் கிளைச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பெற்ற பொழுது முதலாவதாக உருவான சங்கம் செம்பொன் ஒன்றிய சங்கம் என்றும் அதன் முதல் தலைவராக ஆக்கூர் திரு. R. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்களும் செயலராக மேமாத்தூர் திரு. M. சேதுராம பிள்ளை அவர்களும் தேர்ந்தெடுக்கப்பெற்றதையும் கூறி அவர்களது செயல்களின் சிறப்பினைக் கூறினார்கள். மேலும் 06–03–1991 அன்று திரு. ஆர்.கே. பிள்ளை அவர்கள் இறையடி இணையும் வரை ஒன்றிய சங்கத்தின் தலைவராக செயலாற்றியதுடன் மாநில சங்கத்தால் ஒப்புரவு இதழ் வெளிவரவும், மெய்கண்டார் ITI., உருவாகவும் செம்பொன் ஒன்றிய சங்கத்தின் செயல்பாடுகள் அமைந்தது பற்றி கூறி அன்னாருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவதை செம்பொன் ஒன்றிய சங்கம் மிகவும் பெருமையாகக் கருதுகிறது என்று கூறினார்கள்.

விழாவில் தலைவர் திரு. மு. சபாநாயகம் பிள்ளை மூத்த உறுப்பினர் திரு. S. சீத்தாராம பிள்ளை, தலைச்சங்காடு திரு. சொ. கருணாநிதி பிள்ளை, கீழப்பெரும்பள்ளம் திரு. கோ. முருகையன் பிள்ளை, பூதனூர் R. கிருஷ்ணசாமி பிள்ளை, மண்டலச்செயலர் திரு. கோ. வடிவேலு பிள்ளை, முன்னாள் மண்டலச் செயலர் திரு. ரெ. கனகசபை பிள்ளை, பரசலூர் க. சண்முகம் பிள்ளை ஆக்கூர் மூத்த உறுப்பினர் திரு. ந. ராஜரெத்தினம் பிள்ளை மற்றும் திரு. பா. ராஜேந்திரன் பிள்ளை, ஆக்கூர் சங்க தலைவர் திரு. ஞா. செல்வக்குமார் ஆகியோர் அமரர் ஆக்கூர் R.K. பிள்ளையின் சிறப்பு இயல்புகளை சிறப்பாக எடுத்துரைத்தனர். பின்னர் மயிலாடுதுறை நல்லாசிரியர், புலவர் இரா. செல்வக்குமார் அவர்கள் அமரர் R.K. பிள்ளையின் சிறப்புகளை நயம்பட விரிவாக எடுத்துரைத்தது மிகமிகச் சிறப்பாக இருந்தது.

அமரர் ஆக்கூர் ஆர்.கே. பிள்ளை தனது கடின உழைப்பால் முன்னேறியவர்கள் என்றும், சிறந்த விவசாயியாக, அஞ்சலக அதிகாரியாக, நிதிநிறுவன இயக்குநராக, ஆணி தொழிற்சாலை அதிபராக மயிலாடுதுறை ரோட்டரி சங்க உறுப்பினராக, வட்டார காங்கிரஸ் கட்சி தலைவராக, சைவ நெறிச்செம்மலாக, தருமை ஆதீன கர்த்தரால் போற்றப்பெற்றவராக, கார்குலச் செம்மலாக, செயல் வீரராக வாழ்நாளில் திகழ்ந்தார்கள் என்பதை உரையாற்றியோர் எடுத்துரைத்தனர். இறுதியில் ஏற்புரை வழங்கிய R.K. பிள்ளையின் குமாரர்கள் திரு. Dr. க. பாலகிருஷ்ண பிள்ளை, வழக்கறிஞர் திரு. க. ராமலிங்கம் பிள்ளை இருவரும் தந்தையார் பற்றிய நினைவலைகளை பகிர்ந்து கொண்டதுடன் தந்தையின் நூற்றாண்டுவிழாவை ஏற்றுப்போற்றிய செம்பொன் ஒன்றிய சங்கத்திற்கும், செம்பொன் நகர சங்கத்திற்கும் பாராட்டுகளையும், நன்றியினையும் தெரிவித்துக்கொண்டார்கள்.

விழாவில் செம்பொன் ஒன்றியத்தில் உள்ள கிராம சங்கப்பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும், மயிலாடுதுறை, பூம்புகார் மேலையூர், மணிக்கிராமம், இளையமுது கூடம், ராதாநல்லூர், சங்கப் பொருப்பாளர்களும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். நிறைவாக செம்பொன் நகர சங்க பொருளாளர் பேராசிரியர் திரு. ம.சி. செல்வராஜ் பிள்ளை நன்றி கூறி விழா இரவு 8.00 மணிக்கு நூற்றாண்டுவிழா இனிதே நிறைவு பெற்றது.

விழாவில் நூற்று முப்பது ஆடவர்களும், அறுபது மகளிரும் சிறுவர் சிறுமிகளும் கலந்து கொண்டனர். விழாமேடையும், அரங்கமும், சுற்றுப்புறமும் வண்ணமின் விளக்குகளால் சிறப்பாக அலங்கரிக்கப்பெற்றிருந்தது. வருகை தந்த அனைவருக்கும் மாலை இனிப்பு அவல், சுண்டல், தேநீர் வழங்கியதுடன், இரவு அறுசுவை கூடிய சிற்றுண்டியும் பாலும் அளிக்கப்பெற்றது. மிகமிக குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பெற்ற இவ்விழா அனைவரும் பாராட்டும் வகையில் அமைந்தது இறைவன் திருவருளேயாகும்.

M.C.K. ராமநாதன் பிள்ளை, ஒன்றியச் செயலாளர், 9442820061

மணமகன் / மணமகள் தேவை

முக்கிய குறிப்பு : எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 1/8 செல்வி **C. சக்திஅபிராமி** பூரம் வேளா பூர்வீகம் : சிதம்பரம்	28.02.83 5' - 3"	M.C.A.,		திரு. N. சந்திரசேகரன் பிள்ளை, 32, வ.உ.சி. தெரு, சிதம்பரம் – 608 001. Cell : 94867 74883
B 2/8 செல்வி **மு. திவ்யபிரியா** கேட்டை 2ம் பாதம் வஞ்சினமுட பூர்வீகம் : செந்துறை – அரியலூர் (Dt) விருப்பம் : டிகிரி முடித்த நல்ல பணியில் உள்ள வரன்	02.06.96 5' - 4"	B.A. (English)		திரு. ச. முருகேசன் பிள்ளை, 1/53, நடுத் தெரு, வஞ்சினபுரம் (PO), செந்துறை (Tk), அரியலூர் (DT) – 621 714, Cell : 96263 97559 (Whatsapp) 94869 67149, 85319 86109
B 3/8 செல்வி **ப. திரிபுரசுந்தரி** பூசம் 4ம் பாதம் தென்னவராய பூர்வீகம் : சாத்தநத்தம் விருப்பம் : பணியில் உள்ள வரன்	03.11.96 5'- 11"	B.C.A.,	CSS Corp. Chennai Rs. 35,000/PM	திரு. P. பழனிவேல், சாத்தநத்தம், திட்டக்குடி வட்டம், Cell : 95007 90802, 79040 77494
B 4/8 செல்வி **Dr. S. கிநபா** மிருகசீரிடம் பல்லவராய பூர்வீகம் : மயிலாடுதுறை விருப்பம் : MBBS, M.D., M.S படித்த வரன்.	11.02.95 166 cm	MBBS.., M.S. (Opthal),		திரு. பா. சபாரத்தினம், L.12.12 (ப்ளாட் 41) எ.டி.எஸ். நகர், காந்தி கிராமம் (PO) திண்டுக்கல் – 624 302. Cell : 8838424209, 6374347764 E-mail : sabadbc@gmail.com
B 5/8 செல்வி **M. மீனா** சதயம் சாத்தனுட பூர்வீகம் : பெருஞ்சேரி, மயிலாடுதுறை விருப்பம் : சமபடிப்பு, வேலையில் உள்ள வரன்	08.06.96 162 cm	B.Tech. (IT)	TCS, Chennai	திரு. K. மனோகர், 1/102A, மெயின் ரோடு, பெருஞ்சேரி – 609 404. Cell : 94452 25199, 63833 05449
B 6/8 செல்வி **அபர்ணா .கோ** மூலம் 4ம் பாதம் நெப்புக்குட பூர்வீகம் : கண்ணங்குடி	01.06.99 162 cm	B.Sc. (Nursing), Medical Coding	CREW (P) Ltd. (Project)	திரு. கோவிந்தராஜ், வடக்கு தெரு, காவனூர், ஸ்ரீமுஷ்ணம் தாலுக்கா, கடலூர் மாவட்டம் Cell : 96989 68547
B 7/8 செல்வி **S. அனஹா** ஆயில்யம் மணக்குட பூர்வீகம் : கீழகடம்பூர் விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன்	01.05.2001 168 cm	B.A. (English) - B.Ed. (1 Year)		திரு. C. செந்தில்குமார், RASSAC ILLAM, வடக்கு சென்னி நத்தம், சேத்தியாத் தோப்பு PIN - 608 702. Cell : 93448 43027
B 8/8 செல்வி **மோ. அபிநயா** ஆயில்யம் 3–ம் பாதம் சணமுடை பூர்வீகம் : உடையார் பாளையம் விருப்பம் : சமபடிப்பு, நல்ல பணியில் உள்ள வரன்.	21.09.95 5' - 4"	B.E. (EEE)	Production Editor Sinjore Technologies, Thanjavur.	திரு. கோ. மோகன் பிள்ளை, A/2, சீத்தா நகர், சிவாஜி நகர் வழி, தஞ்சாவூர் – 613 001. Cell : 94424 75666, 94424 75777

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 9/8 செல்வி **மு. சிந்துஜா** பூராடம் காளிங்கராய ஆடுர் விருப்பம் : சமபடிப்பு, உள்ளநாடு / வெளிநாடு பணியில் உள்ள வரன்.	29.10.95 175 cm	B.E. (CSE)	Software Engineer Singapore	திரு. முரளிநாராயணன், 22, V.K.A. நகர், அம்மாபேட்டை, சிதம்பரம் – 608 401. Cell : 94868 39645, 94432 62945
B 10/8 செல்வி **R. கிருத்திகா** கார்த்திகை 3ம் பாதம் வில்வராய பூர்வீகம் : உடையார்குடி (காட்டுமன்னார்குடி) விருப்பம் : நல்ல குணமுள்ள டிகிரி முடித்த தனியார் / அரசுத் துறையில் உள்ள வரன்.	18.11.94 5' - 2"	B.E. COA TTC	ஆசிரியர் தட்டச்சு கணினி	திரு. S. ரவிச்சந்திரன், சுவாமி தட்டச்சு பயிலகம், 14, சிவன் சன்னதித் தெரு, உடையார்குடி – 608 301. காட்டுமன்னார்கோவில் Cell : 93606 86451
B 11/8 செல்வி **ப. ஸ்ரீநிதி** ரேவதி உத்திரக்குட பூர்வீகம் : கடக்கம் (திருவாளப்புத்தூர்) குறிப்பு : 7ல் இராகு, கேது திசையுள்ள வரன் மட்டும்.	12.08.98 158 cm	B.Tech (IT)	Senior Systems Engineer at Infosys Pvt. Ltd. Rs. 5.2 Lakhs / PA	திரு. தி. பழமலை, 11/224, ஆஞ்சநேயபுரம் முதல் தெரு, காக்களூர் தொழிற்பேட்டை (PO), திருவள்ளூர் – 602 003. Cell : 94445 63618, 94432 70311 (W)
B 12/8 செல்வி **சௌ. விமலா** விசாகம் 3ம் பாதம் தென்னவராய பூர்வீகம் : நாகமங்கலம்	31.05.96 169 cm	B.E. (CSE)	CTS, Chennai	திரு. R. சௌந்திரராஜன் பிள்ளை, கீழத் தெரு, நாகமங்கலம், அரியலூர் Tk & PO, Cell : 97872 60973, 97867 48980
B 13/8 செல்வி **கௌ. ரோஷிணி** ரோஹிணி அரசுடையார் பூர்வீகம் : தஞ்சாவூர் விருப்பம் : Bangalore or Bangaloreக்கு Transfer வசதி உள்ள சமபடிப்பு, நல்ல வேலையில் உள்ள வரன்	16.09.95 154 cm	B.E. (Computer Science) M.Sc., (Cyber Forensics and Information Security	Associate in MNC (Bangalore)	திரு. N.Gowrishankar 14/47, Valluvar Street, Jagannatha Nagar, Arumbakkam, Chennai - 600 106. Cell : 96772 33791 Phone : 044–2363 8284
B 14/8 செல்வி **R. உமாமகேஸ்வரி** ஆயில்யம் 4ம் பாதம் வஞ்சினமுட பூர்வீகம் : ஓகளூர் விருப்பம் : பணியில் உள்ள வரன்	28.06.98 5' - 8"	B.E. E.C.E.	-	திரு. R. ராஜேந்திரன் பிள்ளை, 1/69, பெருமாள் கோயில் தெரு, ஓகளூர் (PO), குன்னம் (Tk), பெரம்பலூர் (Dt.) - 621 108. Cell : 96553 59610, 91590 47132
B 15/8 செல்வி **S. நித்யா** அஸ்தம் சாத்துக்குட பூர்வீகம் : சாத்தநத்தம் விருப்பம் : பணியில் உள்ள வரன்	29.07.98	M.C.A.,	-	திரு. N. செல்வராசு, கிருஷ்ணசாமி நகர், சிவன் கோவில் எதிரில், ஆவினங்குடி & PO, திட்டக்குடி TK Cell : 96269 10617
B 16/8 செல்வி **K. அருணா** சதயம் குருகுலராய பூர்வீகம் : குழுமூர்	05.10.95 155 cm	M.A., M.A., DLL & AL, MBA.,	Asst. Manager HDFC Bank	திரு. G. குமார், First Floor, குமரவேல் காம்ப்ளக்ஸ், வதிட்டபுரம் மெயின் ரோடு, திட்டக்குடி – 606 106. Cell : 98947 38241

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 1/8 செல்வன் **C. யோகேஷ்வரன்** பரணி வேளா பூர்வீகம் : சிதம்பரம்	03.07.75 5' - 9"	M.Com. Auditor		திரு. N. சந்திரசேகரன் பிள்ளை, 32, வ.உ.சி. தெரு, சிதம்பரம் – 608 001. Cell : 94867 74883
G 2/8 செல்வன் **Veerabahu N.C.** Rohini - 3rd Patham Sathanudai பூர்வீகம் : Rajavallipuram	26.02.96 166 cm	B.Tech., PGDM	Executive Partner Management Borderless Access Pvt. Ltd., Rs. 4 Lakhs / PA	திருமதி Muthu N.C 2A, Bharathi Nagar Main Road, Kovilpatti - 628 501. Cell : 90804 06017
G 3/8 செல்வன் **V. பாலாஜி** பூசம் கொங்கராய பூர்வீகம் : மெய்யாத்தூர்	19.06.96	Dip (Agri),	முத்தையா தொழில் நுட்பகல்லூரி ஆய்வக தொழில் நுட்ப உதவியாளர் Rs. 25000/PM	திரு. N. வெங்கடேசன், 431, நேதாஜி சாலை, சிவஜோதி நகர், C. தண்டேஸ்வரநல்லூர் சிதம்பரம். Cell : 89252 64251, 94878 82094, 63858 44543
G 4/8 செல்வன் **V. குகன்** ரேவதி கனகராய விருப்பம் : வெளிநாட்டில் பணிபுரிய விருப்பமுள்ள வரன்.	26.12.90 5' - 8"	B.E., M.S.,	Clock Works, Analytics, Boston U.S.A.	திரு. தங்க வேல்முருகன், 1, 21வது அவின்யூ 95வது தெரு, அசோக் நகர், சென்னை – 600 083. Cell : 94424 24787, 94420 62275
G5/8 செல்வன் **S. பாலமுருகன்** பரணி 4ம் பாதம் காவனுட பூர்வீகம் : முத்துசேர்வாமடம், மீன்சுருட்டி விருப்பம் : டிகிரி (அ) டிப்ளோமா படித்த பெண்	17.09.92 178 cm	EEE (Diploma) BBA	CREW Pvt. Ltd., Chennai Rs. 30,000/PM	திரு. B. சபாநாயகம், 99, வடக்கு தெரு, மீன்சுருட்டி, உடையார்பாளையம், அரியலூர் (DT) Cell : 63697 99240, 95245 17917
G 6/8 செல்வன் **கா. சித்தார்த்** பூரம் 4ம் பாதம் வேளா பூர்வீகம் : திருநகரி (சீர்காழி) விருப்பம் : பணியில் உள்ள வரன்	02.05.93 183 cm	MBA / PGDM (From XIBM) B.Tech (EEE)	Product Manager Publicis SAPIENT Rs. 27 Lakhs/PA	திரு. கி. கார்த்திகேயன், B/4, குகாஸ் அடுக்குமாடி, 1, கிழக்கு அவின்யு, திருவள்ளுவர் சாலை, திருவான்மியூர், சென்னை – 600 041. Cell : 94441 57798, 94431 87699
G 7/8 செல்வன் **மோ. ராதாகிருஷ்ணன்** பூராடம் 3ம் பாதம் வேளா பூர்வீகம் : காவனூர் – விருத்தாசலம்	11.11.91 168 cm	B.E. (ECE)	Bank of Amercia, Tidal Park, Chennai Rs. 13.5 Lakhs/PA	திரு. T. மோகன், 337, செம்பருத்தி பூ தெரு, பெரியார் நகர் தெற்கு, விருத்தாசலம் – 606 001. Cell : 88709 62218, 90038 78328
G 8/8 செல்வன் **ரா. சிவக்குமார்** கார்த்திகை 4ம் பாதம் காங்கேய பூர்வீகம் : அம்பாள்புரம், சிதம்பரம்	08.12.92 160 cm	M.Sc., M.Phil., B.Ed., Ph.D. (Mathematics)	உதவி பேராசிரியர் ஸ்ரீ மணக்குள விநாயகர் இஞ்சினியரிங் கல்லூரி, புதுச்சேரி Rs. 20000/PM	திரு. சி. ராதா, மனை எண். 73, R.K. City, பார்வதிபுரம், குறிஞ்சிபாடி (Tk), வடலூர் – 607 303. Cell : 86676 46837, 96591 03626, 94876 20611

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 9/8 செல்வன் **கே. மணிவேல்** கேட்டை முதுனுட பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் (சிதம்பரம்)	15.02.93 6' - 00"	B.E. (EEE),	வணிகவரி துறை, சேலம்	திரு. T. கேசவன், 5/234-2, புதிய அம்பேத்கர் நகர், ஜாகிர் ரெட்டிபட்டி, சேலம் – 636 302. Cell : 94422 59692
G 10/8 செல்வன் **S. கௌசிக்** அவிட்டம் 2ம் பாதம் நன்னுட பூர்வீகம் : மழவராயநல்லூர் விருப்பம் : வெளிநாட்டில் பணிபுரிய விருப்பமுள்ள சமபடிப்பு உள்ள வரன்.	21.05.95 182 cm	M.B.A, B.Tech (Civil)	Camp Qatar	திரு. V. சங்கர், 53, தேவதாஸ் நகர், விபீஷ்ணபுரம், சிதம்பரம். Cell : 70100 41488, 94862 23517
G 11/8 செல்வன் **R. Karthikeyan** Karthigai Kothanuda பூர்வீகம் : Mullaiyur	28.08.94 5' - 10"	B.Tech., (Computer Science)	ZOHO Corporation Chennai Rs. 18 Lakhs /PA	திரு. T. ராமலிங்கம், 1/183, Perumal Koil Street, Mullaiyur, Sendurai Taluk, Ariyalur Dist. Cell : 99655 57000
G 12/8 செல்வன் **பா. சிவராமன்** உத்திரட்டாதி செம்பதரிய பூர்வீகம் : நெடுவாசல்	09.04.94	B.Com.,	தனியார் துறை சீர்காழி	திரு. பாலசுந்தரம், 16, T.P.S. நகர், தென்பாதி, சீர்காழி, Cell : 99524 71960
G 13/8 செல்வன் **J. பாலாஜி** உத்திராடம் குளத்துட பூர்வீகம் : வரவுகுடி விருப்பம் : படித்த வேலையில் உள்ள / இல்லாத வரன்.	11.03.91 183 cm	B.E. (ECE),	Senior Software Engineer, SPINEBIZ Services Pvt. Ltd., Ambattur, Chennai Rs. 15 Lakhs /PA	திருமதி J. ஜோதி, தையல்நாயகி இல்லம், 7A/1, சர்வமானிய தெரு, தென்பாதி, சீர்காழி – 609 111. Cell : 75981 05720
G 14/8 செல்வன் **M. செந்தில்குமார்** பூரம் வங்காரமுட பூர்வீகம் : மணல்மேடு விருப்பம் : படித்த US செல்ல விருப்பமுள்ள வரன். குறிப்பு : மறுமணம்	27.04.88 5' - 7"	B.Tech (CS)	Voyager Digitals inc. California (US) $ 150,000	திரு. T. மனோகரன், 296/2, அவன்யு 9, கூட்டுறவு நகர், வள்ளாலகரம் (POST), மயிலாடுதுறை – 609 118. Cell : 99409 73583, 94876 73583
G 15/8 செல்வன் **G. சுந்தரேசன்** மிருசீரிடம் 2ம் பாதம் வேளா பூர்வீகம் : கொண்டத்தூர் விருப்பம் : நல்ல குணமுள்ள வரன்.	03.05.95 160 cm	B.E. (Mech)	Business விநாயகம் ஸ்டோர்ஸ் ஸ்டேஷனரி, ஜெராக்ஸ், கேம் சென்டர், மொபைல் சர்வீஸ் பெண்ணாடம் Rs. 25,000/PM	திரு. P.G. ராமமூர்த்தி, ராணி மெடிக்கல்ஸ், 150, கடை வீதி, பெண்ணாடம் – 606 105. கடலூர் (DT) Cell : 99761 77910, 91596 54000



சிறுவர் பகுதி

தயாரிப்பு **தஞ்சை தியாகு**
தொ.பேசி: 044–26532182
Email: thiagu1943@gmail.com

ஒரு தவறு செய்யும் மன நிலையே அடுத்தடுத்த தவறுகளை அழைத்துக்கொண்டு வருகிறது.

வெற்றி நிச்சயம்.

ஒரு மரங் கொத்திப்பறவை,தன் கூரிய அலகால் டொக் டொக்கென்று மரத்தைக் கொத்திக் கொண்டே அந்த மரத்தின் மேல் தாவித் தாவி ஏறியது.அதைப்பார்த்த ஒரு மனிதன், மூடப்பறவையே ,எதற்காக மரம் முழுவதையும் கொத்திக் கொண்டிருக்கிறாய் ? இது வீண் வேலை யல்லவா ? என்று கேட்டான்.அதற்கு அந்தப் பறவை,மனிதனே நான் என் உணவைத் தேடுகிறேன்.தேடினால் நிச்சயம் கிடைக்கும் என்றது. அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே,தொடர்ந்து மரத்தைக் கொத்தி,மரத்தில் ஓட்டை போட்டு,அதற்குள் பதுங்கியிருந்த புழுக்களை எடுத்து உண்ண ஆரம்பித்தது.தனது உணவைச் சாப்பிட்டு முடித்த பிறகு அந்த மனிதனைப் பார்த்து,மனிதனே,நீயும் தன்னம்பிக்கையோடு தேடு....மரத்திலும் மண்ணிலும் நீரிலும் ஏன் எல்லா இடங்களிலும் தேடு.உனக்கும் ஏதாவது கிடைக்கும் என்றது.

செய்யும் செயலை முழு ஈடுபாட்டுடனும் முழு நம்பிக்கையுடனும் செய்தால் வெற்றி நிச்சயம்.

எறும்புகள் மட்டும் பேசினால்!

எப்போதுமே இரவு பகல் வேறுபாடின்றி தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் எறும்புகளின் ஊர்வலமே நமக்கு ஓர் உபதேசத்தைத்தான் தருகின்றது.அவை ஒரு திசையில் நகர்வதென்றால் தீர்மானமாக நகரும். வழியில் ஏதேனும் இடற்பாடு,முட்டுக்கட்டை தட்டுப்பட்டால் ஒன்று அதன் மீது ஏறிச்செல்லும்,அல்லது அடியில் நுழைந்தாவது செல்லும்.குளிர்,மழைக் காலத்திற்கான உணவினை கோடையிலேயே எறும்புகள் சேமிக்கும் பழக்கம் கொண்டவை என்பது தெரியும்.அவற்றிடம் எவ்வளவு சேமிப்பீர்கள் என்று கேட்டால் ,

எவ்வளவு முடியுமோ அவ்வளவு! என்றுதான் பதிலிருக்கும்.தனது தகுதியை இவை குறைத்து மதிப்பிடுவதில்லை. இவை மட்டும் பேசினால் இவை நமக்குச் சொல்லும் உபதேசங்களாக இவைதான் இருக்கும்.

1. தீர்மானித்த திசையிலேயே பயணம் செய்யுங்கள்.
2. தடைகளைத்தாண்டிச்செல்லுங்கள்.
3. எதிர் காலத்தைத்திட்டமிடுங்கள்.
4. எவ்வளவு முடியுமோ அவ்வளவும் செய்யுங்கள்.
5. உங்களை உயர்வாகவே மதிப்பிடுங்கள்.
6. நீங்கள் எதை விரும்புகிறீர்களோ அதையே பெறுகிறீர்கள.மனிதர்களிடம் தெய்வ குணம்,கெட்ட குணம் இரண்டுமே உண்டு.எதை நீங்கள் பெறவேண்டுமோ அதை மட்டும் பாருங்கள்.
7. இந்த பூமியில் ஒவ்வோர் உயிரும் ஏதாவதொரு நோக்கத்துடன்தான் படைக்கப்பட்டிருக்கிறது.எந்தக்காரியமும் இன்றி யாரும் பிறப்பதில்லை.

கணக்குப்புதிர்:

1. ஒரு ஹெக்டர் நிலம் என்பது.....சமம்.
2. ஒரு நாளைக்கு எத்தனை நிமிடங்கள் ?
3. ஒரு மில்லியன் என்பது .....ஆயிரங்கள் கொண்டது.
4. ஒரு ஆண்டில் 30 நாட்களுக்கு அதிகமான நாட்கள் கொண்ட மாதங்கள் எத்தனை ?

குறள்:236: ***தோன்றின் புகழொடு தோன்றுக அஃது இலார்***
தோன்றின் தோன்றாமை நன்று.

மனிதனாகப்பிறக்க விரும்பினால் புகழுடன் தோன்றுவது நல்லது. இல்லையேல் மனிதப் பிறவியாய் தோன்றாமலிருப்பது நலம்.

நீங்களும் மாஜிக் செய்யலாமே!

பாலாகும் தண்ணீர்

ஒரு பிளாஸ்டிக் ஜக்கை எடுத்துக் கொள்ளவும்.அதை தலைகீழாக கவிழத்துக் காட்டி ஜக்கில் ஒன்றும் இல்லை என்பதை உறுதிப்படுத்தவும்.அடுத்து அவர்கள் பார்வை படும்படி ஜக்கில் தண்ணீர் ஊற்றவும்.தண்ணீருடன் இருக்கும் ஜக்கை எல்லாரிடமும் காட்டவும்.

பிறகு ஒரு வெள்ளை கர்சீப் எடுத்து அந்த ஜக்கில் உள்ளே விட்டு நனைத்து வெளியே எடுத்துக் காட்டவும். இப்போது கர்சீப்பிலிருந்து தண்ணீர் சொட்டும். பிறகு பார்வை யாளர்களிடம் இப்போது இந்த ஜக்கில் இருக்கும் தண்ணீர் பாலாக மாறும் பாருங்கள் என்று சொல்லிவிட்டு,மேஜிக்! மேஜிக்! தண்ணீர் பாலாக மாறும் பாருங்கள் என்று சொல்லிவிட்டு ஓ! க்ரீம்! கிரீம் என்று சொல்லி மீண்டும் கர்சீப்பை தண்ணீரில் விட்டு நனைத்து வெளியே எடுக்கவும்.

இப்போது கர்சீப்பிலிருந்து பால் சொட்டு சொட்டாக சொட்டும்..ஜக்கில் இருக்கும்தண்ணீரும்பாலாகமாறிஇருக்கும்.இதைப்பார்க்கும்பார்வையாளர்கள் வியப்படைவார்கள. பார்வையாளர்களிடமிருந்து ஒருவரை அழைத்து ஒரு சொட்டு பாலை நாக்கில் விட்டு சுவைத்துப் பார்க்கச் சொல்லவும்.

மேஜிக் ரகசியம்: வெள்ளை கர்சீப்பில் பாதி அளவை பாலில் நனைத்து வெயிலில் காயவைத்து எடுத்து வைக்கவேண்டும்.அந்தக் கர்சீப்பை மேஜிக் செய்யும்போது முதலில் பால் நனையாத பகுதி வெளியேயும் பால் நனைந்த பகுதியை உள்ளங்கையில் சுருட்டி வைத்துக் கொள்ளவேண்டும்.முதல் பகுதி கர்சீப்பை தண்ணீரில் நனைக்க வேண்டும். இரண்டாம்முறை நனைக்கும்போது பால் நனைத்து காயவைத்த பகுதி உள்ளங்கையில் சுருட்டி உள்ளதை தண்ணீரில் நனைக்கவேண்டும்.பால் நனைந்த கர்சீப்பின் பகுதி தண்ணீரில் நனைந்ததும் அதில் உள்ள பால் தண்ணீரில் கலந்து பாலாகத் தெரியும்.

விடுகதைகள்

1. வெள்ளி ரூபாய் துள்ளி விழும்.அது என்ன ?
2. வீடில்லா நகரங்கள்,நீரில்லா சமுத்திரங்கள்.எங்கே ?
3. வானத்துக்கும் பூமிக்கும் ஒரே கம்பி.அது என்ன ?
4. விண்ணைச் சிரிக்கச் செய்வான்,கண்ணைப் பரிக்கச் செய்வான்.யார் ?
5. காற்றையே தரும் மரம்.என்ன மரம் ?
6. கையைப் பிடித்தார்.காசு கேட்டார்.யார் ?
7. அடிப்பார், பிடிக்கமாட்டார்.யார் அது ?
8. பூ இருக்க பிஞ்சைத் தின்றேன்.அது என்ன ?
9. வீட்டைச் சுற்றி வேலி.அது என்ன ?
10. தேடிக்கிடந்த இரையை கூடிக்கூடி உண்பான்.அவன் யார் ?



இவர்கள் சொன்னார்கள்

1. ஒருவர் துன்பப் படும்போது நிபந்தனை ஏதுமின்றி உதவுவதுதான் நட்பு. – மகாத்மா காந்தி
2. இந்த உலகமே உன்னை திரும்பிப் பார்க்க வேண்டுமென்றால் நீ யாரையும் திரும்பிப்பார்க்காதே! – ஹிட்லர்
3. தோல்விகளில் இருந்து நீ எதையும் கற்றுக்கொள்ளவில்லையென்றால் அதுதான் உண்மையான தோல்வி! – ஏ.ஆர்.ரகுமான்
4. வெற்றி குறித்த நம் பார்வை திண்ணமாக இருந்தால்,தோல்வி நம்மை பாதிக்காது.
   தன்னம்பிக்கையும் தளராத உழைப்பும்தான் தோல்வி எனும் நோயைக் கொல்வதற்கான மருந்து.
   துவண்டு விடாதீர்கள், முயன்று கொண்டே இருங்கள், தோல்வியிடம் நீங்களே உங்களை விட்டுக்கொடுக்காதீர்கள்.
   கனவு காணுங்கள்,ஆனால் கனவு என்பது தூக்கத்தில் காண்பது அல்ல.உன்னை தூங்க விடாமல் செய்வது எதுவோ அதுவே கனவு, – டாக்டர்.ஏ.பி.ஜே.அப்துல் கலாம்.

காலத்தே எழுங்கள்!

தபால் போக்குவரத்து இல்லாத அந்தக் காலத்தில் அரசாங்க தூதுவர்களே கடிதங்களை சுமந்துச் செல்வர். எட்டாம் ஹென்றியின் காலத்தில் தபால்துறை பைகளின்மீது ...வேகமாச் செல், வேகமாகச் செல், உன்னுடைய உயிரை காப்பாற்றிக் கொள்ள வேகமாகச் செல்! என எழுதப் பட்டிருக்குமாம்.அவர்கள் வழியில் தாமதித்தால் அவர்களுக்கு என்ன தண்டனை தெரியுமா? சிரச்சேதம் தவிர வேறில்லை. நாம் சில மணி நேரத்தில் கடந்து செல்லும் தூரத்தை மாதக்கணக்கில் நடந்து செல்லவேண்டியிருந்த அந்தக் காலத்திலும் கூட அனாவசியத் தாமத மானது ஒரு பெரும் குற்றமாகக் கருதப்பட்டது. வரலாற்றை கவனித்தால் தெரியும். தாமதத்தின் காரணமாக எத்தனை முடிகள் கவிழ்ந்திருக்கின்றன! எத்தனை பேரரசுகள் சரிந்திருக்கின்றன! எனவேதான் நெப்போலியன் கூறினார்... இழந்துவிட்ட ஒவ்வொரு நிமிடமும் துன்பத்திற்கும், துயரத்திற்கும் சந்தர்ப்பம் அளிக்கிறது. வாழ்க்கையில் முன்னேறியவர்களைப் பார்த்தோமானால் அவர்கள் நேரத்தைச் செலவிடுவதில் பெரிய கஞ்சர்களாக இருந்திருக் கிறார்கள். நேரத்தைக் கண்களேபோல காத்து செலவிட்டிருக்கின்றனர். அறிவியல் அறிஞர் மைக்கேல் பாரடே, பைண்டர் வேலை செய்து கொண் டிருந்தார்.ஓய்வு நேரங்களில் தமது அறிவியல் ஆராய்ச்சியில் செலவிட்டு வந்தார்.ஒரு முறை அவர் தம் நண்பருக்குக் கடிதம் எழுதினார். எனக்கு இப்போது வேண்டியதெல்லாம் நேரம்தான். நம் நாகரிகக் கனவான்களின் ஓய்வு நேரங்களை நான் குறைந்த விலைக்கு வாங்க முடியுமானால் எவ்வளவு நன்மையாக இருக்கும் என்று.



இவர்கள் நேரத்தைச் செலவிடுவதில் பெரிய கஞ்சர்களாக இருந்திருப்பதோடு விடியுமுன் எழுந்திருக்கும் பழக்கமுடையவர் களாகவே இருந்திருக்கிறார்கள்.எனவேதான் முந்தையோர் விரைவில் படுக்கைக்குச் சென்றுவிரைவில் படுக்கையைவிட்டு எழுவது ஒருவனை ஆரோக்கிய முள்ளவனாகவும், அறிவாளியாகவும் ஆக்கும் எனக்கூறிச் சென்றனர். காந்திடியடிகள் விடியற்காலை நான்கு மணிக்கே படுக்கையிலிருந்து எழுந்து மற்ற ஆசிரம வாசிகளையும் எழுப்பி விடுவார்.தமிழ்நாடு கண்ட வணிக மன்னரான ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் காலை நான்கு மணிக்கே எழுந்து விடுபவர்தான்.

ஓர் இத்தாலிய அறிஞர் பாக்ஸ்டர் தம்முடைய வாசற் கதவில் கீழ்க்கண்ட வார்த்தைகளைப் பொறித்திருந்தார். ...இங்கு யார் தாமதிக்கிறார்களோ அவர்கள் என்னுடைய வேலையில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும்...அவரைப் பார்க்கச் செல்கிறவர்கள் இவர் வேலை செய்து கொண்டிருப்பதைக் கண்டதும் ...நாங்கள் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறோம் ...என்று சம்பிரதாயத்திற்காகக் கூறினாலும்,ஆம் ஐயமில்லை என்று பட்டென்று கூறிவிடுவாராம்.

சாதனையாளர்கள் பற்றிய புத்தகங்களை நிறைய படியுங்கள்.சற்றே சிந்தியுங்கள்! நீங்களே ஓர் முடிவுக்கு வாருங்கள்.உங்கள் நண்பர்களில் எத்துணைபேர் உங்களது பொன்னான நேரத்தை வெற்றியை களவாடிச்செல்ல நீங்கள் அனுமதித் திருக்கிறீர்கள். கூட்டம்போட்டு கும்மாளமடித்து ,வீண்பேச்சு பேசி வெற்றியை விரட்டியடித் திருக்கிறார்கள். உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை வெற்றிமயமாக விளங்கவிரும்பும் நீங்கள் உங்கள் மனதில்,ஆழ் மனதில் நிறைந்திருக்கவேண்டிய ஒரே நீதி உரை என்னவெனில் படிப்பு ,வேலை முன்பு,நண்பர்கள் பின்பு என்பதுதான்.நேரமில்லை என வேலையை தள்ளிப் போடாதீர்கள். காலத்தே எழுங்கள்படியுங்கள், கடமையை ஆற்றுங்கள். வாழ்க்கையில் முன்னேறுங்கள்!

பொன்மொழிகளில் சில:

1.வெற்றி குறித்த நம்பார்வை திண்ணமாக இருந்தால் ,தோல்வி நம்மை பாதிக்காது.

2.வெற்றிபெற்றவர்கள் கதைகள் உங்களுக்குத் தகவல்களை மட்டும் அளிக்கும். தோல்வி யடைந்தவர்களின் கதைகள்தான் வெற்றிபெறுவதற்கான வழிகளைச் சொல்லும். – டாக்டர் அப்துல் கலாம்

தாய்ப்பால் தினம் (ஆகஸ்ட் 01)

தாய்ப்பாலின் மகத்துவம் அறிந்துதான் குழந்தைக்கு தாய்ப்பால் புகட்டக் கோரி விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தாய்ப் பாலில் குழந்தைக்குத் தேவையான புரதமல்லாது கால்சியம் சத்துஉள்ளது. நோய் எதிர்ப்பு சக்தியைக் கொடுக்கின்றது.பாலில் நுண்ணூட்டச் சத்துககள் நிரம்ப உள்ளமையால் செரிமானமும் அதிகரிக்கச் செய்கின்றது.எனவே குழந்தைக்குத் தாய்ப்பால் மிக அவசியம் என்பதாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.இவை அனைத்திற்கும் மேலாக தாய்ப்பாலில் உள்ள பிரோமோன் என்ற வேதியத்தூண்டுதல் உள்ளது.இது தாயிடமிருந்து உணர்வலைகளைக் கடத்துகின்றது.அழும் குழந்நைகளின் உடல் திறன் வளர்ச்சி அடைய வழிவகுக்கின்றது என்பதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன..

நடராஜர் கோயிலில் தேசியக்கொடி

ஒவ்வொரு ஆண்டும் இந்திய சுதந்திரதினமான ஆகஸ்ட் 15ம் தேதி,சிதம்பரம் நடராஜர் கோயிலில்ஒரு சிறப்பு உண்டு!அதாவது அன்றைய தினம் அதிகாலையில்,நமது தேசியக்கொடியை. வெள்ளித் தட்டில் வைத்து நடராஜர் முன்பாக பூஜை செய்கிறார்கள்.இது வேறு எந்தக் கோயிலிலும் இல்லாத சிறப்பு

பொன்மொழிகள்

1. செல்வத்தை மூடிமறைக்கலாம்,ஆனால் வறுமையை மூடிமறைக்கமுடியாது.!
   – ஃபின்னிஷ் பழமொழி.
2. சிறிதளவு உள்ளவன் ஏழை இல்லை.ஆசை அதிகம் உள்ளவன்தான் ஏழை. – ஃப்ரெஞ்சுப் பழமொழி
3. செல்வந்தர்களின் நோய்கூட எல்லாருக்கும் தெரிந்திருக்கிறது.ஆனால் ஏழையின் மரணம் யாருக்கும் தெரியவில்லை. – ஃபின்னிஷ்ஃ பழமொழி.
4. தராசினைக் கொண்டு எது எடை மிகுந்தது எது எடை குறைவானது என்று கூறமுடியுமே தவிரஎது தங்கம்,எது வெள்ளி, எது பித்தளை என்று கூறமுடியாது. – ஜெர்மன் பழமொழி
5. ஏழைகள் உணவைத்தேடுகின்றனர்,செல்வந்தர்கள் பசியைத்தேடுகின்றனர் – பழமொழி
6. சகிப்புத்தன்மை என்ற அந்த ஒரு சொல்லே வீட்டில் விலைமதிப்பற்றது – சீனப்பழமொழி
7. பொறுமை விருப்பு வெறுப்பைக் குறிக்காது.அது நம்பிக்கையின் ஒரு கலையாகும். – ஆங்கிலப்பழமொழி
8. ஏழைக்கு ஒரு சொந்தக்காரன்கூடப் பகைவனே;பணக்காரனுக்கு ஒரு பகைவன்கூட சொந்தக்காரனே.
   – செர்பியன் பழமொழி

சிரிப்பதற்கு சில

1. அந்த தனியார் டிவி. மேல ஏன் கேஸ் போட்டிருக்காங்க ?
   தியேட்டர்ல படம் ரிலீஸ் ஆகறத்துக்கு முன்னாடியே டி.வி யில டெலிகாஸ்ட் பண்ணி விடறாங்கலாம்!
2. என் உயிர் நண்பன் ஊரைவிட்டுப் போறத்துக்கு நானே காரணமாயிட்டேன்னு நினைச்சா வருத்தமாயிருக்கு!
   அப்படி என்ன செஞ்சீங்க ?
   பத்தாயிரம் ரூபா கடன் கேட்டான்.கொடுத்தேன்!
3. ஆப்பரேஷன் தியேட்டர்ல எதுக்கு டாக்டர் கொடிக்கம்பம் வச்சிருக்கீங்க ?
   ஆப்பரேஷன் முடிஞ்சதும் கொடியை அரைக்கம்பத்தில பறக்கவிட்டு அஞ்சலி செலுத் தரத்துக்குத்தான்!
4. ஏம்பா ...வீட்ல இவ்வளவு நகைகள் இருக்கும்போது ,என் மனைவியோட தாலி சங்கிலியை மட்டும் கேட்கிற ?
   இது என்னோட முதல் திருட்டு! மங்களகரமா ஆரம்பிக்கலாமேன்னுதான்!

கணக்குப்புதிர் விடைகள்:



1. 10000 ச.மீட்டருக்கு 2. 1440 நிமிடங்கள் 3. 1000 ஆயிரங்கள்
4.7 மாதங்கள்

விடுகதை விடைகள்

1. மீன் 2.தேசப்படம் 3.மழை 4.மின்னல் 5.சாமரம் 6.டாக்டர் 7.பாம்பு
8.வெள்ளரிப்பிஞ்சு 9. இமை 10. காகம்.

2520 என்ற எண்ணின் இரகசியம்

அதை கண்டு பிறந்தவர் கணிதமேதை ராமானுஜர்!

கணிதத்தில், எந்த எண்ணையும் 1 முதல் 10 வரை உள்ள அனைத்து எண்களாலும் பிரிக்க முடியாது.

ஆனால் இந்த ஒரு எண் மிகவும் விசித்திரமானது உலகில் உள்ள அனைத்து கணிதவியலார்களும் அதிர்ச்சி.

இந்த எண்ணை இந்திய கணிதவியலார்கள் தங்கள் அசைக்க முடியாத நுண்ணறிவால் கண்டு பிடித்தனர். இந்த எண் 2520 இது பல எண்களில் ஒன்றாக தெரிகிறது. ஆனால் உண்மையில் அது இல்லை. இது உலகெங்கிலும் உள்ள பல கணிதவியலாளர்கள் ஆச்சரியப்படுத்திய எண்.

இந்த எண்ணை 1 முதல் 10 வரை எந்த எண்ணாலும் வகுக்கலாம். ÷ (சமமாக இருந்தாலும், வித்தியாசமாக இருந்தாலும் வகுக்கலாம்) மீதம் உள்ளவை பூஜ்ஜியமாகும்.

2520 ÷ 1 =2520
2520 ÷ 2 = 1260
2520 ÷ 3 = 840
2520 ÷ 4 = 630
2520 ÷ 5 = 504
2520 ÷ 6 = 420
2520 ÷ 7 = 360
2520 ÷ 8 = 315
2520 ÷ 9 = 280
2520 ÷ 10 = 252

2520 இரகசியம் 7x30x12 பெருக்கலில் மறைக்கப்பட்டுள்ளது. இது இந்த எண்ணின் குணம்.

வாரத்தின் 7 நாட்கள்
மாதத்தின் 30 நாட்கள்
ஒரு வருடத்தின் மாதங்கள் 12

7x30x12 = 2520 இது காலத்தின் பண்பு மற்றும் ஆதிக்கம் அதை கண்டு பிடித்தவர் ராமானுஜம்.

- L. பாபு (எ) ராமசெல்வம்,
விசலூர். 9750806991

வாழ்த்துகிறோம்

திட்டக்குடி வட்டம், கொத்தட்டை க. திருஞானசம்பந்தம் பிள்ளை – சாந்தி அவர்களின் மணிவிழா 9–7–2022 அன்று விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் ஆலயத்தில் எளிய முறையில் நடைபெற்றது.

R R PHARMACY
R R பார்மஸி
155, East Car Street, Chidambaram - 1.
155, கீழரத வீதி, சிதம்பரம் – 1.

₹ 750/-க்கு மேல் 15% தள்ளுபடி
15% DISCOUNT*
ON PURCHASE OF MEDICINES ABOVE ₹ 750/-
10% தள்ளுபடி வழக்கம்போல்
10% DISCOUNT on Normal Purchase
Free Door Delivery
Ph : 04144 - 222099, 94871 41258

திருவிளையாடற் புராணம்

உலவாக்கிழி அருளிய படலம் – 31

– 'சிவகாமியின் செல்வன்'

டாக்டர் தி. பாலசுப்பிரமணியன்.

பாண்டிய நாட்டில் பசியும் வறுமையும்

அறவோரை ஆதரிக்கா நாட்டில் மழை குறையும். வறுமை மேலோங்கும்.

பாண்டியமன்னன் குலபூடண பாண்டியன் ஓர் ஒப்பற்ற வள்ளல். இவன் சிவனுக்குகந்த சோமவார விரதம், அட்டமி, சதுர்த்தசி விரதங்களை வழுவாது கடைப்பிடித்து வந்தான். பெரும்புத்தியும், விரதங்களும் சிலரைக் கர்வம் கொள்ள வைக்கும். இதற்கு பாண்டியன் விலக்கல்ல. சற்றே செருக்குற்றான். அறவோரையும் மறையோரையும் மதிக்க மறந்தான். அதனால் அவர்கள் செம்மையாய்ச் செயல்பட முடியவில்லை. மழை வளம் குன்றியது. வறுமை வளர்ந்தது. மறையோரும் மற்றையோரும் வறுமையுற்றனர். வறுமை அவர்களைக் கடமை தவறிட வைத்தது. பிழைக்க வேற்று நாடுகளுக்குச் சென்றனர். குடிமக்களும் பசியால் வாடினர். மக்கள் மனம் புழுங்கினர். பிழைக்க எங்கு செல்லலாம் என்று எண்ணி வருந்தினர்.

பாண்டியன் இறைவனிடம் முறையிடுதல்.

நாட்டில் வளம் குன்றி வறுமை தாண்டவம் ஆடுவதை உணர்ந்த பாண்டியன் மனம் வருந்தினான். சோமவாரத்தன்று பொற்றாமரையில் நீராடினான். சித்தி விநாயகரை வணங்கினான். அங்கையற்கண்ணியுடன் அமர்ந்தருளியுள்ள ஆலவாய் அண்ணலாகிய சோமசுந்தரக் கடவுளின் திருமுன் சென்று நின்றான். விழுந்து வணங்கினான். எழுந்தான். கைகளைத் தலைமேல் குவித்தான். "பெருமானே! உலக உயிர்களுக்கெல்லாம் நீ உயிரானவன் அல்லவா? அவ்வுயிர்கள் எல்லாம் பசியால் வாடுகின்றன. வருந்துகின்றன. அவற்றின் வருத்தம் தங்களைச் சாராது அடியேனைச் சார்ந்து வருந்தக் காரணம் என்ன? அடியேனின் பொருள்யாவும் சிவபுண்ணிய நெறியிலேயே தான் செலவாயின. இனி உன் அருள் நோக்கமே அடியேன் துன்பம் போக்கும் மருந்து" என்று அழுது வேண்டினான். அப்பொழுது இறைவன் பாண்டியனின் பிழையைக் கருத்தில் கொண்டான். மன்னன் மொழியைக் கேளாதவன் போல் சும்மா இருந்தான். அரண்மனை திரும்பிய மன்னன் சிவனைச் சிந்தித்த வண்ணம் தரையில் படுத்து உறங்கினான்.

வழுதியின் கனவில் இறைவன் தோன்றி உலவாக்கிழி அளித்தருளல்:

வழுதி உறக்கத்தில் வெள்ளியம்பலவாணனாகிய சோமசுந்தரக் கடவுள் கனவில் தோன்றினான்.

காதிலே குண்டலம்; நெற்றியிலே திருநீறு; சரிந்த கோவணம்; மார்பிலே கிடந்து அசையும் சிங்கநாதவாச்சியம்; இவற்றோடு சித்தமூர்த்தியாய் எழுந்தருளிக் காணப்பட்டான். இறைவன்.

சிங்கநாத வாச்சியம் என்பது மான் கொம்பினால் செய்த ஒரு வகை இசைக்கருவி. இதளை வாசிக்க அது சிங்கம் போல கர்ச்சிக்கும் ஒலியை எழுப்பும்.

கனவில் தோனறிய கடவுள் "பாண்டியா! நம்பால் மாறா அன்பு கொண்டவனே! கெடாத நோன்பாகிய உயர்ந்த செல்வத்தை உடையவனே! உன் பால் ஒரு குறை உண்டு. நீ மறையோர்களைப் போற்ற மறந்தாய்; அதனால் உன்நாட்டிலே செல்வம் குறைந்துள்ளது. மறையே நமது இருக்கை; அதுவே நமது பாதுகை; அதுவே நமது ஊர்தி, காற்சிலம்பு, கோவணம், திருக்கண், திருபாக்கு, திருமேனி, வேதமே ஆன்மாக்களுக்கு விதிவிலக்குகளை அறிவிக்கும். நல்லறிவை நல்கும். நல்வழிநடத்தும், போகமளிக்கும். ஆணவமலக்கட்டினை அவிழ்த்து அகற்றும். வீடு பேற்றினை வழங்கும். மறையே நம் அருட்செங்கோலோகும். இத்தகைய மறையை ஓதும் அந்தணர்களை நீ புறக்கணித்தாய். அதனால் மழை இல்லை. இனி மறைகளைப் போற்று. மறையோர்களை மதி. ஆதரி. செல்வம் பெருக மழை பொழியும். செங்கோல் நடாத்தி வாழ்வாயாக! இதோ நாம் உனக்கு ஒரு உலவாக்கிழி (பொற்கிழி) வழங்குகின்றோம். இதிலிருந்து எவ்வளவு பொன்னை எடுத்துச் செலவழித்தாலும், பொற்கிழி சிறிதும் குறையாது. இதனை வைத்துக்கொண்டு உனது நாட்டில் தோன்றிய வறுமையைப் போக்கிக்கொள்!" என்று கூறிய இறைவன் மன்னன் நெற்றியில் நீறு பூசினான். பொற்கிழியைக் கொடுத்தான். உடன் மறைந்தருளினான்.

(திருவிளையாடற்புராணத்தில் இறைவன் பாண்டியன் படுக்கையின் மேல் தலைப்பாகத்தின்கண் பொற்கிழியினை வைத்துவிட்டு மறைந்தான் என்று கூறப்பட்டுள்ளது.)

பாண்டியன் உலவாக்கிழியினைப் பூசித்துப் பயன்படுத்தல்:

பாண்டியன் அந்த உலவாக்கிழியினை அரியணையில் வைத்தான். அதற்குச் சந்தனம் பூசினான். மறை மந்திரங்கள் ஒலித்தன. மலர் மாலை சூட்டினான். தசாங்கம் எனப்படும் ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சந்திரோதனம், அவகுண்டனம், தேனு முத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அர்க்கியம், புட்பதானம் ஆகிய பத்து உபசாரங்களைச் செய்தான். குந்துருக்கம், பச்சை கருப்பூரம், காரகில், வெண்சந்தனம், கருஞ்சீதாரி என்னும் வாசனைப்

பொருள்களைக் கலந்து நறுந்தூபமிட்டான். பின் நெய்த்தீபமும் காட்டினான். அந்த உலவாக்கிழியை சோமசுந்தரக் கடவுளாகவே பாவித்துப் பூசித்தான். பின்னர் அதனை வலம் வலந்தான். துதித்தான். தொழுது வணங்கி எழுந்தான். அதன் பின்னர் அவ்வுலவாக்கிழியைக் கட்டவிழ்த்தான். அதில் உள்ள பொன்னை எடுத்து அந்தணர்க்கு அளித்தான். ஏனையோர்க்கும் வழங்கினான். நாள்தொறும் வரையறையின்றி எல்லோருக்கும் பொன்னை வழங்கினான்; என்றாலும் அப்பொற்கிழி கொஞ்சமும் குறையவில்லை. முத்தியின்ப வீட்டைப் போலானது.

பாண்டியன் உலவாக்கிழியிலிருந்து மேலும் பொன்னை எடுத்து சோமசுந்தரக் கடவுள் எழுந்தருளிய விண்ணிழிவிமானத்தை உள்ளும்புறமும் இழைத்தான். ஞானக்கொழுந்தாகிய அங்கயற்கண்ணியின் திருக்கோயிலையும், அறுகாற்பீடத்தையும் (இந்த ஆறுகாற்பீடம் சுவாமி சந்நிதியில் உள்ளது; இது மீனாட்சியம்மையின் சந்நிதியிலும் உள்ளது). பெரிய திருக்கோபுர வாயிலையும் மற்றுள்ளவற்றையும் அழகு பெறச்செய்தான்.

பாண்டியநாடு செழித்து விளங்கல் :

உலவாக்கிழியாகிய கடலை முகந்து முகந்து குலபூடணபாண்டியனாகிய மேகம் தினம் தினம் அறப்பயிரை வளர்க்க, மழை பொழிந்தது, பல்வளங்களும் மிகுந்து விளங்கின. பாண்டியநாடு அனகாபுரியைப் போலச் செல்வச் செழிப்பில் உயர்ந்து விளங்கியது. அதனால் அறவோர், அந்தணர், அடியார் பெருமக்கள், துறவியர், என எல்லோரும் வறுமையிலிருந்து விடுபட்டனர். செழிப்புடன் வாழ்ந்து விளங்கினர்.

தலைஞாயிறு சிவன் கோவில் கும்பாபிஷேகம்.

சோழநாட்டில் ஒவ்வொரு சிவாலயமும் ஒரு தனிச்சிறப்பை பெற்று திகழ்கிறது. இறைவன் மனிதர்கள் புரியும் குற்றங்களைப் பொறுத்து மன்னித்து அவர்களுக்குக் கருணை காட்டி அருள்பாலித்து வருகிறார். அந்த வகையில் மயிலாடுதுறை மாவட்டம், தலைஞாயிற்றில் வீற்றிருக்கும் இறைவன் குற்றம் பொறுத்த நாதர் என்ற திருநாமம் தாங்கி அருள்பாலித்து வருகின்றார். இத்தலம் காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது. திருஞானசம்பந்தராலும், சுந்தரராலும் தேவாரப் பாடல் பெற்ற சிறப்புமிகு 27வது தலமாகும்.

கல்வியில் உயர்வு பெறவும், குழந்தை வரம் அருளும் ஆலயமாகவும் விளங்கும் இத்தலம் தற்போது தருமையாதீனத்தில் அருளாட்சி செய்து வரும் 27–ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் பக்தர்களின் விருப்பத்தை நிறைவேற்ற இக்கோவிலில் திருப்பணிகள் செய்துகும்பாபிஷேகம் நிறைவேற்றிட திருவுளம்பற்றி 04–07–2021 அன்று பாலாலயம் செய்வித்தார்கள். இராஜகோபுரம் மகாமண்டபங்களில் அனைத்து திருப்பணிகளையும் செய்து வெளிப்பிரகாரம் முற்றிலும் தளம் பதித்து கும்பாபிஷேகம் 22–08–2022 அன்று ஸ்ரீ–ல–ஸ்ரீ குருமகாசந்நிதானம் திருமுன்னிலையில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற உள்ளது. அனைவரும் கும்பாபிஷேகத்தை தரிசித்து அருள்மிகு கோல்வளைநாயகி உடனாகிய ஸ்ரீ குற்றம் பொறுத்த நாதர் திருவருளைப் பெற்று இன்புறுவார்களாக.

– முனைவர் எஸ்.ஏ. சம்பத்குமார், கும்பகோணம்

इंडियन बैंक Indian Bank
इलाहाबाद ALLAHABAD
HOME LOAN
Cell : 93458 04981 / 79040 62298

➤ Housing Loan ➤ Repairs / Renovation ➤ Extension of Building ➤ Commercial Building
➤ Take over Loans from Other Banks ➤ Mortgage Loans ➤ NRI Housing Loans ➤ Car Loans

Business Loans, OD, OCC, Against Property, MSME Loans

Ln.T.RAMAMOORTHY,
Home Loan Counselor, indian Bank, Chidambaram
E.mail : matrimonycdm@gmail.com

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

100க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் ஒவ்வொரு மாதமும் சங்கச் செய்திகள் அனுப்புவதில்லை என்றாலும் அனுப்பப்படும் சங்கச் செய்திகள் அனைத்தையும் வெளியிட முயற்சிக்கிறோம். அதற்கு உதவிகரமாக சங்கச் செய்திகள் அனுப்புபவர்கள் தாங்கள் அனுப்பும் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் மட்டும் அனுப்பி அதிகமான சங்கங்களுக்கு வாய்ப்பளிக்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிர்வாகத் தேவை காரணமாக அனுப்பப்படும் செய்திகளை நிராகரிக்கவோ சுருக்கித் தொகுக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு.

நங்கநல்லூர் :

24–7–2022 அன்று சங்கத்தின் மாதாந்திர கூட்டம் தலைவரது இல்லத்தில் நடைபெற்றது. முதல் நிகழ்வாக தொழில் அதிபரும் சென்னை சங்க மேனாள் தலைவரும் ஆகிய திரு. கே.ஜி. சீனுவாசன் (KGS) அவர்களது மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

ஜூன் மாதத்திய கூட்ட அறிக்கை சங்க செயலரால் வாசிக்கப்பட்டது. ஜூலை மாதத்திய சங்க செயல்பாடுகளும் செயலாளரால் விவரிக்கப்பட்டது. சங்க பொருளாளர் அளித்த நிதிநிலை விவரம் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கல்வி உதவி தொகைக்கு சங்கம் பரிந்துரைத்த மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிதி உதவி செய்த CREW அறக்கட்டளைக்கு நன்றி. மகளிரணியினர் 3–7–2022 அன்று திருவான்மியூர் அ/மி மருந்தீஸ்வரர் கோவிலில் நடைபெற்ற மாணிக்க வாசகர் குருபூஜையில் கலந்து கொண்டு திருவாசகம் ஓதப்பட்டது.

சங்க செயற்குழு உறுப்பினர் திருமதி. கிருஷ்ணவேணிசெந்தில்நாதன் அரசுப்பணியில் AAO வாக பதவி உயர்வு பெற்றதற்கு சால்வை அணிவித்து பாராட்டும், சிதம்பரம் பகுதியைச் சேர்ந்த திருமதி. ஏ. வசந்தா அவர்களுக்கு ஆகஸ்ட் 2022 முதல் உதவிதொகை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

திரு. S. வீரராஜ்குமார், ஆனந்தம் இளைஞர் நல அமைப்பின் செயல்பாடுகளை கூட்டத்தினரிடையே விளக்கி, இதுவரை தங்களை இந்த அமைப்பில் இணைத்துக்கொள்ளாத அன்பர்கள் தங்களை இணைத்துக் கொண்டு அமைப்புக்கு துணை நிற்க கேட்டுக்கொண்டார். திரு. பாலமணிவண்ணன் செயற்குழு உறுப்பினர் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவடைந்தது.

– சரவணன், தலைவர்.

அண்ணாநகர் :

ஜூன் மாத கூட்டம் 22–6–2022 கொரட்டூர் சங்க குடியிருப்பில் தொடங்கி நடைபெற்றது.

மறைந்த முன்னாள் தலைவர் திரு. சூரியமூர்த்தி அவர்களின் மறைவிற்கும், செயற்குழு உறுப்பினர்கள் திரு. S. பாலகுமார் திரு. இராமசாமி அவர்களின் தாயார் திருமதி. லெஷ்மி அம்மாள் அவர்களின் மறைவிற்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

திரு. விவேகானந்தன் அவர்கள் அண்ணாநகர் அமுதசுரபி கல்வி மற்றும் சமூக நல அறக்கட்டளைக்கு ரூ. 50000/– நன்கொடை அளித்தார்கள். அவருக்கு சங்கத்தின் சார்பில் நன்றியும், வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

தலைவர் திரு. J. கோபாலகிருஷ்ணன் அவர்களது மனைவி திருமதி. அமராவதி விரைவில் உடல் நலம் பெற இறைவனிடம் வேண்டப்பட்டது. திரு. பாலசுப்பிரமணியன், பொருளாளர் நன்றி தெரிவிக்க கூட்டம் நிறைவு பெற்றது.

சங்க ஆண்டு 02–07–2022 அன்று மாலை 5 மணிக்கு மகளிர் அணி தலைவியை திருமதி. மங்கலம் கிருஷ்ணமூர்த்தி மற்றும் திருமதி. ஜெயலெஷ்மி தியாகராஜன், திருமதி. சாந்தி பாலு, திருமதி. ஞானசக்தி, திருமதி. அகிலா சுகுமார் குத்துவிளக்கு ஏற்ற தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா துவங்கியது.

ஆலோசகர் டாக்டர் கே. விவேகானந்தன் அவர்கள் வரவேற்புரையில் ஆண்டு விழாவின்போது சங்கத்தின் முதல் தலைவர் ஆர்.எஸ். அவர்கள் இல்லாத வருத்தத்தைத் தெரிவித்து, சென்னையில் கார்காத்தார் சங்கத்தை வேலங்குடி இரத்தினம் பிள்ளை, B.A. L.,T., தோன்றிவித்து வரலாறு, வளர்ச்சி மற்றும் அண்ணாநகர் கார்காத்தார் சங்கம் எத்தகைய சூழ்நிலையில் தோன்றியது என்ற வரலாற்றையும் சுருக்கமாக எடுத்துரைத்தார்.

தலைவர் ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் தலைமை உரையில் 13 வருடங்களாக ஒவ்வொரு வருடமும் என்னென்ன நிகழ்வுகள் சாதனைகள் செய்யப்பட்டது என்பதை விவரித்தார்.

செயலாளர் என். ஆனந்தகணபதி அவர்கள் ஆண்டறிக்கையில் இந்த இரண்டு வருடத்தில் செய்த பணிகளையும் சங்கத்தின் சாதனையாக

சங்கத்திற்கென தனி கட்டிடம் கொரட்டூரில் வாங்கப்பட்ட விபரத்தையும் மற்றும் சங்கத்தை பதிவு செய்யப்பட்ட விபரத்தையும்கொரோனாகாலகட்டத்தில் நிதி நெருக்கடியில் தவித்த நம் இனத்தவர்க்கு உதவியதையும் கொடுங்கையூரில் நம் இனத்தில் ஒருவர் மறைந்த போது அதற்கு சங்கத்தில் இருந்து 5000/– ரூபாயும் கொடுங்கையூர் வாழ் மக்கள் சேர்ந்து 20000/– கொடுத்து இறுதி காரியங்களை இறுதி வரை இருந்து செய்து சங்கம் ஆரம்பித்த நோக்கத்தினை செயல்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

பொருளாளர் திரு. கொரட்டூர் ஜி. பாலசுப்ரமணியம் அவர்கள் நிதிநிலை அறிக்கையை வாசித்தார். செயலர் மற்றும் பொருளாளர் அறிக்கைக்கு கைதட்டல் மூலம் தங்களது ஒப்புதலை தெரிவித்தனர்.

அண்ணாநகர் அமுத சுரபி அறக்கட்டளையின் தலைவர் டி. தியாகராஜன் அவர்கள் நலத்திட்ட அறிக்கையையும், பொருளாளர் திரு. அறிவொளி கல்வி திட்ட அறிக்கையையும் திரு. சி.எஸ். நாராயணசாமி, செயலர், பொருளாளர் அறிக்கையையும் சமர்ப்பித்தனர்.

சிறப்பு விருந்தினர்கள் CREW MD, திரு. செந்தில்குமார், மாநில கார்காத்தார் சங்க கூட்டமைப்பு தலைவர் திரு. K.K.R. K. சுரேஷ், அமைப்பு செயலாளர் திரு. கைலை. சண்முகம், டாக்டர். பி.எஸ். குமார், மனிதநேயம் திரு. T.N. முத்துகுமாரசுவாமி, சாதனையாளர்கள் டாக்டர். ஞானவதி அசோகன், யோககலை வல்லுநர் திருமதி. ஷர்மிளா சதீஷ், திருமதி. வாணி ஆனந்தகுமாரன், திருமதி. லெஷ்மி பிரபாகரன் ஆகியோர்களுக்கு சங்க நிர்வாகிகளால் சால்வைகள், நினைவு கேடயங்கள் மற்றும் சாதனையாளர்களுக்கு விருதுகளும் டாக்டர். T. கோவிந்தன் அவர்களின் நினைவு பரிசும் வழங்கி பாராட்டப்பட்டனர். அனைவரும் ஏற்பு உரை ஆற்றினார்கள். +2 தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற பி. ஆதித்யாவிற்கும் CBSE 10th-ல் அதிகமதிப்பெண் பெற்ற என்.ரிதுவர்ஷிணிக்கு விருதுகள் வழங்கப்பட்டது. குழந்தைகளுக்கு சிறப்பு பரிசும், வந்திருந்த அனைவருக்கும், திரு. R.S. அவர்களின் நினைவு மலரும், சபா. தியாகராஜன் அவர்களின் புத்தகமும் வழங்கப்பட்டது. இணைசெயலாளர் திரு. இராஜசேகரன் அவர்களின் நன்றியுரைக்கு பிறகு தேசியகீதம் பாட இரவு உணவு விருந்துடன் விழா நிறைவுற்றது.

– என். ஆனந்தகணபதி,
செயலர்.
9094682811

போரூர்

17.07.2022 அன்று சங்க செயற்குழு கூட்டம் இணைசெயலாளர் K. ராஜாராமலிங்கம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அனைவருக்கும் சிறப்பான சிற்றுண்டி அளித்த அவரது குடும்பத்தினருக்கு நன்றி தெரிவித்துக் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

தீர்மானங்கள்: ஆயுட்கால உறுப்பினர் கோ. ராமு, செயற்குழு உறுப்பினர் கண்ணன் அவர்களின் சகோதரர், ஞானசேகர் அவர்களின் தாயார், சங் பொருளாளர் K. பரமசிவம் அவர்களின் மாமனார் சூரியமூர்த்தி ஆகியோர் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

30.7.22 அன்று திருச்சியில் நடைபெற உள்ள மாநில சங்கத்தின் பொதுகுழு மற்றும் தேர்தலுக்கு நமது சங்கத்தின் சார்பில் கலந்துகொள்ளவும், திரு. S. சிதம்பரம் பிள்ளை அவர்களை மாநில சங்க சென்னை மண்டல செயலாளராக செயல்பட நமது சங்கத்தின் சார்பில் பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

திரு. பாலசந்திரன் கௌரவ ஆலோசகர் தமது உரையில் சங்க பொருளாதாரத்தை மேம்படுத்துவது இளைஞர்களை சங்கத்தில் இணைப்பது,உறுப்பினர் எண்ணிக்கையை மேம்படுத்துதல் போன்ற கருத்துக்களை கூறினார்கள். திரு. சரவணன் இணைசெயலாளர் அவர்கள் செயற்குழு குடும்ப உறுப்பினர்களை ஒன்றிணைத்து கலந்துரையாடல் செய்ய வேண்டும் எனக் கூறினார்கள்.

– A. இராமலிங்கம், தலைவர்.

பெருங்களத்தூர்

சங்க செயற்குழு கூட்டம் 25.07.2022 அன்று சிவாலிஹாலில்செயலாளர் திரு.கோ.இராஜகோபாலன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்ட தீர்மானம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவர் விரைவில் உடல் நலம் பெற வேண்டிக்கொள்ளப்பட்டது. பொதுக்குழுவினை நடத்துவது பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டு உறுப்பினர்களின் கருத்துரைகளை வாட்ஸ்ஆப் மூலம் பெற்று நடத்தவும், 2021மற்றும் 2022ஆம் ஆண்டிற்கான சந்தா தொகையினை வசூல் செய்ய செயற்குழு உறுப்பினர்கள் விடுமுறை நாட்களில் குழுவாக செல்லவும், சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழா மலரில் ரூ. 5,000/–க்கு மிகாமல் விளம்பரம் அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. திருமதி. உமா கன– கசபை நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– ரா. கார்த்திகேயன், இணைச் செயலாளர்

கொத்தட்டை :

30–6–2022 அன்று சங்க பொதுக்குழு கூட்டம் சைவத்திரு. J.M. திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கீழ்கண்ட சங்க நிர்வாகிகள் ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

புதிய நிர்வாகிகள் பட்டியல்

தலைவர்: C. சீனிவாசன் பிள்ளை – 9488842919, செயலாளர் : R. பாலசுப்ரமணியன் பிள்ளை – 9842485328, பொருளாளர் : P. வேல்முருகன் பிள்ளை – 9865123582, துணைத்தலைவர் :Tசச்சுதானந்தன் பிள்ளை – 9486169257, இணைச்செயலர் : K. குமரவேல் பிள்ளை – 9788767706, சங்க ஆலோசகர் : J.M. திருஞானசம்பந்தம் பிள்ளை – 9443667308, R. ஞானகணேசன் பிள்ளை – 9443747133

மகளிர் அணி : G. ஞானசுதா மகேஸ்வரி – 9442244775

- S. பழமலைப்பிள்ளை,
செயலாளர். 9443344135

கோடாலிகருப்பூர்

சங்க கூட்டம் கடந்த 01–07–2022 அன்று அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் கடந்த மாதம் வெளிவந்த +2 பொதுத்தேர்வில் மாநில அளவில் சிறப்பிடம் பெற்ற நம் சங்க உறுப்பினர் சா. ரவியின் மகள் ர. சிவரஞ்சனியை பாராட்டி (மதிப்பெண் 597/600) இனிப்பு வழங்கி பொன்னாடை போற்றி, சான்றிதழ் மற்றும் நினைவு பரிசு வழங்கி சங்கத்தின் சார்பாக பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

R. சீனிவாசன்,
தலைவர்.

காட்டுமன்னார் கோயில் ஒன்றியம் :

3–7–2022 அன்று விசுவநாதன் நகரில் உள்ள செயலர் திரு. V.R. ஞானம் அவர்கள் இல்லத்தில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. ஒன்றியத் தலைவர் திரு. R. பத்மநாபன் பிள்ளை அவர்கள் தலைமை ஏற்றார் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆகஸ்டு 14–ல் லலித மஹால் திருமண மண்டபத்தில் பொதுக்குழுக் கூட்டம் நடத்துவதெனவும், 10 மற்றும் 12–ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர், தமிழில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்கு ரொக்கப்பரிசு வழங்கவும், பதவி உயர்வு பெற்றோர், பணி ஓய்வு பெற்றோர், புத்தகங்கள் எழுதி வெளியிட்டோர் ஆகியோருக்கு பாராட்டுரை வழங்கவும், தலைவர், செயலாளர், பொருளார் ஆகிய பதவிகளுக்கு தேர்தல் நடத்துவதென என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இணைச்செயலாளர் திரு. K. ராஜு நன்றி கூறினார். செயலர் திரு. V.R. ஞானம் அவர்களின் சிறப்புச் சிற்றுண்டிக்குப்பின் கூட்டம் இனிதே முடிவுற்றது.

– தலைவர்.

சீர்காழி :

செயற்குழு கூட்டம் 2–7–22 அன்று சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. திரு. சன். முருகன் பிள்ளை அவர்களை மங்கல சந்திப்பு தொடர்பாளராகவும் நியமிக்கவும், கல்வி உதவி தொகை விண்ணப்பங்களை பூர்த்தி செய்து 2–8–2022க்குள் பொறுப்பாளர்களிடம் அளிக்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டது. 10–7–22 அன்று நடைபெற்ற சிறப்புக்கூட்டத்தில் தலைவர் திரு. K. சுகுந்தவனநாதன் அவர்கள் தலைமையில் செயலர் திரு. குண. அமுதன் பிள்ளை அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் சீர்காழி, மணிகிராமம், மேலையூர், இளையமுதுக்கூடம், இராதாநல்லூர் ஆகிய சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மணிக்கிராமத்தை சேர்ந்த திரு. M. சிங்காரவேலன் பிள்ளை அவர்கள் மாநில துணைத்தலைவர் பதவிக்கும், சீர்காழியை சேர்ந்த திரு. N. சிதம்பரநாதன் பிள்ளை அவர்கள் மண்டல செயலாளர் பதவிக்கும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விண்ணப்பங்களை தேர்தல் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. பொருளாளர் திரு. C. அகோரம் பிள்ளை அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

- G. அமுதன் பிள்ளை,
செயலாளர்.

மணிக்கிராமம் :

சங்க கூட்டம் 11–7–22–ம் அன்று ஸ்ரீதிருமேனி அழகர் கோவிலில் தலைவர் M. சிங்காரவேலன் தலைமையில் நடைபெற்றது. செயலர் இறைவணக்கம் சிவபுராணமும் பாடினார். செயலர் திரு. G. அன்பழகன் சென்ற மாத அறிக்கை வாசிக்கவும் பொருளர் திரு. T. கபிலன் வரவு – செலவுகளை படிக்கவும் சங்கம் அதை அப்படியே ஏற்றுக்கொண்டது. சீர்காழி மண்டலத்திற்கு

மாநில துணைதலைவராக திரு. M. சிங்காரவேலன் அவர்களை ஒரு மனதாக தேர்வு செய்தமைக்கு சீர்காழி, மேலையூர் இராதாநல்லூர், இலையமுது கூடம் சங்க பொறுப்பாளர்களுக்கு நன்றியும், உறுப்பினர் திரு. V. சுந்தரமூர்த்தி அவர்களை மயிலாடுதுறை ரோட்டரி கிளப் கிங்ஸ் தலைவராக பதவி ஏற்றதற்கு பாராட்டும், ஆகஸ்டு மாதத்தில் ஆண்டு விழா நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. உறுப்பினர்களுக்கு திரு. V. சுந்தரமூர்த்தி இரவு விருந்து அளித்தார். திரு. V. ஜெயகுமார் நன்றி கூற நாட்டுபண்ணுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

G. அன்பழகன்,
செயலாளர்.
9442566213

இளந்தோப்பு

18.7.2022 அன்று மாதாந்திர கூட்டம் தலைவர் G. செல்வநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மயிலாடுதுறை மண்டல செயலர் பதவிக்கு மாநிலத் தலைமையின் தகவல் பெறப்பட்டு அதற்கேற்ப நம்முடைய சங்க கிளையிலிருந்து செயலர் திரு. S. சீனுவாசன் அவர்களை மண்டலச் செயலாளர் பதவிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இளந்தோப்பு சங்கத்தின் பொறுப்பாளர்கள் தேர்தல் அடுத்த பருவக்கூட்டத்தில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. துணைத்தலைவர் திரு. S. சபாநாயகம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– S. சீனுவாசன், செயலாளர்

மண்ணிப்பள்ளம்:

சேத்தூர் கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஐந்து கோவில் மகா கும்பாபிஷேகம் 26–06–2022 அன்று விமர்சையாக நடைபெற்றது.

திரு. R. பாலசுப்ரமணியன் (VAO Rtd) அவர்கள் தலைமையில் கோவில் விழாவிற்கு பங்கு அளித்தும், வருகை புரிந்த கார்குல சொந்தங்களுக்கு விருந்துகள் உபசரித்தும், தற்பொழுது தலைஞாயிறு கோவில் மேற்பார்வையாளர் பணிபுரிந்து வரும் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி தெரிவித்துக்கொண்டு மேன்மேலும் அவரது இறை சேவைபணி தொடர வாழ்த்துகிறோம்.

சூ. செந்தில்வைரவன், தலைவர்
செல்: 9443985944

மயிலாடுதுறை

மாதாந்திர செயற்குழு கூட்டம் 03.07.2022 அன்று சங்க கட்டிடத்தில் நகர சங்கத் தலைவர் திரு. S. அன்பழகன் அவர்கள் தலைமையேற்க மகளிர் அணி இறைவாழ்த்து பாட இளைஞரணி பொறுப்பாளர் வரவேற்பு நல்க இனிதே தொடங்கியது.

இணைச்செயலாளர் திரு. A. ராஜேந்திரன் மாதாந்திர அறிக்கை வாசித்தார். பொருளாளர் திரு. R. சந்திரசேகரன் அவர்கள் ஜூன் மாதத்திற்கான வரவு செலவு அறிக்கையினை சமர்ப்பித்து அதற்கு செயற்குழுவில் ஒப்புதல் பெற்றார். சங்கத் தலைவர் மற்றும் மேனாள் உறுப்பினர்கள் சங்க வளர்ச்சி சார்பாக உரை நிகழ்த்தினார்கள்.

தீர்மானங்கள்:

நம் கார்குல ஏழை மாணவர்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பம் இம்மாதத்திற்குள் பெறப்பட வேண்டும் எனறும், கல்லூரியில் பயிலும் நம் குல மாணவர்களுக்கு சென்னை CREW TRUST மூலமாக கல்வி உதவித்தொகை பெற்று வழங்குவது எனவும், சங்கத்தின் மூலமாக வழங்கப்படும் கல்வி உதவித்தொகைக்கு நம் குல நல்மனது உடையவர்களை அணுகி நிதி பெறுவது எனவும், ஒரு சில காரணங்களுக்காக சங்கத்தின் செயலர் ராஜினாமா கடிதம் அளித்திருந்தார். அக்கடிதத்தை செயற்குழு ஏற்றுக்கொள்வது இல்லையெனவும், மீண்டும் அவரே அப்பணியை தொடர உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும், 10, 11, 12–ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவர்களுக்கு இளைஞர் சங்கம் மூலம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் நிகழ்ச்சி 31.07.2022 நம் சங்க கட்டிடத்தில் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இளைஞரணி பொறுப்பாளர் நன்றியுரை கூற சென்ற மாதம் இறைவனடி சேர்ந்த நம் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தி கூட்டம் நிறைவு பெற்றது.

– செயலர்.

மயிலாடுதுறை மகளிரணி

19.7.2022 முதல் யோகா நிகழ்ச்சி 3 நாட்கள் நடத்தப்பட்டது. அதில் சிறப்பம்சமாக தலைவி பில்டெக் அருள்மொழி கோரிக்கையை ஏற்று, சங்க கொடி 3 நாளும் தலைவர் திரு. அன்பழகன், முன்னாள் தலைவர் திரு. சத்யபால், முன்னாள் தேர்தல் தலைவர் திரு. R. பாலசுப்ரமணியம் அவர்கள் கொடி ஏற்றினார்கள்.

யோகா விளக்க உரையாக நல்லாசிரியர் திரு. செல்வகுமார், திரு. P. சாமிநாதன், திரு. Dr. முத்து வழங்கினார்கள். செயல்முறையாக பேராசிரியர் திரு. சேதுராமன், திருமதி. ஜெயந்தி, திரு. பன்னீர் செய்து காட்டினார்கள். வாழ்த்துரை, வரவேற்புரை, நன்றி உரை, துவக்க உரை என திருமதிகள் கோமதி, இந்துமதி, காயத்ரி, சசிகலா, தமிழ்ச்செல்வி, ராஜேஸ்வரி, விஜயலெட்சுமி, வளர்மதி, சீதா ஆகியோர் வழங்கினார்கள். தலைமை உரை பில்டெக் அருள்மொழி வழங்கினார்கள்.

குலுக்கல் பரிசினை திரு. B. சுவாமிநாதன் அவர்கள் நடத்தினார்கள். விழா முழுமைக்கும் அருண் தம்பி ராஜேந்திரன் துணைநின்றார்கள். நகர சங்க பொறுப்பாளர்கள், இளைஞர் அணி பொறுப்பாளர்கள் மற்றும் அத்துணை கார்குல உறவுகளுக்கும் மகளிரணி மனம் நிறைந்த நன்றி தெரிவித்து மகிழ்கிறது.

– பில்டெக் அருள்மொழி.

செம்பொன் ஒன்றிய சங்கம் :

16–07–2022 அன்று செயற்குழு கூட்டம் செம்பொன் நகரம் விவேகானந்தர் வீதி சுந்தரகணபதி நிலைய வளாகத்தில் நடைபெற்றது. ஒன்றியத்தலைவர் திரு. B. லெட்சுமணன் பிள்ளை தலைமையில் மா.து.தலைவர் திரு. செ. குஞ்சிதபாதம் பிள்ளை, ஒன்றிய சிறப்புத்தலைவர் திரு. Dr. க. பாலகிருஷ்ணன் பிள்ளை, மண்டலச்செயலர் திரு. கோ. வடிவேலு பிள்ளை ஆகியோர் முன்னிலை வகிக்க செம்பொன் நகர சிறப்புத்தலைவர் மு. சபாநாயகம் பிள்ளை இறைவணக்கம் பாடிட, ஒன்றியச்செயலர் திரு. கி. இராமநாதன் வரவேற்புரை கூறினார்கள்.

சென்ற கூட்ட அறிக்கை, வரவு – செலவு அறிக்கையை செயலர் வாசித்திட கூட்டம் அதனை ஏற்றது. மா.து.தலைவர், மண்டலச்செயலர் ஒன்றிய சிறப்புத்தலைவர், ஒன்றியத்தலைவர் ஆகியோர் உரையாற்றும் பொழுது 30–07–2022–ல் திருச்சியில் நடைபெறும் மாநில பொதுக்குழுவில் தேர்ந்தெடுக்கப்படும் மாநில பொறுப்பாளர்கள் தேர்தல் பற்றி எடுத்துரைத்ததுடன் நமது மண்டலத்தில் ஒரு மாநில துணைத்தலைவரையும், ஒரு மண்டலச்செயலரையும் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூறினார்கள். மேற்படி இரு பொறுப்பிற்கும் இருவரை தேர்தெடுக்கும் பொறுப்பு திரு. கணபதி நடனம் அவர்களிடம் அளிக்கப்பட்டது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றது.

செம்பொன் ஒன்றியசெயலர் திரு. M.C.K. ராமநாதன் பிள்ளை மாநில துணைத்தலைவராகவும், விசலூர் திரு. L. ராமசெல்வம் மண்டல செயலாளராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.

இது நாள் வரை ஒன்றிய சங்கத்தில் இணையாதிருந்த பரசலூர் கிராம சங்கம் ஒன்றிய சங்கத்தில் இணைத்திட விருப்பம் தெரிவித்ததை இக்கூட்டம் முழுமையாக வரவேற்பதாக தீர்மானித்தது.

தலைவர் முடிவுரைக்குப்பின் ஒன்றிய சங்க ஒருங்கிணைப்பாளர் திரு. சபா. வரதராஜன் பிள்ளை நன்றி கூறிட செயற்குழு கூட்டம் இனிதே நிறைவுற்றது.

M.C.K. ராமநாதன் பிள்ளை, ஒன்றியச் செயலாளர்

9442820061

செம்பொன்னார் கோவில் :

சங்ககூட்டம்06–07–22அன்றுசிறப்புத்தலைவர் திரு. மு. சபாநாயகம் பிள்ளை இல்லத்தில் அவரே இறைவணக்கம் பாடிடவும், சங்கத்தலைவர் திரு. கி. ராமநாதன் பிள்ளை அவர்கள் தலைமையில் அவரே வரவேற்புரை ஆற்றிடவும், சென்ற மாத கூட்ட அறிக்கை மண்டல செயலர் திரு. கோ. வடிவேலு பிள்ளை வாசிக்கவும், வரவு – செலவு அறிக்கை பொருளர் M.C. செல்வராஜ் அவர்கள் வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது. திரு. கணபதி நடனம் சங்க வளர்ச்சி குறித்தும், சங்க தலைவர் அவர்களே செம்பொன் ஒன்றிய சங்க செயலாளராக இருப்பதால் விரைவில் ஒன்றிய சங்க கூட்டத்தை கூட்டி அதில் மாநில சங்க தேர்தல் குறித்து விவாதித்து செம்பொன் ஒன்றியத்திற்கு ஒரு மாநில துணைத்தலைவரையும், ஒரு மண்டல செயலாளரையும் போட்டியின்றி தேர்ந்தெடுப்பதற்கு உரிய ஏற்பாடுகளை ஒன்றிய சங்க கூட்டத்தில் விவாதித்து முடிவு செய்யலாம் என்ற கருத்தினை தெரிவித்தார்கள். சங்க செலவில் பிஸ்கட், டீ வழங்கப்பெற்றது. S. பிரவீன் நன்றி கூறிட கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

S. நெடுஞ்செழியன், செயலாளர்.

பரசலூர் :

03–7–2022 அன்று சித்தி விநாயகர் தெரு, M. விஜய் – விஜயலெட்சுமி இல்லத்தில் செல்வன் R. பிரவின் இறைவணக்கம் பாட திருமதி. V. விஜயலெட்சுமி வரவேற்புரை நிகழ்த்த தலைவர்

க. கோவிந்தராசன் தலைமையில் கூட்டம் துவங்கியது.

செயலர் வீ கண்ணன் சென்ற மாத அறிக்கையையும், பொருளர் S.M. விஜய் நிதிய அறிக்கையையும், தலைவர் க. கோவிந்தராஜன் மு.அ. நிதிய அறிக்கையையும் வாசிக்க அனைத்து அறிக்கையும் கூட்டத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. இளைஞரணி திரு. S. சிவராமன், பரசலூர் சங்கத்தில் உள்ள மேல்நிலைப் பள்ளிக்குட்பட்ட மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்கு பெரும் முயற்சி எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள்.

பரசலூர் ஸ்ரீ பாலாம்பிகை உடனுறை ஸ்ரீவீரட்டேஸ்வரர் திருக்கோயிலில் உழவாரப்பணி செய்வது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

கூட்டம் நடத்திய இல்லத்தாரால் அனைவருக்கும் இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது. குலுக்கலில் ஆண்களுக்கான பரிசை V. சிவக்குமார் பிள்ளையும், பெண்களுக்கான பரிசை திருமதி. G. பானுமதியும் பெற்றனர். திரு. S. சிவராமன் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

- V. கண்ணன், செயலர்.

Cell: 9894960438

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம், தலைச்சங்காடு

சங்க மாதாந்திர கூட்டம் 05–07–2022 அன்று சங்க தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே துவங்கியது. சங்க செயலாளர் திரு. R.K. ராஜசேகரன் அவர்கள் வரவேற்று பேசினார்.

தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள், சங்க குடும்ப உறுப்பினர்களின் மகன்/மகள் கல்லூரியில் புதிதாக சேர்ந்தாலோ/படித்துக்கொண்டு இருந்தாலோ, அவர்களுக்கு சென்னை மனித நேய அறக்கட்டளை மூலம் 2022–2023 ஆம் கல்வி ஆண்டிற்கு கல்வி உதவிதொகை பெற, நம் சங்கத்தில் உரிய விண்ணப்பம் பெற்று பூர்த்தி செய்து தருமாறு கேட்டுக்கொண்டார்.

சங்க வளர்ச்சி மற்றும் நிதி பற்றி ஆலோசனை செய்த பின், பொருளாளர் திரு. G. பாஸ்கரன் நன்றி கூற சங்கம் இனிதே நிறைவேறியது.

- B. இலட்சுமணன்,
தலைவர்.

விசலூர் :

சங்க கூட்டம் 13–07–2022 அன்று சிவன்கோயில் வளாகத்தில் தலைவர் பொன் சொக்கலிங்கம் பிள்ளை தலைமையில் செயலர். L. ராமசெல்வம் முன்னிலையிலும் இறைவணக்கத்துடன் தொடங்கி செயலர் அறிக்கை வாசிக்க பொருளர் வரவு–செலவு கணக்குகளை சொல்ல அக்கருத்தை கூட்டம் ஏற்றுக்கொண்டது.

எதிர் வரும் மாநில தேர்தல் குறித்து செம்பை ஒன்றியகூட்டம் கூட்டத்தில் கலந்து கொண்டு ஒற்றுமையுணர்வோடு பொருட்பாளர்கள் தேர்ந்தெடுக்கும் முடிவு எட்டபட்டு தேர்தல் களம் காணுவது என முடிவு செய்யப்பட்டது.

மாதாந்திர கூட்டத்தில் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சந்தாதொகை நல்கி வலு சேர்த்திடவும் இந்த மாத பௌர்ணமி உபயதாரர் சங்க துணைத்தலைவர் K. கார்த்திகேயன் பிள்ளை குடும்பத்தார்க்கு நன்றிகள் நவில கூட்டம் இனிதே சுபம் ஆனது.

L. பாபு(எ) ராமசெல்வம், செயலர்

9750806991

இராதா நல்லூர் :

சங்க கூட்டம் 15–5–2022, 12–06–2022 மற்றும் 10–7–2022 தேதிகளில் நடைபெற்றது. மே மாத கூட்டத்தில் மாரியம்மன் கோவில் தீமிதி விழா குறித்தும், கோவிந்தபுரம் திரு. பா. வேலாயுதம் பிள்ளை (வேளாண்மைதுறை) அவர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. ஜூன் மாத கூட்டத்தில் அமைப்புசெயலாளர் திரு. R.M.A. செல்வம் (எ) இராஜா முத்தையா – கலா இல்ல திருமண விழா மணமக்கள் இரா. வெங்கடேஸ்வரன் – சீ. புவனேஸ்வரிக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. சங்க வரவு செலவு கணக்குகளை பொருளர் திரு. மு. சீனுவாசன் எதிர்வரும் கூட்டத்தில் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது. ஜூலை மாத கூட்டத்தில் சங்க லெட்டர்பேடு அச்சிடவும் ஆலங்காடு புஞ்சை நில உழவடையை ரத்து செய்து கோவில் நிர்வாகம் செய்பவர் பொறுப்பில் ஏலம் விட்டு வரும் தொகையை பிரித்து ஸ்ரீ மாரியம்மன் கோயில் தீமிதி திருவிழாவை அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட கேட்டுக்கொள்ளப்பட்டு துணைதலைவர் மு. இராஜநாயகம் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

– தி. முத்துக்குமாரசாமி, தலைவர்.

9443645646

பூம்புகார்

இந்த மாதக் கூட்டம் செயலர் திரு. பரணீதரனுடைய இல்லத்தில் தலைவர் திரு. வரதராஜன் இறை வணக்கம் பாட 03.07.2022 அன்று நடைபெற்றது. தலைமை உரையில் தானம், தருமம் பற்றி கூறினார்கள்.

கல்வி உதவித் தொகை பெற விரும்புபவர்கள் ஜூலை 15–ம் தேதிக்குள் விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

செயலாலருடைய பெண் செல்வி நேத்ராவின் பிறந்த நாள் 04.07.2022 அன்று வருவதை முன்னிட்டு திரு. பரணீதரன் அவர்கள் தேநீர் விருந்தளித்தார். சங்க உறுப்பினர்கள் கரவொளியெழுப்பி செல்வி நேத்ராவிற்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர். சிற்றுண்டி அளித்த செயலர் திரு. பரணீதரனுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் பொருளர் திரு. ஜெயபாலன் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

M. பரணீதரன், செயலர், 94435 74217

கும்பகோணம் :

சங்கத்தின் 26–ம் ஆண்டு துவக்க விழா 17.07.2022 அன்று அபிமுகேஸ்வரர் ஆலய திருமண மண்டபத்தில் அறநெறி செல்வர் R. ஆனந்தன் இறைவணக்கத்துடன், மகளிர் அணியினர் திருவிளக்கு ஏற்ற திரு. T.M. வைத்தியநாதன் பிள்ளை அவர்கள் தலைமை தாங்கினார்கள். தலைமையுரையில் சங்க தொடக்கம் முதல் நிகழ்வுகளை நினைவு கூர்ந்தார்கள்.

புலவர். திரு. R. கல்யாணசுந்தரம் பிள்ளை, N. சுப்புராயன் பிள்ளை, V.R. சாமிநாதன் பிள்ளை, V. ரகுநாதன் பிள்ளை, MCSR. சம்பந்தம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வரவேற்புரை திரு. A.S பழனி பிள்ளை துணை செயலாளர் அவர்கள் வழங்கினார்கள். ஆண்டு அறிக்கையை திரு. S. விஜயகுமார் பிள்ளை அவர்களும், வரவு, செலவு கணக்கை திரு. V. சிவகுமார் பிள்ளை அவர்களும் சமர்ப்பித்தனர்.

திரு. திருக்கயிலாய ஸ்ரீ கந்த பரம்பரை ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் ஆதினம் வாமதேவ ஸ்ரீலஸ்ரீ மகாலிங்க பண்டார சன்னதி 28–வது குருமகா சன்னிதானம் அவர்கள் ஒதுவார் மூர்த்திகளுக்கு சங்கத்தின் சார்பில் பொற்கிழி வழங்கி சிறப்புரையாற்றி, ஆசி வழங்கினார்கள்.

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு தலைவர் திரு. KKR. சுரேஷ் அவர்கள் மாநில சங்கத்தின் செயல்பாடுகளையும் கும்பகோணம் சங்க செயல்பாடுகளையும் வாழ்த்தி தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கு சால்வை அணிவித்து மகிழ்ந்தார். கும்பகோணம் சைவ வேளாளர் சங்க தலைவர் திரு. K. ராஜராஜன் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். தொடர்ந்து பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. சென்னை கார்காத்தார் சங்க நூற்றாண்டு விழாவில் சங்கத்தின் சார்பில் அனைவரும் கலந்து கொள்வது எனவும் நூற்றாண்டு விழா மலரில் சங்க சார்பில் வாழ்த்து விளம்பரம் கொடுப்பது எனவும் நமது கார்குல மக்களின் நிறுவனங்களிலிருந்து விளம்பரம் பெறுவது எனவும், மாநில கூட்டமைப்பு சங்க தேர்தலில் கும்பகோணம் மண்டலம் சார்பாக திரு. S. விஜயகுமார் அவர்களை மாநில துணை சங்க பொறுப்புக்கு வேட்பாளராக தேர்வு செய்வது எனவும், கார்குல செம்மல் வள்ளல் திரு. S. வெங்கடேசம் பிள்ளை அவர்களின் 76வது பிறந்த நாளுக்கு பாராட்டி வாழ்த்துக்களை தெரிவிப்பது எனவும், மாநில சங்க கூட்டமைப்பு தேர்தலில் நமது சங்க பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு வாக்கு அளிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. மதிய உணவுக்குப்பின் மாணவ செல்வங்களின் பரதநாட்டியம், சிலம்பம், நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைப்பெற்றன. +1, +2 தேர்ச்சிப்பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. நிறைவாக M. சாமிநாதன் பிள்ளை துணை செயலாளர் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

- S. விஜயகுமார் பிள்ளை, செயலாளர்.

வருந்துகிறோம்

செம்பொன் ஒன்றிய சங்க செயலரும், செம்பொன் நகர சங்க தலைவருமான திரு. M.C.K. ராமநாதன் பிள்ளை அவர்களது தாயார் திருமதி. சகுந்தலா கிருஷ்ணமூர்த்தி பிள்ளை அவர்கள் 19–07–2022 அன்று செவ்வாய் சிவலோக பதவி அடைந்தார்கள். நிகழ்வில் செம்பொன் ஒன்றிய, நகர, கிராம சங்க பொறுப்பாளர்களும், உறுப்பினர்களும், அரசியல் பிரமுகர்களும், நண்பர்களும் கலந்து கொண்டு அம்மையார்க்கு அஞ்சலி செலுத்தினர்.

LLLLLLLLLLLLLLLLLLL

18.6.2022 அன்று மேனாங்குடி திரு. T. சண்முகம் பிள்ளை (DRO Retd) அவர்களின் துணைவியாரும், திரு. பாலகுமாரனின் தாயாருமான திருமதி. லஷ்மி அம்மாள் அவர்கள் சென்னையில் இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாரின் மறைவுக்கு அண்ணாநகர் கார்காத்தார் சங்கம் தனது இரங்கலை தெரிவித்துக்கொள்கிறது.

ஆடுர் வள்ளல் அமரர் **R. கனகசபை** பிள்ளையின் இளைய குமாரர்

கார்குலத்தின் ஆலமரம் அமரர் **R.K.S. பிள்ளை**யின்

ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர் **R.K. சிவக்குமார் பிள்ளை**

கீ.ஆடுர், சிதம்பரம்

என்றும் தங்கள் நினைவில் வாழும்

குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்

நண்பர்கள்

சிதம்பரம்

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்ந்தது
02.09.1960

உதிர்ந்தது
17.08.2020

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், T.நெடுஞ்சேரி
திருமிகு.S.வைத்திலிங்கம் பிள்ளை - தெய்வத்திருமதி சுப்புலெட்சுமி அம்மாள்
அவர்களின் இளையமகன்

தெய்வத்திரு. V. இராஜேந்திரன் B.Sc.,

கண் முன்னே வாழ்த்த காலம்
கனவாகிப் போனாலும்,
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்.
மண் விட்டு மறைந்து நீங்கள்
விண்நோக்கிச் சென்றாலும்,
கண் விட்டு மறையாமல்
காலம் காலமாய் இருப்பீர்கள்.

என்றும் நீங்காத நினைவுகளோடு....

சகோதரர்.
V.நடராஜன் - தையல்நாயகி
உரம், நெல், அரிசி வணிகம்.
T.நெடுஞ்சேரி,
சிதம்பரம் வட்டம்.

பேத்தி :
R.மேக்னா

திருமதி. **R.தங்கமலர்** (மனைவி)
மகள் - மருமகன் :
R.அகல்யா B.E.,-**இராமலிங்கம்** B.Tech.,
R.அஞ்சனா B.E.,
R.அனிதா B.E.,

ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்
02–11–1944

மறைவு
31–08–2017

திரு. **கு. இராமலிங்கம் பிள்ளை** அவர்கள்
(திமுக செயலாளர். மு.ஊ.ம.து. தலைவர்)
கொங்கராயன் மண்டபம் – நெடுவாசல்.

உறவுகளை அறவணைத்து உயரிய குணமுடையவராய் வாழ்ந்து அனைவரையும் அன்பால் கவர்ந்தவர்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்

மனைவி	**இரா. சிவகாமசுந்தரி**
மகன்	**இரா. பாண்டியன் - சாந்தி,** சேலம்
பேத்திகள்	**செல்வி பா. பிரியதர்ஷினி - செல்வி பா. பாரதி**
மகள்கள்	**இந்திரா - நெடுஞ்செழியன்,** கோயம்புத்தூர்
	சித்ரா - கண்ணன், வரிச்சிகுடி
	சுதா - முத்துக்குமார், கீழையூர்
	லதா - சீனிவாசன், திருச்சி
பேரன்கள் – பேத்திகள்	**ஹரிகரசுதன் - அபிநயா**
	பரணிதரன், அபிநயா - முத்துக்குமார், அசிகா
	அஜய்குமார் - சிவகார்த்திகேயன்

முதலாமாண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15.06.1932

மறைவு
27.05.2021

மு.சி. இராதாகிருஷ்ணன், M.A., B.Sc., M.Ed.,

தேத்தாக்குடி தெய்வத்திருவாளர்கள்

சிங்காரம் பிள்ளை – ராசாம்பாள் ஆகியோரின் புதல்வர்.

முன்னாள் தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளிகள்,

விருத்தாசலம்–வைத்தீஸ்வரன் கோவில்.

தங்கள் நினைவில் வாழும்

மனைவி : **R. திரிபுரசுந்தரி**

மகன்கள் :

Dr. R. **ராஜசேகர்**
சுமதி ராஜசேகர்
Dr. **தீபதி-சோம்நாத்**
ஷ்ண்மதி - ஸ்ரீநிவாசன்

R. **ராஜகுமார்,**
கீதா ராஜகுமார்
அம்ரிதா - விஸ்வேஸ்வரன்
அஷ்வின் (கொள்ளுபேரன்)

தொடர்பு 9381034603

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
10–01–1936

மறைவு
01–06–2022

P. வாகீசன், M.A., M.Ed., D.P.Ed.,

(Physical Director (Retd.), Govt. College of Education, Vellore.)
ஸ்ரீ சாரதா வித்யாலயா ஆரம்ப பள்ளி மற்றும்
ஓம் சக்தி வினாயகர் கோயிலை வேலூரில் தோற்றுவித்தவர்கள்

கடலூர் மாவட்டம், சிதம்பரம் தாலுக்கா எண்ணநகரம் தெய்வத்திருவாளர்கள். பிச்சப்பிள்ளை–கௌரி அம்மாள் அவர்களின் மகனும், தெய்வத்திருமதி. சரோஜா அம்மாள் அவர்களின் கணவரும், எங்களது அன்பு தந்தையுமான திரு. P. வாகீசன் பிள்ளை அவர்கள் 01.06.2022 இரவு 8 மணியளவில் சிவலோகப் பதவியை அடைந்தார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.
அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

தங்கள் நினைவில் வாழும்.

மகன்கள் குடும்பத்தினர்

V. குஞ்சிதபாதம்
K. சுமதி
K. ஷ்யாம் சந்தர் (USA)
S. சித்ராதேவி (USA)
S. அத்விக் (USA)
S. ஆரவ் (USA)
Cell no. 9840985237

V. சிவகுமார்
S. கோதை
S. தில்லை நடராஜன்
Cell no. 8667783715

மகள் குடும்பத்தினர்

M. விஜயலட்சுமி
M. மணிவண்ணன்
M. சுஷ்மிதா
Cell no. 7032301972

கண்ணீர் அஞ்சலி

தோற்றம் :
01.07.1938

மறைவு
18.06.2022

திருமதி. **S.லெட்சுமி** அவர்கள்

மேனாங்குடி

தெய்வத்திரு. **T.சண்முகம் பிள்ளை** (Retd DRO) அவர்களின்

துணைவியாரும், எங்களது தாயாருமாகிய

திருமதி. **S.லெட்சுமி** அவர்கள்

18.06.2022 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில்
இறைவனடி சேர்ந்தார்கள்.
அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

எங்களது துயரத்தில் பங்கேற்ற அனைத்து உறவினர்கள் மற்றும்
நண்பர்கள் யாவருக்கும் எங்களது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

பிரிவினால் வருந்தும்.

S.Balakumar
B.Manimegalai
B.Vignesh
M.Madhumitha
Cell : 9282102008

R.Vasuki
R.Ramanathan
R.Sivakumar
S.Sridevi
S.Avyukt
S.Tanishi

R.Senthil
T.Thannoli
S.Ishan
S.Ibhan

S.Ramaswamy
R.Hemalatha
R.Sivashanmugam
Cell : 9962466166

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
16.10.1953

மறைவு
20.06.2022

திருமதி. ந. சரஸ்வதி அவர்கள்

திருமணஞ்சேரி,
தெய்வத்திருவாளர்கள். T.A. இராமலிங்கம்பிள்ளை -
திரிபுரசுந்தரி இவர்களின் மகளும், கானாட்டு முள்ளூர்,
தெய்வத்திருவாளர்கள் D. முத்துக்குமரசாமிபிள்ளை - சௌந்தரநாயகி
இவர்களின் மருமகளும் மயிலாடுதுறை,
பாலாஜி நகர், திரு. M. நடராஜன் (பேராசிரியர் ஓய்வு)
அவர்களின் அன்பு மனைவியுமாகிய
திருமதி. ந. சரஸ்வதி அவர்கள் 20.06.2022 திங்கட்கிழமை
சிவலோகபதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன்
தெரிவித்துக்கொள்கிறோம்.
அன்னாரின் இழப்பு ஈடு செய்ய இயலாத பேரிழப்பாகும்.

உடலால் மறைந்தாலும் என்றும் எங்கள்
உள்ளங்களில் புன் சிரிப்பாலும்
எங்கள் எண்ணங்களில் உன் எழுத்துக்களாலும்,
எங்களுடன் வாழ்ந்துகொண்டே இருப்பாய்....

இவண்
அன்பு கணவர்
திரு. M. நடராஜன் (பேராசிரியர்)

மகள் : N. நிர்மலா
மருமகன் : G. கல்யாண்
பேத்தி : மேகா கல்யாண்

மகள் : N. நிஷாந்தி
மருமகன் : G. வெங்கடேஷ்
பேத்தி : மீரா வெங்கடேஷ்

முதலாமாண்டு நினைவஞ்சலி

தோற்றம்
17.01.1963

மறைவு
11.08.2021

திருமதி **"வளர்மதி மதிவாணன்"** என்கிற **"மது"**

பொறுமையின் சிகரமாய், அமைதியின் உறைவிடமாய்
ஆசையின்மையின் உதாரணமாய், அன்பின் இலக்கணமாய்
மற்றவர் தவற்றை உடன் மறந்து, உற்றார் உயர்ந்திட தினம் உழைத்து
எப்போதும் நேர்மறை வாக்குடன்,அனைவருடன் அக்கறை நோக்குடன்
எல்லோர்க்கும் உதவும் போக்குடன், என்றும் மனநிறைவு நிலையுடன்
எம் இல்லத் திருமகளாய் திகழ்ந்த, எம் குல விளக்காய் ஒளிர்ந்த
"மது" என்கிற **"வளர்மதி"**

நெஞ்சிருக்கும் வரை உந்தன் நினைவிருக்கும்

Commodore **மதிவாணன் சிவப்பிரகாசம்** (கணவர்) Indian Navy (Retired) சென்னை

சாய் ப்ரணவ் மதிவாணன் (மகன்) Samsung Research Institute பெங்களூரு

காவ்யாஸ்ரீ சாய் ப்ரணவ் (மருமகள்) WIPRO பெங்களூரு

சுலோச்சனா நாகராஜன் (தாயார்) மயிலாடுதுறை

நா ரவீந்திரன் (அண்ணன்) **குடும்பத்தினர்,** மைசூர்

சி புகழேந்தி (கொழுந்தனார்) **குடும்பத்தினர்,** சென்னை

கலைச்செல்வி பிரபாகரன் (நாத்தனார்) **குடும்பத்தினர்,** சென்னை

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month **15th / 16th August 2022**

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

Published by : K. SHANMUGAM, on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**